


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லோயா குடியேற்றத் திட்டத்தில் 11ம் கிராமம்

தம்பிராசா கணேசமூர்த்தி

வெளியீடு
பழைய மாணவர் சங்கம்
சது / றாணமடு இந்துக்கல்லூரி
11ம் கிராமம், மத்தியமுகாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அளவை


| | | |
|---|---|---|
| தலைப்பு | - | கல்லோயா குடியேற்றத்திட்டத்தில் 11ம் கிராமம் |
| ஆசிரியர் | - | த. கணேசமூர்த்தி |
| உரிமை | - | நூலாசிரியர் |
| அட்டை வடிவமைப்பு | - | த. திருச்செல்வம் |
| கணனித் தட்டச்சு மற்றும் அச்சுப்பதிப்பு | - | கோல்டன் அச்சகம் |
| வெளியீடு | - | பழைய மாணவர் சங்கம் சது/றாணமடு இந்துக்கல்லூரி |
| முதற்பதிப்பு | - | 2022 - 12 - 16 |
| பிரதிகள் | - | 500 |
| பக்கங்கள் | - | 137 |
| விலை | - | 900.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலில்....


சமர்ப்பணம்....................................................................................00
ஆசிச்செய்தி....................................................................................I
ஆசியுரை....................................................................................III
வெளியீட்டுரை....................................................................................IV
சான்றுரை....................................................................................V
அணிந்துரை....................................................................................X
வாழ்த்துச் செய்தி....................................................................................XII
கல்லோயா குடியேற்றமும் 11ம் கிராமத்தின் வரலாறும்....................XIV
சிறந்த துணிச்சலான அர்ப்பணிப்பு....................................................XVI
வாழ்த்துகிறேன்....................................................................................XVII
வாழ்த்துரை....................................................................................XIX
என்னுரை....................................................................................XX
துறைநீலாவணைத்தாயகம்....................................................................................01
புளியடிப்பிள்ளையார் ஆலயத்தின் வரலாறு....................................................04
பத்தினி கண்ணகி அம்மன் ஆலய வரலாறு....................................................20
ஸ்ரீ முருகன் ஆலய வரலாறு....................................................................................31
இலுப்பைக்குள மாணிக்கப்பிள்ளையார் ஆலய வரலாறு....................................38
ஆரம்ப குடியேற்ற வாசிகள்....................................................................................41
கரப்பந்தாட்டம்....................................................................................48
நாட்டுக்கூத்து....................................................................................55
மேடைநாடகங்கள்....................................................................................58
அரசியல்....................................................................................61
அரச தொழில்கள்....................................................................................67
நாணயங்கள்....................................................................................69
றாணமடு இந்துக்கல்லூரி....................................................................................73
புதிய பாடசாலைகளின் தேற்றம்....................................................................................84
மின்சாரம்....................................................................................85
பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்....................................................................................87
பிரபல்யங்கள்....................................................................................89
வம்மியடிக் கவிஞனின் கவிதைகள்....................................................................................93
ஆக்கத்துக்கு உதவியவை....................................................................................108



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

**எனது தாய் தந்தையர்களான**

**11 / 51ம் இலக்க வீட்டை சேர்ந்த**

**திரு. இராமக்குட்டி தம்பிராசா,**

**திருமதி. பொன்னையா சின்னப்பிள்ளை**

**ஆகியோருக்கும், ஏனைய குடியேற்ற**

**வாசிகளான 165 குடும்பத்தலைவன்,**

**தலைவியர்களுக்கும்**

**இந்நூல் சமர்ப்பணம்**

**த. கணேசமூர்த்தி** J.P
துறைநீலாவணை-08.
நூலாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

கல்லோயாத்திட்டத்தில் 11ம் கிராமம் எனும் இந் நூலானது 11ம் கிராமம் எவ்வாறு உருவாகியது என்பது பற்றியும், இக்கிராம உருவாக்கத்தின் தாயமாகக் காணப்பட்ட துறைநீலாவணைக் கிராம மக்கள் பற்றியும், அவர்களது வாழ்க்கை முறை பற்றியும், துறைநீலாவணையிலிருந்து குடியேற்ற கிராமங்களுக்கு செல்வதற்காக மக்கள் பயன்படுத்திய பிரயாண முறைகள் பற்றியும் மிகத் தெளிவாக அனைவருக்கும் விளங்கக்கூடிய மொழி நடையில் விளக்கிக் கூறியுள்ளார்.

மேலும் கோயில்களின் வரலாறு குறிப்பாக படர்கல் பத்தினியம்மன் ஆலய வரலாறு, புளியடிப்பிள்ளையார் ஆலய வரலாறு, மத்தியமுகாம் ஸ்ரீ முருகன் ஆலய வரலாறு, இலுப்பைக்குளம் மாணிக்கப்பிள்ளையார் ஆலய வரலாறு போன்றவற்றை மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார். அதாவது இவ் ஆலயங்களை நிறுவியவர்கள் பற்றியும் ஆரம்ப காலத்திலிருந்து தற்போதுவரை இவ் ஆலயங்களின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த அரும்பாடுபட்டவர்கள் பற்றியும் தற்காலத்தவர்கள் விளங்கிக் கொள்வதற்காக விளக்கமாகக் கூறியுள்ளார்.

அத்துடன் 1978ம் ஆண்டு இடம்பெற்ற சூறாவளி இயற்கை அனர்த்தம் பற்றியும் மேலோட்டமாக குறிப்பிட்டுள்ள நூலாசிரியர் 11ம் கிராமத்தில் தற்காலத்தில் சகல வளங்களையும் நாகரீகமான ஆடம்பர வாழ்க்கை முறைகளையும் அனுபவித்து வருகின்ற இளம் சமூகத்தினருக்கு தங்களது மூதாதையர்கள் எவ்வாறான துன்ப துயரங்களை அனுபவித்து இரவு பகல் பாராது உழைத்து சிறந்த முறையில் ஆண்டு அனுபவிப்பதற்கு வழிசமைத்த விடயங்களை மிக அழகாகக் குறிப்பிட்ட ஆசிரியர் இக்கிராமத்தில் ஆரம்ப காலத்தில் குடியேற்றம் செய்யப்பட்டு வாழ்ந்து வந்தவர்கள் பற்றி பிரிவு வாரியாக பெயர் விபரங்களுடன் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் எனும் நோக்குடன் விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

மேலும் அக்கால குடியேற்றத்திட்டத்தில் வாழ்ந்த இளைஞர்கள் எதற்கும் சளைத்தவர்களல்ல என்பதனை விளக்குவதற்கு நூலாசிரியர் அக்கால இளைஞர்களின் விளையாட்டுத்திறமை பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார். அவர்களுக்கு கரப்பந்தாட்டத்தில் இருந்த ஆர்வம் அவர்கள் பிரதேச மற்றும் மாகாண ரீதியில் பங்கு பற்றி விளையாடி வந்தமை மூலமாக அறியக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் தற்காலத்தில் எமது பிரதேசத்தில் அருகி மறைந்து, மறந்து வந்துள்ள கலையான நாட்டுக்கூத்து அக் காலத்தில் எவ்வாறு பிரபல்யமடைந்து காணப்பட்டது என்பது பற்றியும் குறிப்பிட்டுள்ளார். உண்மையிலேயே நமது மூதாதையர்கள் பள்ளிக் கல்வி கற்றது குறைவாக இருந்தாலும் எமது புராண, இதிகாச வரலாற்றுக் கதைகளை கூறுவதில் பூரண அறிவுடையவர்களாக காணப்பட்டனர். அதற்குக் காரணம் இவ்வாறான மேடை நாடகங்களும், கூத்துக்களுமே! அக் கலைஞர்கள் தாங்கள் கூறவந்த விடயத்தை பாமர மக்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் தத்ரூபமான முறையில் விளங்கவைப்பார்களாம். இதனால் மக்கள் அவற்றை இலகுவில் புரிந்து கொள்வது மட்டுமல்லாது அவர்களது மனதில் என்றும் நிலைத்து அழியாது காணப்படும்.

இக் கிராமத்தில் எந்தவிதமான அடிப்படை வசதிகளற்ற காலத்தில் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் கல்வி கற்று அரச தொழில் புரிந்தவர்கள் பாராட்டுக்குரியவர்கள் என்பதுடன் அவர்கள் பற்றி தற்காலத்தவர்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமானது என்பதற்காக அவர்களது பெயர் விபரங்களை வெளியிட்டுள்ளதுடன். அதே சமகாலத்தில் வாழ்ந்து மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கிய விஷவைத்தியம், நாட்டுக்கூத்து, சோதிடம், ஏனைய கலைகளில் மிளிர்ந்தவர்கள் தொடர்பாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நூலாசிரியர் இந்நூலை மிகுந்த சிரமங்களக்கு மத்தியில் தனது கன்னி முயற்சியாக வெளியிடுகின்றார். இது இவருக்குள்ள சமூகத்தின் மீதான அக்கறையும் தமது பாரம்பரியங்கள், வழக்காறுகள் என்பவற்றை இக்கால இளம் சமூகத்தினர் அறிந்திருக்க வேண்டுமென்ற ஒரு பரந்த நோக்கோடு இந் நூலை வெளியிட்டுள்ள எழுத்தாளரின் எதிர்கால நல் வாழ்விற்கு எனது நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் எதிர்வரும் காலங்களில் இதுபோன்ற ஆக்கங்களை மென்மேலும் வெளியிட்டு ஒரு சிறந்த எழுத்தாளராகும் பாக்கியம் கிட்ட வேண்டுமெனவும் பிரார்த்தனை செய்வதுடன் நல்லாசியையும் தெரிவுத்து கொள்கின்றேன்.

**இரத்தினசபா – சசிஜயா,**
ஸ்ரீ தில்லையம்பலம் பிள்ளையார் ஆலயம்,
துறைநீலாவணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

வீரம் விளைந்த மண் துறைநீலாவணையின் பூர்வீக குடிமக்கள் தமது விவசாயத்தொழிலை அடிப்படையாகக் கொண்டு அருகாமையிலிருந்த மட்டக்களப்பு வாவியைக் கடந்து அப்பாலிருந்த வனங்களை அழித்து வளமாக்கி நெற்செய்கை, சேனைப்பயிர், கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்களில் ஈடுபட்டதன் மூலம் அப்பகுதியிலேயே குடியேறி தமது நிரந்தர வசிப்பிடமாக்கிக்கொண்ட மக்களின் வரலாற்றுப் புதையல் தான் இந்த நூல் ஆகும்.

இப் பிரதேசத்தில் இன்றைய காலகட்டத்தில் பிரபல்யமாக விளங்கும் ஆலயங்களின் தல வரலாறுகளை மிகவும் சிறப்பாக அதன் தோற்றம், அக்கால பூசை முறைகள், நிர்வாக நடைமுறைகள் ஆலயங்களின் அமைப்புக்கள் ஆற்றிய பங்களிப்பக்கள் என்பவற்றை எடுத்துக் காட்டியுள்ளதுடன் அப்போது அங்கிருந்த இளைஞர்களின் விளையாட்டுத்துறை மேம்பாடு, கலை இலக்கிய நிகழ்வுகளான நாட்டுக்கூத்து, நாடகங்களின் சிறப்பியல்புகளையும், தற்கால அரசியல் நிலமைகளையும் தொட்டுச்சென்று அனைத்து விடயங்களுக்கும் ஆதாரங்களை சுட்டிக்காட்டி இருப்பது ஆசிரியரின் கூற்றுக்கள் நிழலல்ல நிஜங்கள் என்பதை சான்று படுத்துகின்றது.

அத்துடன் இந்தநூலின் பின்னிணைப்பு எமது பின்னவர்களுக்கு பிரயோசனமாக அமையும் என்பதுடன், நூல் ஆசிரியர் அவர்கள் இப்பிரதேசத்தில் தமிழரசுக் கட்சியின் தலை சிறந்த பற்றாளர் ஆவார். அன்னார் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து பயனுள்ள பல நூல்களை ஆக்கி மறைந்துள்ள எமது மாண்புகளை வெளிக்கொணர வேண்டும் என இறைவனை பிரார்த்தித்து இந்நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமிதமடைகின்றேன்.

**தவராஜா கலையரசன்**
பாராளுமன்ற உறுப்பினர்
அம்பாறை மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

1952களில் கல்லோயா குடியேற்றத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பதினொரம் கிராமத்தின் ஆரம்ப வரலாறு பற்றி நம் முன்னோர்களிடம் கேட்டறிந்தே அறியமுடிந்தது. இருப்பினும் இக்கிராம மக்களின் தொன்மை தொடர்பாக இதுவரை எந்தவித நூல்களும் வெளிவராத நிலையில் திருவாளர் தம்பிராசா கணேசமூர்த்தி அவர்களின் அயராத முயற்சியின் பயனாக கல்லோயா குடியேற்றத்திட்டத்தில் 11ம் கிராமம் என்னும் நூல் வெளிவருகின்றது.

துறைநீலாவணைக் கிராமத்தை பூர்வீகமாகக்கொண்டு வாழ்ந்த சீர்பாதகுல மக்கள் தம் வாழ்வியலை வளப்படுத்தும் வகையில் இற்றைக்கு எழுபது வருடங்களுக்கு முன்பு பதினொராம் கிராமத்தில் குடியமர்த்தப்பட்டனர். இவர்களுள் இந்நூலாசிரியரின் பெற்றோர்களும் அடங்குவர். அக்காலம் தொட்டு இக்காலம் வரை இச் சமூகத்தைச் சார்ந்தவர்கள் தனித்துதுவமான மேம்பட்ட மக்களாக வாழ்ந்த வரலாற்றை இந்நூலின் மூலம் நூலாசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

நுலாசிரியர் அவர்கள் தமது ஆர்வம், ஈடுபாடு காரணமாக இம்முயற்சியில் பல வருடங்கள் தேடலை மேற்கொண்டார். இயன்றளவு தம் மூதாதையர்கள், மற்றும் நண்பர்கள் அன்பர்கள் அத்தோடு தான் இந்த கிராமத்தில் வாழ்ந்த காலப்பகுதியில் பெற்ற அனுபவங்களையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு இம்மக்களின் கல்வி, கலாச்சாரம் பண்பாட்டுச் சிறப்புக்களை தனித்தனி தலைப்புக்கள் மூலம் விளக்க முயற்படுகின்றார்.

இந்நூல் வெளியீடானது நூலாசிரியரின் கன்னி முயற்சிக்கான வெற்றிப்படியாக அமைவதோடு, எதிர்கால சந்ததிக்கு அறிவையும் ஆர்வத்தையும் தூண்டுவதாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலாக்கத்தில் பதிப்பாசிரியருக்கு பல்வேறு வழிகளிலும் ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொண்டு இப்பதிப்பை வெளியிடுவதில் கமு/சது/றாணமடு இந்துக்கலூரியின் பழைய மாணவர் சங்கம் பெருமிதமடைகின்றது.

**பழைய மாணவர் சங்கம்**
கமு/சது/றாணமடு இந்துக் கல்லூரி
மத்தியமுகாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சான்றுரை

நாவிதன்வெளிப்பிரதேசத்தில் அன்னமலை, நாவிதன்வெளி, சவளக்கடை, சொறிக்கல்முனை போன்ற கிராமங்கள் பல நூறு வருடங்கள் வரலாற்றைக் கொண்ட கிராமங்களாகும். அதில் ஏனைய தமிழ், முஸ்லீம் கிராமங்கள் 70 வருடங்கள் கொண்டவை. அதில் ஒன்றுதான் 11ம் கிராமம். இப்பிரதேசத்தில் பலநூறு வருடங்களைக் கொண்ட கிராமங்கள் சம்மந்தமாகவும் ஆற்றுப்பள்ளத்ததாக்கு அபிவிருத்திசபையினால் குடியேற்றப்பட்ட குடியேற்றக் கிராமங்களின் வரலாறுகளும் இதுவரை எழுத்துருப்பெற்ற வரலாற்று நூலாக வெளிவந்ததை நான் அறியவில்லை.

தம்பிராசா கணேசமூர்த்தி அவர்கள் துறைநீலாவணையில் பிறந்து 11ம் கிராமத்தில் குடியேறியவர்களில் ஒரவர். இவர் படித்துப் பட்டம் பெற்ற பேராசிரியரும் இல்லை. இவர் தன்னை வளர்த்த தான் வளர்ந்த மண்ணின் வரலாற்றை எழுத முன்வந்த போது இவரால் எழுத முடியுமா என்ற கேள்விகளை எழுப்பிய அவருடைய நண்பர்கள் பலபேர் இருக்கின்றார்கள். ஆனால் உன்னால் எழுத முடியும் எழுது என்று ஊக்கமளித்த சில நண்பர்களும் இருந்தார்கள் என்பதை நான் குறிப்பிட்டாகத்தான் வேண்டும்.

வரலாற்று நூல், நாவல், சிறுகதை, கவிதை, ஆராய்ச்சிக்கட்டுரை என்று பலவகை எழுத்தாக்கங்கள் இருப்பதை நாம் அறிவோம். அவற்றை எழுதுபவர்கள் எழுத்தாளர்கள். தன் கிராமத்தை நேசித்தவர் அதனால் அதன் வரலாற்றை எழுதவேண்டுமென்ற வைராக்கியம் அவரை எழுத்தாளன் ஆக்கியது.

நாவல், சிறுகதை போன்றவை கற்பனையில் எழுதிவிடலாம் அவற்றில் எவரும் பெரிதாக பிழைகண்டு பிடிக்க முடியாது. ஆனால் வரலாற்று நூல்களை கற்பனையில் எழுதிவிட முடியாது. கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஏட்டுச்சுவடிகள் போன்றவற்றைப் படித்து அத்தோடு உசாத்துணை நூல்களையும் ஆராய்ந்த பின் வரலாற்று நூலை எழுதமுடியும். அவை எதுவுமே இல்லாத இக் கிராம வரலாற்றை எழுத முன்வந்த கணேசமூர்த்தியவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

எழுதுவதற்காக பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து அவர்களிடமிருந்து தகவல்களைப் பெற்று அதன் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திய பின்பே எழுதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியிருக்கிறார் எழுத்தாளர். இதில் இன்னொரு துர்ப்பாக்கியம் என்னவென்றால் இவர் எழுதத் தொடங்கும் போது ஆரம்பகாலக் குடியற்றவாசிகளில் பெரும்பாலானோர் மரணித்துவிட்டதும் இவருடைய எழுத்துக்குச் சவாலான ஒரு விடயமாகும்.

இவர் தன்னுடைய எழுத்தில் மத்தியமுகாமுக்கு செல்லும் போது சூரப்பத்தைகள் மூழ்கிக்கிடக்கும் அதன் புதர்களுக் ஊடாகத்தான் வைத்தியசாலை, பொலிஸ் நிலையத்திற்கு செல்வார்கள். அப்போது காட்டு விலங்குகள் மனிதர்களைக் கண்டு வெருண்டோடும் காட்சிகள் இற்றைக்க 65-70 வருடங்களை மத்தியமுகாமின் நிலையப் படம் பிடித்துக் காட்டுகின்றார். அந்த மத்தியமுகாம் ( சென்றல் கேம் ) என்பது இப்பிரதேசத்தில் எல்லோராலும் பேசப்படுகின்ற இடமாகும். இதற்கு மத்தியமுகாம் என்பது ஒரு காரணப்பெயராகும். கல்லோயாக் குடியேற்றத்திட்டத்தின் போது மக்களைக் குடியேற்ற வீடுகள் அமைக்கப்படும் போது அவ் ஒப்பந்தக்காரர்களால் இந்த இடத்தில் தான் பொருட்கள் சேகரிக்கப்பட்டு ஏனைய இடங்களுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டதனாலேயே இதற்கு மத்தியமுகாம் (சென்றல் கேம்) என பெயர் உருவானது. இன்று இப் பிரதேசத்தில் சிறு நகராகத் திகழும் மத்தியமுகாமின் அன்றைய நிலையை எழுத்தாளர் தெளிவாக எடுத்துக்கூறுகிறார். முக்கியமான இடமான சென்றல் கேம்ப் அப்படியிருந்தால் ஏனைய கிராமங்கள் எவ்வாறு இருந்திருக்கும் என்பதை வாசகர்களுக்கு எடுத்துக்கூறவேண்டிய அவசியமில்லை ஆனால் இக்கிராமத்தில் இன்று வசிப்பவர்கள் தார் வீதிகளில் பயணிக்கின்றனர். ஊரைச்சுற்றி பஸ் ஓடுகின்றது. மின்சாரம், தண்ணீர் வசதி அனைத்தும் பெற்று சிறப்பான வாழ்க்கையை வாழ்கின்றனர். இவ்வாழ்க்கையை உங்களுக்களித்த எமது மூதாதையர்களின் உழைப்பையும் இக்காலச்சந்ததி மறந்துவிடக்கூடாது என்பது எழுத்தாளரின் கருத்தாகும் என்பது தெளிவாகின்றது.

இப்போது இந்துக்கல்லூரியாக இருக்கும் அந்தக் கால றாணமடு அ.த.க. பாடசாலையின் நிலையைக் கூறும் போது பாடசாலை இடைவெளி நேரத்தில் பணிஸ் சாப்பிட்டுவிட்டு நீரருந்தச் செல்லும்போது பாடசாலைக் காட்டிற்குள் பழுத்து நிற்கும் கிளாக்காய், சூரங்காய் போன்றவற்றை பறித்துச் சாப்பிடுவதற்காக காட்டிற்குள் புகும் போது அங்கு பதுங்கியிருக்கும் காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி போன்றவை எங்களைக் கண்டு ஓடுவதும், அவற்றை நாங்கள் துரத்திச் செல்வதும், பாடசாலை மணி அடித்ததும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறைக்கு முண்டியடித்து செல்வதும் பிந்திப்போய் ஆசிரியரிடம் அடிவாங்கிக் கட்டுவதுமான இற்றைக்கு 65-70 ஆண்டுகளுக்கு பின்னோக்கி சென்று பசுமையான நினைவுகளை ஞாபகப்படுத்திச் செல்கின்றார் எழுததாளர்.

இந்தப் பெரிய இளந்தாரி அம்மாட முந்தானையைப் பிடிச்சிட்டுத் திரிவது வெட்கமில்லையா என்று அவருடைய மாமிமார்கள் கேட்டதாக ஒரு இடத்தில் குறிப்பிடுகிறார் எழுத்தாளர். இதில் சுவாரசியம் என்னவென்றால் அந்தக்காலத்தில் தாய் எங்கு சென்றாலும் அவருடைய இளையபிள்ளை தாயின் பின்னாலேயே செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும் போது தாயின் சேலையின் முந்தானையைப் பிடித்துக் கொண்டுதான் பின்னால் செல்வார்கள். அந்தப் பழக்கம் இப்போது அருகிவிட்டது. ஏனென்றால் இப்போது தாயின் பின்னால் பிள்ளைகள் செல்வதில்லை அவர்கள் ரியுசன் வகுப்பில் இருப்பார்கள் அவ்வாறு செல்வதாக இருந்தால் பிள்ளை பிடிப்பதற்கு முந்தானை இல்லை தாய் சட்டை அணிந்திருப்பார்.

எழுத்தாளர் ஓரிடத்தில் அக்காலத்தில் காத்தாடி (காவுதடி) என்றுதான் பேச்சு வழக்கில் கூறுவார்கள். இது சமுழ மரத்தால சிலாகை வடிவில் செய்யப்பட்டிருக்கும். 5-6 அடி நீளமுள்ளது. இரு நுனிகளிலும் தடை போடப்பட்டிருக்கும். அதில் கட்டப்படும் சுமைகள் வழுகி விழாமல் இருப்பதற்காக இந்தத்தடையை போட்டிருப்பார்கள். அந்தக்காலத்தில் 10 மரைக்கால் நெல்லைக் கொண்ட சாக்கை ஒரு சாக்கு நெல் என்று அழைப்பார்கள். ஒரு சாக்கு நெல் சுமார் **50KG** நிறை கொண்டதாக இருக்கும். காத்தாடியின் (காவுதடி) இருநுனிகளிலும் இரண்டு சாக்குகளைத் தொங்கவிட்டுக் கட்டி தோளில் தூக்கி வைத்து நடந்து செல்வார்கள். நடந்து செல்லும் போது நெல்லுச் சாக்குகள் நிலத்தில் படும்படி காவுதடி வளைந்து கொடுக்கும். காத்தாடியை தோளில் வைத்து சுமையை சுமந்து செல்லும் போது அவர்களுடைய நடை வேகமாக இருக்கும். இது எவ்வாறென்றால் சுமை பதிந்து மீண்டெழும் போது பாரமும் குறைந்து அவர்களின் நடையை வேகமாக்கும் ஒரு நுட்பமே காத்தாடியாகும். இப்போதுள்ள சந்ததிகளுக்க இதைப்பற்றி தெரியாமல் இருந்தாலும் நம் முன்னோரின் தொழில் நுட்பங்களை புதிய சந்ததியினர் அறியவேண்டு மென்பதற்காகவே எழுத்தாளர் இதைச் குறிப்பிடுவது வரவேற்கத்தக்கதாகும்.

படுவான்கரை எழுவான்கரையென்ற வழக்கம் இப்போதும் வழக்கிலுண்டு. மட்டக்களப்பு வாவியின் கிழக்குப் புறமாக அமைந்திருக்கம் பகுதியை எழுவான்கரையென்றும் மேற்குப்பபுறமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருக்கும் பகுதியை படுவான்கரை என்றும் அழைப்பார்கள். படுவான்கரையான் என்று ஏளனமாக பேசுவதும் உண்டு. இந்த படுவான் கரையில்தான் 1952ம் ஆண்டு குடியேற்றத்திட்டம் அமைக்கப்பட்டு குடியேற்றப்பட்டார்கள். அவர்களை கொளனிக்காரன் என்றும் அழைப்பார்கள். கொளனிக்காரன் என்றால் படிக்காதவன் பட்டிக்காட்டான் என்று இளக்காரமாக பார்த்தகாலம் உண்டு. அவையெல்லாம் தற்போது மாறி எழுவான் கரைக்குச் சமனாக இக்கிராமம் நிமிர்ந்து நிக்கின்றது. இது எவ்வாறு வளர்ச்சி பெற்றது என்பதை எழுத்தாளர் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். இது தற்கால இளைஞர்களும் எதிர்காலச் சந்ததியினரும் சிந்தித்துச் செயற்பட வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுகின்றனர். அவ்வாறு சிந்திக்கின்ற இளம் தலமுறையினருக்கு நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகின்றேன். சட்டத்துறையிலும், வர்த்தகத்துறையிலும் நம்மாணவர்கள் ஆர்வம் காட்டுவது குறைவாக இருக்கின்றது. 1990ம் ஆண்டு எமது கிராமத்திலிருந்து ஆ. ஜினேந்திரன் அவர்கள் சட்டத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டாலும் அக்கால சூழ்நிலை அவரை அத்துறையில் கல்வியை தொடரமுடியாமல் தடுத்துவிட்டது. எனவே எதிர்காலத்தில் இத்துறையில் மாணவர்களை வழிநடத்த வேண்டும்.

இந்நூல் இக்கிராம வரலாற்றில் ஒரு நடுகல் எதிர்காலத்தில் இக்கிராம வரலாற்றை ஆய்வு செய்பவர்களுக்கு ஒரு வழிகாட்டும் நட்சத்திரமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. இந்நூலைத் துணிச்சலுடன் எழுதத் தொடங்கி வெற்றிவாகை சூடியுள்ள திருவாளர் தம்பிராசா கணேசமூர்த்தி அவர்களை நான் வெகுவாகப் பாராட்டுவதோடு மேலும் அவர் எழுதவேண்டுமென ஆண்டவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**ஆறுமுகம் விநாயகம்பிள்ளை**
(ஓய்வுநிலை கோட்டக்கல்வி அதிகாரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

திரு. தம்பிராசா கணேசமூர்த்தி அவர்களின் அரிய படைப்பு கல்லோயா குடியேற்றத் திட்டத்தில் 11ம் கிராமம் என்னும் வரலாற்றுப் பதிவு நூல். அண்மைக் காலங்களில் தத்தமது கிராமம் தொடர்பான நூல்கள் பல வெளிவந்தவண்ணம் இருக்கின்றன. அந்தவகையில் கல்லோயா குடியேற்றத்திட்டத்தில் 11 ஆம் கிராமம் என்ற நூலும் இடம்பிடித்துள்ளது. இந்த நூலின் ஆசிரியர் தீவிர சைவ அபிமானி, தாய்மொழிப்பற்றாளர். சமூக அக்கறையாளர். இந்தச் செல்வாக்கு, நூல் முழுவதும் ஊடுருவிப் பரவி இருப்பதைக் காணலாம்.

இந்தநூலில் துறைநீலாவணைத் தாயகம், 11ம் கிராமத்தின் ஆலயங்கள் (04), மக்கள் குடியேற்றம், கலைகளின் வளர்ச்சி(நாட்டுக்கூத்து, மேடைநாடகம், கதைகூறல்), அரசியல், பாடசாலை, அரசதொழில்வாய்ப்பு, 11ம் கிராமம் தந்த பிரபலங்கள் முதலான விடயங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சமூதாயத்தில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்குகள், மாற்றங்கள் முதலான வரலாற்றுச் செய்திகளையும் கிராமமக்களின் முன்னைய பழக்கவழக்கங்கள் (காவுதடியில் பொருட்களைக் கொண்டு செல்லும்) நடைமுறைகளையும் தம் சந்ததியினர் அறிந்து கொள்ளும் ஆவணமாக இந்நூலைச் சிறப்பாகப் படைத்துள்ளார். அந்த வகையில் சமய, சமூக நம்பிக்கைகள், பண்டிகைகள், விழாக்கள், விரதங்கள், கதைகூறல் முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

தங்கள் கிராமம் பற்றிக் குறிப்பிடும் நூலாசிரியர், அதன் வரலாறு துறைநீலாவணைக் கிராமத்திலிருந்து தான் தொடங்குகின்றது என்ற வரலாற்றுத் தகவலை உண்மையாகவும், ஆணித்தரமாகவும் வலியுறுத்தியுள்ளார். இதனை துறைநீலாவணைத்தாயகம் என்ற தலைப்பில் எடுத்துரைத்துள்ளார். ஆரம்பகால குடியேற்றவாசிகள் இங்கிருந்து சென்று குடியேறி உள்ளனர் என்ற விளக்கமும் இதனை உறுதிப்படுத்துகின்றது. இன்றைய இளந்தலைமுறையினருக்கு இவ்வுண்மையைத் தெளிவுறுத்தும் தார்மீக, கடமையுணர்வும் வரலாறு தொடர்பான அறிவும் இதற்குக் காரணங்களாக அமைகின்றன.

பல்வேறு கிராமங்கள், வரலாற்றுத் தகவல்கள் முதலான அம்சங்களை உள்ளடக்கிய கல்லோயா குடியேற்றத்திட்டத்தில் 11 ஆம் கிராமம் என்னும் நூல் கல்லோயா குடியேற்றதிட்டத்தில் முதலாவது நூல் என்பதில் மகிழ்வடைகின்றோம். இந்நூல் வருங்கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள், ஆய்வாளர்கள் பல ஆய்வுகளை மேற்கொள்ளவும் கட்டுரை எழுதவும் உறுதுணையாக, உசாத்துணை நூலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**V. விஜயலெட்சுமி**
ஓய்வுநிலைப் பணிப்பாளர், (தமிழ்த்துறை),
தேசிய கல்வி நிறுவகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கடந்த கால வரலாறு பற்றிய தெளிவற்ற ஒரு சமூகம்தனக்கென்று இலக்குகளோடு கூடிய எதிர்காலத்தை நோக்கி பயணிக்கமுடியாது என்பதன்பால் சமூக வரலாறு தொடர்பான அறிவியல் ஆய்வுகளின் இன்றியமையாமை பெரிதும் உணரப்படுகின்ற இவ்வேளையில் சீர்பாதகுல பரம்பரையின் வழித்தோன்றலாகி துறைநீலாவணை மூதாதையர்களின் வாழ்வியல் அம்சங்கள் பலவற்றை உள்ளடக்கிய திரு. கணேசமூர்த்தி அவர்களின் கல்லோயா குடியேற்றத்திட்டத்தில் 11ம் கிராமம் எனும் நூல் வெளிவருவதனையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தநூலானது மரபுவழி சார்ந்த அம்சங்களை உள்ளடக்கிய வரலாற்று ஆய்வுக்கான புதிய பரிமாணங்களை எல்லோருக்கும் இலகுவில் விளங்கிக் கொள்ளும் விதமாக எளிய மொழிநடையில் நெறிப்படுத்தித்தரும் வகையில் இந்தநூல் அமைகின்றது. இந்நூலில் 11ம் கிராமத்தின் நிலத்தோற்ற அமைப்பு, புவியியல் நிலை, சமூகப்பரம்பல், வாழ்வியல் அம்சங்கள், சமய சடங்குமுறைகள், பாரம்பரிய கலையம்சங்கள், அரசியல், பொருளாதாரம் மற்றும் தொழில் முறைமை எனப் பன்முகப்பார்வையுடன்கூடிய கிராமிய வரலாற்று முழுமையைத்தேடும் வகையில் இந்நூல் பல பிரிவுகளாக வகுத்து எழுதப்பட்டுள்ளது.

துறைநீலாவணைத் தாயகத்தின் தமிழர் சமூக வரலாற்றின் தனித்துவங்களை ஆழச்சித்தரிக்கும் வகையில் வாய்மொழி வழித்தோன்றலான உரையாடல்கள் மற்றும் நூல்கள் வழியான சான்றாதாரங்களை முன்னிலைப்படுத்தி மக்களின் வாழ்வியல் அம்சங்களின் வளர்ச்சிப் போக்கினை இந்நூல் சித்தரித்துக் காட்டுகின்றது. குறிப்பாக 11ம் கிராம மக்களின் வாழ்வியலில் அவர்களின் தொழில்முறை, வழிபாட்டுமுறைகள், கலாசார பண்பாட்டம்சங்கள் எவ்வாறு அவர்களின் கல்வியறிவு வளர்ச்சியிலும், தொலைநோக்கான சமூகசிந்தனையிலும் புதிய மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது என்பதை ஆசிரியரின் எடுத்துக்காட்டுக்களின் ஊடாக அறிந்துகொள்ளமுடிகின்றது.

இந்நூல் 11ம் கிராம வரலாற்று அம்சங்களை வளர்ந்து வரும் சந்ததியினர் அறிந்து கொள்வதற்கு பெரும் உதவியாக இருப்பதோடு இவ்வாறாக ஊர்களின் வரலாற்றை வெளிப்படுத்தும் வகையிலான நூல்கள் வெளிவருவது மிகவும் அரிதான சூழலில் தன்னுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயமுயற்சியின் ஊடாக பல தகவல்களைத் திரட்டி, தொகுத்து இந்நூலை வெளியிட வேண்டும் என்ற திரு. த. கணேஸமூர்த்தி அவர்களின் சமூக சிந்தனையுடன் கூடிய ஆர்வத்தினை பாராட்டி வாழ்த்துகின்றேன்.

நூல்கள் வாசிப்பது என்பது வெறுமனே பொழுதுபோக்கன்றி வாசகர் மத்தியில் அறிவுபூர்வமான சிந்தனைகளையோ, ஆக்கபூர்வமான புதிய மாற்றங்களையோ உருவாக்கும் விதமாக அமைய வேண்டுமே தவிர சாதி, மதம் சார்ந்த தொழில் நிலையான பாகுபாடுகள் பாரபட்சமான கருத்துக்களை உணர்ச்சிபூர்வமாக மனதில் ஏற்படுத்தி முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வண்ணம் கருத்துக்கள் வெளிப்படுத்தல் பொருத்தமற்றது என்பதை கவனத்தில் கொள்வதோடு, வாசகர் மத்தியில் வாசிப்பு ஆர்வத்தினை மென்மேலும் தூண்டும் விதமாக சிறு சிறு பகுதிகளாக பிரித்து தலையங்கங்கள் இட்டு அது சார்ந்த விளக்கங்களையும் விபரிக்கும் போது தெளிவான புரிதலை ஏற்படுத்தமுடியும். அத்தோடு நூலாக்கத்தில் கருத்துக்களை வெளியிடும் போது வாய்மொழிரீதியான உரையாடல் வழியிலான தகவல்களை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு இன்னும் வலுவூட்டும் விதமாக ஆதாரபூர்வமான சான்றாதாரங்களான நூல்கள், பழைய ஓலைச்சுவடிகள், கல்வெட்டுக்கள் போன்றவற்றை பயன்படுத்தி தகவல்களை சேகரித்து தொகுத்து எழுதும்போது இன்னும் முழுமையான விளக்கத்தையும் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல முடியும் எனலாம்.

அத்தோடு இவ்வாறான ஆக்கங்கள் வெளியிடுவது அரிதாக இருக்கின்ற போதிலும் மென்மேலும் இது போன்ற நூல்கள் வெளியிடுவதற்கு சமூக சிந்தனையுள்ள படைப்பாளிகளை உருவாக்குவதற்குரிய செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்து வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்பது யாவரினதும் கடமையாக இருக்கின்றது என்பதை இங்கு தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகின்றேன்.

**சோ. ரங்கநாதன்**
பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்
நாவிதன்வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லோயா குடியேற்றத்திட்டமும் 11ம் கிராமத்தின் வரலாறும்

1952ஆம் ஆண்டு அப்போதய பிரதமர் டி. எஸ். சேனநாயக்கவினால் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட சிங்கள குடியேற்றமே கல்லோயாத் திட்டமாகும். பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களில் வெளி மாவட்ட சிங்களவர்களை கொண்டு வந்து குடியமர்த்தியதானது கிழக்கு மாகணத்திலுள்ள தமிழர்களை சிறுபான்மைப் படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

குறிப்பிட்ட பகுதிகளில் துறைநீலாவணை, பெரியநீலாவணை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, காரைதீவு, வீரமுனை, மண்டூர் மற்றும் குறுமன்வெளி போன்ற பிரதேசங்களிலிருந்த தமிழர்களையும் (மருதமுனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது மற்றும் சம்மாந்துறை) போன்ற பிரதேசங்களிலிருந்து குடியமர்த்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் தமிழர்களும், இஸ்லாமியர்களும் முறையே நாவிதன்வெளி, வெல்லாவெளி மற்றும் சம்மாந்துறை போன்ற பிரதேசப் பிரிவுகளிலிருந்து குடியேறினர். இவ்விடயத்தில் துரதிஷ்டவசமாக கருத வேண்டிய விடயமானது வெளிமாவட்ட சிங்களவர்கள் குடியேறும் போது எமது தமிழர்கள் இப்பிரதேசத்தில் குடியமர்வதற்கு பெரிதும் விரும்பவில்லை.

எனினும் துறைநீலாவணைப் பிரதேசத்தில் வாழ்ந்த சீர்பாத குடியினர் பெருமளவில் கல்லோயாத் திட்டத்தில் குடியேறியமை ஒரு துணிச்சல் மிக்க செயற்பாடாகும். இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத சிங்களவர்கள் 1956 ஆம் ஆண்டு பாரியளவிலான இன சுத்திகரிப்பை மேற்கொண்ட அதே வேளை 1977, 1981, 1983, 1990 ஆம் ஆண்டுகளில் இன சுத்திகரிப்பு செயலை தீவிரப் படுத்தினர்.

சிங்களவர்களின் இந்த இனவாத செயலின் காரணமாக எமது தமிழர்கள் கூரிய ஆயுதங்களால் வெட்டப்பட்டும், குத்தியும், உயிருடன் தீயில் எரியூட்டப்பட்டும் கொல்லப்பட்டனர். சிங்களவர்களின் இத்திட்டமிட்ட வன்முறைத்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல். மேற்சொன்ன பிரதேசங்களில் குடியேறியிருந்த தமிழ் மக்கள் அந்தந்த பிரதேசங்களை விட்டு வெளியேறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும், இச்சந்தர்ப்பத்தில், துறை நீலாவணைப் பிரதேசத்திலிருந்து இங்கு குடியேறிய சீர்பாதத் தமிழர்கள் நாமார்க்கும் குடியல்லோம் யமனை அஞ்சோம் என்று அடங்கமறுக்கும் தமிழினத்தின் ஓர்மத்துடன் செயற்பட்ட துணிச்சல் மிக்க செயற்பாட்டின் காரணமாகவேதான் பல தமிழ்க் கிராமங்கள் இன்றளவும் உயிரோட்டமுள்ள தமிழ்ப்பிரதேசங்களாக காட்சியளிக்கின்றன.

அதனடிப்படையில் 11ம் கிராமத்தில் குடியேறியவர்களுள், 11ம் கிராமம், 51ஆம் இலக்க வீட்டில் வசித்த திரு. திருமதிகளான இராமக்குட்டி தம்பிராசா பொன்னையா சின்னப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரான திருவாளர் கணேசமூர்த்தி என்பவர் ஒரு சிறுவனாக, இளைஞனாக, சமூகச் செயற்பாட்டாளராக மற்றும் ஒரு அரச உத்தியோகத்தராகவுமிருந்து 11 ஆம் கிராமத்தின் ஆரம்பக் குடியேற்ற வாசிகளின் பெயர், முகவரிகள் அவர்களால் இக்கிராம இருப்புக்கும் முன்னேற்றத்திற்கும் ஆற்றப்பட்ட பங்களிப்புகள் தொடர்பான வரலாற்று தகவல்களை ஆவணப்படுத்தியமை, (சிங்கள இனவெறியர்களின் தமிழ் இன சுத்திகரிப்பு செயற்பாட்டுக்கு எதிராக வீரத்துடன் துணிந்து நின்று பாதுகாத்து செயற்பட்டமை) அத்துடன் இப்பிரதேச தமிழர்களின் கல்வி, கலை கலாசார விழுமியங்கள், விவசாயம், வர்த்தகம், அரசதொழில், அரசியற் பரவேசம் மற்றும் ஆன்மீக ரீதியான ஆலயக்கட்டமைப்புக்கள் போன்றவற்றின் மேம்பாட்டின் வரலாற்றினை வருங்கால சந்ததியினரின் தேவைகருதி ஒரு ஆவணமாக தொகுத்து நூல் வடிவில் வெளியிடுவதற்கு அதிக அர்ப்பணிப்புடன் செயற்பட்டமை போன்ற தன்னலங்கருதா சேவைக்காக, வா பகையே வந்து எம் நெஞ்சேறி மிதியென்று எக்காளமிட்டுத் திமிருகின்ற தமிழினத்தின் சீர்பாத குடித்தீரனே உமக்கு இப்பிரதேச தமிழர் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

தமிழ் மண் சார்ந்த தமிழினம் சார்ந்த உமது செயற்பாடுகள் மென்மேலும் தொடர்ந்திட எனது இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

நன்றி

**திருவாளர் சோமசுந்தரம் புஸ்பராஜா (JP)**
முன்னாள் முதலாவது தவிசாளர்
நாவிதன்வெளி பிரதேச சபை
முன்னாள் முதலாவது மாகாண சபை உறுப்பினர்
கிழக்கு மாகாண சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த துணிச்சலான அர்ப்பணிப்பு

எமது கிராமத்தில் தோன்றிய புளியடிப்பிள்ளையார் ஆலயத்தின் வரலாற்று சான்றுகளை துணிச்சலான தேடல்களும் மனவலிமையோடும் அர்ப்பணிப்போடும் சான்றுப்படுத்தியுள்ளமை, எதிர்கால சமூகத்தின் பார்வைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ள விடயம் தங்களின் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளமை, பாராட்டுக்குரியது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இந்த ஆலயத்தின் தோற்றகால வரலாற்று சான்றுகளின் மகிமையை இவ்வாலயம் தோன்றியதற்கு காரண கர்த்தாவாக இருந்தவர்களோ அல்லது அதை அறிந்தவர்களோ எழுத முன்வரவில்லை என்ற ஏக்கம் என் மனதை பல வருடங்களாக உறுத்திய வண்ணம் இருந்தது. இந்நேரத்தில் காலத்தின் தேவைகருதி மதிப்புக்குரிய கணேசமூர்த்தி (ஐயா) என்ற, நாமம் சூட்டப்பட்ட (மாமனிதர்) அவர்களின் இந்த அற்புதமான படைப்பு எமது சமூகத்தில் உள்ள மக்களின் உள்ளங்களை குளிரவைக்கின்றன.

ஆலயத்தின் வரலாறு மட்டுமின்ற எமது கிராமத்தில் தோற்றம் பெற்று வளர்ந்து கொண்டிருக்கும் பொது அமைப்புக்களான பாடசாலை, விளையாட்டுக்கழகங்கள் மன்றங்கள், பொது அமைப்புக்கள், அக்காலத்தில் வாழ்ந்த பெரியார்கள் முதியோரகளின் வாழ்க்கை முறைகளையும் அழகாக எடுத்துக்காட்டியுள்ளமை கடந்த காலத்தை நினைவூட்டுவதாக அமைவதோடு பொது அமைப்பகளின் தோற்றகாலம் தொடக்கம் தற்காலம் வரையும் அதனுடைய வளர்ச்சிப்படிகளை எடுத்துக்காட்டியுள்ளமை எமது எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த ஒரு சான்றாக உள்ளது.

எமது ஆலயத்தின் வரலாற்றை படைத்தமைக்காக ஆலயத்தின் முன்னாள் தலைவர் என்றவகையில் எனது சார்பாகவும், எமது கிராமத்து மக்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினை தெரிவிக்கின்றேன்.

**கனகரெத்தினம் கண்ணதாசன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர் -
மத்தியமுகாம்,
முன்னாள் தலைவர்
11ம் கிராமம் ஸ்ரீ சித்திவினாயகர் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றேன்

தமிழர்கள் இலங்கையில் பல பிரதேசங்களில் வாழ்ந்து வந்தாலும் கூட தமிழர்களுக்கென்று தனித்துவமான ஒரு வரலாற்றை நினைவுபடுத்துவது டி. எஸ். சேனநாயக்க அவர்களின் சிந்தனையில் உருவாக்கம் பெற்ற கல்லோயா அபிவிருத்தி திட்டமாகும். இத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்கான நிதி மற்றும் தொழிநுட்ப இயந்திர சாதனங்களை வழங்க முன்வந்த வெளிநாட்டவர்களின் நிபுணத்துவ குழுவினர் பின்வரும் நிபந்தனைகளை சிறுபான்மை இனம் சார்ந்ததாக முன்வைத்தனர்.

- இத்திட்டத்தில் சிறுபான்மை விவசாயத் தமிழ் மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்
- மேற்குறிப்பிட்ட பிரிவினருக்கு குடியேற்றத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டதன் பின்னரே பெரும்பான்மையினருக்கு குடியேற்றத்தில் இடமளிக்கப்படவேண்டும் என முன்மொழியப்பட்டிருந்தது.

மேற்படி நிபந்தனைகளின் அடிப்படையில் வீடுகளும் விவசாய நிலங்களும் மேட்டுப்பயிர்செய்கைக்கான காணியும் வழங்கி 1952ம் ஆண்டு காலப்பகுதியில் துறைநீலாவணை பரம்பரை சார்ந்த அதிகமான மக்களும் குடியேற்றப்பட்டனர். அப்போதிருந்தே அவர்களுடைய கலை, கலாசாரம், விளையாட்டு, கால்நடை வளர்ப்பு, உறவு நிலைகள் பலப்படுத்தபட்டிருந்த போதிலும் திட்டமிட்டு பேரின வாத அரசியல் தலைவர்களால் காலி மாத்தறை போன்ற பிரதேசங்களில் இருந்து சிங்களக் காடையர்கள் ஏவப்பட்டு 1956ம் ஆண்டு காலப்பகுதியில் மண்டூர் வரை துரத்தியடிக்கப்பட்டனர். இதில் பல கிராமங்களைச் சார்ந்த குடும்பங்கள் மீண்டும் தனது தாயக பூமியான துறைநீலாவணைக்கே சென்றனர். இதனை சாதகமாகப் பயன்படுத்தி பேரினவாதிகள் அவ்விடங்களில் குடியேறினர். அக் காலத்திலே இப் பிரதேசத்திலே பின்வரும் சங்கங்கள் வளர்ச்சி பெற்று காணப்பட்டன

01) பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்
02) புகையிலை உற்பத்தியாளர் சங்கம்
03) விவசாயச்சங்கம்
04) நாட்டுக் கூத்து, நாடகம், விளையாட்டுக்கழகங்கள் சமூகத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தது.
05) ஆலயங்களும் அறங்காவல் அமைப்புக்களும் உருவாகின

இவ்வாறான சமூக கட்டமைப்புக்களோடு உருவாகி வாழ்ந்த குடியேற்ற விவசாயக்குடும்பங்களின் தலைவர்களையும் தலைவர்களின் வழியே துணைவியின் வழி என்று வாழ்ந்த துணைவிகளையும் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச மக்கள் மறந்துவிடக்கூடாது அவர்களின் தியாகங்கள் போற்றப்படவேண்டும். அவர்களை நினைவு கூறவேண்டும். அவர்கள் எல்லைக் காவலர்களாக இருந்த காரணத்தினால் தான் இன்று எமது சமூகம் தலை நிமிர்ந்து நிற்கின்றது என்ற சிந்தனையில் அவர்களில் பலர் அமரத்துவம் அடைந்தாலும் அவர்களின் பெயர்களைப் பட்டியலாக்கி புத்தகவடிவில் எழுத்துருவம் கொடுக்க முன் வந்த திரு. கணேசமூர்த்தி ஐயாவை இவ்வேளையில் இக் கிராம மக்கள் சார்பாகவும் எமத சார்பாகவும் வாழ்த்தவும் பெருமைப்படவும் வேண்டிய கடமைப்பாடு உள்ளது. இவரின் செயற்பாடு சிறப்பான வெற்றி பெற எனது வாழ்த்து செய்தியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவர் எமது கிராமத்தின் தகவல்களை கூறுவது போற்றுதலுக்குரியது.

**முத்துலிங்கம் ஜெயசுந்தரம்**
பிரதி அதியர்
அகத்தியர் வித்தியாலயம்
11ம் கிராமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ம் கிராம ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய அறங்காவலர் சபை செயலாளர் அவர்களது வாழ்த்துரை

உலகின் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி சைவத்தமிழ்க்குடி, நாகரீகத்திலும் பண்பாட்டிலும் ஒழுக்க நெறியிலும் தலைசிறந்தவர்களாக நம் மக்கள் வாழ்ந்தனர். புராதன காலம் தொட்டு கடவுள் வழிபாடு சமயச்சடங்கு அனுஷ்டான முறைகள் சங்கீதம், நாட்டுக்கூத்து, நாடகங்கள், நடனம், வசந்தன், கும்மி, கவி பாடல், வைத்தியம் போன்றவை மக்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்துள்ளமையை யாம் அறிவோம். கடந்தகால எம் முன்னோர்களின் சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன் அவர்களின் வாழ்க்கையும் கலாச்சாரமும் எவ்வகையில் இருந்தது எம்மை உருவாக்கிவிட்டு மறைந்து சென்ற எம் முன்னோர்களின் நினைவுகள் எம்மைவிட்டு போகாமல் உடலோடு தொடரும் நிழல் போன்றவை, அந்த ஞாபகங்களை நினைவூட்டி வெளியிட்டுள்ள இச்சிறிய கன்னி மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு எளியேன் மிக மன மகிழ்ச்சியடைகின்றேன்.

ஈழத்திருநாட்டின் கிழக்கின் மலராய் மணம் வீசும் மட்டக்களப்பின் தென்பால் துறைநீலாவணை என மங்காப்புகழோடு சுகந்தம் வீசும் நம் ஊர் மக்கள் பரந்து வாழும் இடங்களில் ஒன்றான 11ம் கிராமம் குடியேறிய காலப்பகுதியும், அங்கு உருவாகிய ஆலய வரலாறுகளையும் , இக்குடிமக்களின் கலை கலாச்சாரம், தொழில் பண்புகளையும் இந்த நூலாசிரியர் த. கணேசமூர்த்தி அவர்கள் நினைவூட்டி சிறியதோர் கன்னி மலராக வெளியிட்டமைக்கு யான் மகிழ்ச்சியடைகிறேன். இந்நூல் வெளியிடுதற்காக முன்னின்று உதவியளித்த பெருந்தகையர்க்கும், மலரை வெளியிட்ட அச்சகத்தார்களுக்கும் ஆசிரியரின் விடாமுயற்சிக்கும் நல் வாழ்த்து தெரிவிப்பதோடு எல்லாம் வல்ல ஸ்ரீ கண்ணகை அம்பாளின் அருட்கடாட்சமும் கிடைக்க வேண்டும்மென உளமார வாழ்த்துகின்றேன்.

வாழ்க தமிழ்! வளர்க வையகம்!

ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய அறங்காவலர் சபை
**திரு. மு. வைரமுத்து** (செயலாளர்)
13ம் கிராமம் சங்கர்புரம்
மண்டூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

நான் எனது சுய வாழ்க்கையில் ஒரு பகுதியை சமய சமூகப்பணிகளில் அற்பணித்துள்ளேன். அவ்வாறு சமூகப்பணிகளில் ஈடுபட்டவேளைகளில் எனக்கு சில ஆதாரங்கள் தேவைப்பட்டன. சுவடிகள் காப்பகம் வரையும் தேடலில் இறங்கியும் கைகூடவில்லை. காரணம் எமது மூதாதயர்கள் ஆவணப்படுத்தலில் அக்கறை கொள்ளவில்லையோ என்னவோ தெரியாது, வெறும் வாய்வழி செய்திகளாகவே அறிய கூடியதாகவுள்ளது. இதன் காரணமாக எனது சில செயற்பாடுகள் தடைப்பட்டிருந்தன.

இவ்வாறான ஆவணப்படுத்தல்கள் இல்லாத காரணங்களால் இன்று சில கிராமங்களில் சமூகங்களுக்கிடையிலான முரண்பாடுகள் வலுப் பெற்று நீதிமன்றங்களில் வழக்காடிக் கொண்டிருப்பது மனவேதனைக்குரிய விடயமாகும்.

எனது தந்தையார் அமரர். இராமக்குட்டி தம்பிராசா அவர்கள் சீனன்வாடியில் வேலை செய்த அனுபவங்கள் அப்போது குண்டுபோடப்பட்ட வேளையில் அதிலிருந்து எவ்வாறு தப்பி காட்டு வழியூடாக ஊர் வந்து சேர்ந்தார்கள் என்பது பற்றியும் துறைநீலாவணையில் எமது மூதாதயர்கள் ஊரைச்சுற்றியுள்ள மட்டக்களப்பு வாவியை அண்டியுள்ள விளை நிலங்களில் இயற்கையாக எவ்வாறு விவசாயத்தை மேற்கொண்டார்கள் என்பது பற்றியும் வாவியைக் கடந்து கால் நடையாக சென்று படுவான் கரையில் எங்கெங்கு என்னென்ன தொழில்களை மேற்கொண்டார்கள் என்பது பற்றியும் அவ்வாறு அவர்கள் அந்த பிரதேசங்களில் தொழிலில் ஈடுபடுகின்ற வேளைகளில் நிகழ்ந்த சம்பவங்கள் அனுபவங்கள் பற்றியும் 1950ம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலப்பகுதிகளில் இப்போது இருக்கின்ற இந்த குடியேற்ற திட்டத்தை மேற்கொள்வதற்காக அப்போதைய ஆட்சியாளர்களால் கனரகவாகனங்களைக் கொண்டு காடுகள் அழிக்கப்பட்டதாகவும் இதன்காரணமாக அவர்கள் காலம் காலமாக தொழில் செய்து வாழ்ந்து வந்த கோம்பானை என்ற இடத்தை விட்டு மனவேதனையுடன் வெளியேறியதாகவும், 1952, 1953ம் ஆண்டுகளில் இந்த கிராமங்களில் அவர்களைக்கொண்டு குடியேற்றம் செய்ததாகவும் பிற்காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் பற்றியும் 11ம் கிராம படர்மலை பத்தினி கண்ணகையம்மன் ஆலயம் 11ம் கிராம புளியடி பிள்ளையார் ஆலயங்களின் தோற்றம் பற்றியெல்லாம் நான் சிறுவனாக இருந்த காலம் முதல் பெரியவனாக வளர்ந்த பிறகும் மாரிகாலங்களில் நாங்கள் குடும்பத்தோடு எல்லோரும் கூடியிருக்கின்ற நேரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளை பற்றிய கதை சொல்லுவார் எனது தந்தையார். இவ்வாறான கதைகள் இளமையில் எனது மனதில் ஆழப்பதிந்துள்ளது இந்த மனப் பதிவுகள் பிற்காலத்தில் இவ்வாறான வரலாறுகள் எழுதுவதற்கு உறுதுணையாக அமைந்துள்ளது.

11ம் கிராமத்தை பற்றிய வரன்முறையான எந்தவொரு வரலாற்று நூலும் இதுவரையில் வெளிவந்ததாக நான் அறியவில்லை இதன் கண் பேசப்படுகின்ற வரலாறுகளும் மரபுகளும், ஐதிகங்களும், சம்பவங்களும் எந்தளவிற்கு ஆதாரமானவை என்பது சற்று விரிவாக தரப்பட்டுள்ளன. இப்பணிக்கு தேவையான தரவுகள் எனது தந்தை இராமக்குட்டி தம்பிராசா அவர்கள் மூலமாகவும் மூத்தவர்களின் நேர்காணல் ஊடாகவும் அண்மையில் காலம் சென்ற தம்பாப்பிள்ளை கணகரெட்ணம் அவர்களின் 31ம் நாள் நினைவு மலர்மூலம் சில தகவல்களும், எனது வயது அனுபவங்களையும் கொண்டு இம்முயற்சியில் ஈடுபடலானேன்.

11ம் கிராமத்தின் எதிர்கால சந்ததியினர் வரலாற்று புரிதலோடு ஒருதாய் பிள்ளைகளாக முரண்பாடற்ற சமூகமாக ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இதை எழுதலானேன். இதில் பிழைகள் நேர்ந்திருந்தால் பெருமனது கொண்டு பொறுக்குமாறு வேண்டுகிறேன். அப்பிழைகளையும் மேலும் இதில் சேர்க்க வேண்டிய சம்பவங்கள், நிகழ்வுகள் ஏதும் இயல்பாக விடுபட்டிருந்தால் அனுபவம் வாய்ந்தவர்கள் ஆதாரத்துடன் ஒப்புவித்தால் அடுத்த மலரில் சேர்த்துக்கொள்ளலாம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் இதை எழுதுவதற்கு உத்தேசித்த அந்த காலத்தில் உதவி செய்தவர்களையும் உதாசீனம் செய்தவர்களையும் வாழ்வியலில் மறக்க முடியாது. ஏனைய கிராமங்களையும் இந்த நூலில் சேர்க்க முடியவில்லை அடுத்துவரும் பாகங்களில் வெளியிடவுள்ளேன். இதற்கு இறையருள் துணைபுரியட்டும்.

பல சிரமங்களின் மத்தியிலும் ஆசியுரையை வழங்கிவைத்த துறைநீலாவணை ஸ்ரீ தில்லையம்பலப்பிள்ளையார் ஆலய பிரதமகுரு மதிப்புக்குரிய இரத்தினசபா சசி ஐயா அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

இந்நூலை எழுதுவதற்கு பல தகவல்களை தந்துதவிய படர்மலை பத்தினி கண்ணகியம்மன் ஆலயத்தின் ஸ்தாபகர்களில் முக்கியஸ்தரும் ஆரம்பம் முதல் 1990ம் ஆண்டுவரையும் செயலாளராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயபணியாற்றி அண்மையில் இறைபதமடைந்த பூபாலப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்களுக்கும்

மேலும் பல தகவல்களை தந்ததோடு காத்திரமான வாழ்த்து செய்தியையும் தந்துதவிய முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் துணிச்சலான அரசியல் செயற்பாட்டாளருமான சோமசுந்தரம் புஸ்பராஜா அவர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

இன்னும் பல சிரமங்களுக்கு மத்தியிலும் ஆசிச் செய்தியினைத்தந்துதவிய இலங்கை தமிழரசுக்கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் அவர்களுக்கும் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் சோ. ரங்கநாதன் அவர்களுக்கும் இதயபூர்மான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அணிந்துரையை வழங்கிய செல்வி வையிரமுத்து விஜயலெட்சுமி ஓய்வுநிலைப் பணிப்பாளர் (தமிழ்த்துறை) தேசியக்கல்வி நிறுவகம் அவர்களுக்கும், இந்நூலை எழுதுவதற்கு எனக்கு பக்க பலமாக இருந்து பல அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கியதோடு சான்றுரையும் வழங்கி வைத்த ஓய்வுநிலை கோட்டக்கல்வி அதிகாரி ஆறுமுகம் வினாயகம்பிள்ளை அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை கூறுகின்றேன்.

மேலும் சில தகவல்களை தந்துதவிய 11ம் கிராமம், 114ம் இலக்க வீட்டைச் சேர்ந்த மா. சதாசிவம் அவர்களுக்கும், 13ம் கிராமம், 134ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சா. புலேந்திரன் அவர்களுக்கும் காலஞ்சென்றவரான 11/11ம் இலக்க வீட்டைச்சேர்ந்த க. ஆறுமுகம் மற்றும் 11/54ம் இலக்க வீட்டைச்சேர்ந்த பூ. ஆறுமுகம் மற்றும் 11/59ம் இலக்க வீட்டைச்சேர்ந்த த. அருட்பிரகாசம் ஆகியோருக்கும் நன்றி கூறுகின்றேன்.

வாழ்த்துச் செய்திகளை வழங்கிவைத்தவர்களான கனகரெத்தினம் கண்ணதாசன் முன்னாள் தலைவர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம். அபிவிருத்தி உத்தியோகத்தர் மத்தியமுகாம் மு. ஜெயசுந்தரம் பிரதி அதிபர், மு. வைரமுத்து செயலாளர் கண்ணகை அம்மன் ஆலயம் 13ம் கிராமம் சங்கர்புரம் ஆகியோர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

என்னால் எழுதப்பட்ட இந்த வரலாற்றை சீரிய முறையில் ஒப்பு நோக்கி நூலுருப்பெற வடிவமைத்து தந்துதவிய மதிப்புக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வுநிலை அதிபர் பாவாணர் அக்கரைப்பாக்கியன் அவர்களுக்கும் என்றென்றும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

அட்டைப்படத்தை வடிவமைத்து தந்துதவிய மத்தியமுகாம் திருமுருகன் வித்தியாலய அதிபர் த. திருச்செல்வம் அவர்களுக்கும் இந்நூலை சிறந்தமுறையில் அச்சுப்பதிப்பேற்றம் செய்த கல்முனை கோல்டன் அச்சகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

11ம் கிராமம் 92ம் இலக்க வீட்டை தாய் வீடாகவும் 13ம் கிராமம் 109ம் இலக்கவீட்டை புகுந்த வீடாகவும் தற்போது அவுஸ்ரேலியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் கனகரெத்தினம் பகிரதன் அவர்கள் இந்நூல் வெளிவருவதற்கு முழுமையான அனுசரணை வழங்கியுள்ளார். அவருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

யாவற்றுக்கும் மேலாக, இந்நூலினை வெளியிட்டு வைக்கும், 11ம் கிராமம், சது / றாணமடு இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்துக்கு எனது இதய பூர்வமான நன்றியறிதலைக் கூறுவதில் மனமகிழ்வெய்துகின்றேன்.

**த. கணேசமூர்த்தி** J.P
துறைநீலாவணை-08.
நூலாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01

## கல்லோயா குடியேற்றத்திட்டத்தில் 11ம் கிராமம்

# துறை நீலாவணைத் தாயகம்

நமது அனைவருக்கும் தாயகமான துறைநீலாவணைக் கிராமத்தில் வாழ்ந்த எமது மூதாதையர்கள் தங்களது ஜீவனோபாயத் தொழிலாக எமது கிராமத்தைச் சுற்றியுள்ள மட்டக்களப்பு வாவிக்கரையை அண்டிய வன்னனாவெளி, கரையாவெளி, குளவெளி, தரவைமுன்மாரி, மேட்டுவட்டை, மேட்டு முன்மாரி, இத்துடன் வாவியின் மேற்குக்கரையை அண்டிய கவுடாதீவு, முனையவெளி, ஊட்டுவாவெளி, மணல்மேடு போன்ற காணிகளில் ஏற்றால் நீர் இறைத்து விவசாயத்தை மேற்கொண்டதோடு, இன்னும் ஒரு சாரார் வானாவாரியை நம்பி விவசாயத்தை மேற்கொள்வதற்காக மேற்குப்புற படுவான்கரை, ஆலங்குளம், தோலாருட வட்ட, கார்த்தியருடவட்ட, சாளம்பக்கேணி, இலுப்பைக்குளம், உடையாண்ட வட்ட, கடுக்காயண்ட கண்டம், மூன்றடுப்பு வட்ட, அக்கிலாவெளி, றாணமடு, மாலையர் கட்டு, பறங்கிர வட்ட, மதுரையடி வட்ட, பால் காச்சின வட்ட, கத்துன் வட்ட, மூங்கிலடி வட்ட, இறக்கத்து வட்ட, புளியங்குளம், கோம்பான, மாவடி வட்ட, கோணவளை, உகனை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மார்க்காண்டி (உகனையில் இருந்து மேற்காக 10 கி.மி. அப்பால் உள்ள இடம்)போன்ற இடங்களில் விவசாயத்தை மேற்கொண்டதுடன் மேட்டுநில சேனைப் பயிர்களும், வற்றாத நீர் நிலைகளையண்டிய பகுதிகளில் நாட்டுப் புகையிலைத் தோட்டமும், ஏனைய தோட்டப் பயிர்களையும் மேற்கொண்டதோடு, கால் நடைகள் வளர்ப்பிலும் ஈடுபட்டு வந்தார்கள்.

எமது தாயகத்திலிருந்து மேற்படி இடங்களைச் சென்றடைவதற்காக மட்டக்களப்பு வாவியை கடந்து செல்ல வேண்டியதாக உள்ளது. இதற்காக சேனைக்குடியிருப்பிலிருந்து சவளக்கடைக்குச் செல்வதற்காக மரத்தால் செய்யப்பட்டு இயந்திரம் பொருத்தப்பட்ட பாதை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்குப் பயணக்கட்டணமாக இரண்டு சதம் அறவிடப்பட்டதாகவும், அத்துடன் துறைநீலாவணையில் இருந்து அன்னமலையூடாகச் செல்வதற்கு மரத்தால் செய்யப்பட்ட வள்ளமும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச் சேவையை துறைக்காரன் என்று அழைக்கப்படுவோர் மேற்கொண்டுவந்தார்கள். இவர்களுக்கு வேதனமாக தினமும் பால், தயிர், தானியம் போன்றவை கொடுத்ததோடு, அவர்களுடைய விவசாய அறுவடையின் பிற்பாடு நெல்லும் வழங்கப்பட்டு வந்ததாக அறியக் கூடியதாகவுள்ளது. இவ்வாறாக வாவியைக் கடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றையடிப்பாதையூடாக காத்தாடியில் சுமையைச் சுமந்து கொண்டு கால்நடையாக தம்பலவத்தைப் பாலத்தடியிலுள்ள வம்மி மரத்தடியை அடைந்து அவற்றில் இருந்த சிறு கிணற்றில் நீரை அருந்தி தாகம் தீர்த்து, வம்மி மர நிழலில் இளைப்பாறியிருந்து, மீண்டும் தமது பயணத்தை மேற்கொள்வார்கள். அண்மைக் காலத்தில் தான் அக்கிணறு அகற்றப்பட்டுள்ளது. ஆனால், வம்மி மரம் இப்போதும் காட்சியளிப்பதைக்காணலாம்.

இவ்வாறு மீண்டும் அவர்கள் பிரயாணத்தை மேற்கொண்டு றாணமடுவைச் சென்றடைந்து தாகம் தீர்த்து களைப்பாறிவிட்டு பிரயாணத்தை தொடர்ந்து பூச்சிக்கூடு கத்துன் வட்டையூடாக பிரயாணத்தை மேற்டிகொள்ளும் போது பூச்சுக்கூடு எனும் இடத்தில் சிறு பிள்ளையார் இருந்ததாகவும் இவர்கள் அதைத் தரிசித்துச் செல்வதும் வழக்கமாகும். அதற்கு அப்பால் செல்லும் போது வருவது மனித நடமாட்டம் அற்ற அடர்ந்த காட்டுப் பிரதேசமாகும். ஆத்துவா வட்ட, குப்பந்த, படுகாடு போன்ற பிரதேசங்களைக் கடந்து செல்லும் வேளையில் காட்டு மிருகங்களான யானை, கரடி, புலி போன்ற மிருகங்கள் வழிமறிக்கின்ற போது, பூச்சுக்கூட்டுப் பிள்ளையாரை நினைத்து மன்றாடுகின்ற வேளையில் அம் மிருகங்கள் விலகிச் சென்று வழிவிடுவதாகவும் அதன் பிற்பாடு பிரயாணத்தை மேற்கொண்டு கோணாவளை, கோம்பானை போன்ற இடங்களைச் சென்றடைந்து தமது தொழிலை மேற்கொண்டு வந்திருக்கின்றனர்.

இவ்வாறு எமது மூதாதையர்கள் தமது ஜீவனோபாயத்தை மேற்கொண்டு வருகின்ற வேளையில் எமது நாட்டின் முதலாவது பிரதம மந்திரியான D.S. சேனநாயக்கா அவர்களின் ஆட்சிக்காலத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட கல்லோயா குடியேற்றத் திட்டத்திற்காக கனரக வாகனங்களைக் கொண்டு காடுகள் அழிக்கப்பட்டன. இவ்வேளையில் காட்டு மிருகங்கள் எல்லாம் சிதறி நாலாபுறமும் ஓடியதாகவும், அவ்வேளையில் பல மிருகங்கள் வேட்டையாடப்பட்டதாகவும் எமது மூதாதையர் வாயிலாக அறியக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறு உருவாக்கப்பட்ட கல்லோயா குடியேற்றத்திட்டத்தில் ஒன்று தொடக்கம் நாற்பது குடியேற்றக் கிராமங்கள் அமைக்கப்பட்டதோடு மேலும் E பிளக், D பிளக் சின்னவத்த போன்ற கிராமங்களும் உருவாக்கப்பட்டு பல இடங்களைச் சேர்ந்த மூவின மக்களும் 1952, 1953ம், 1954ம் ஆண்டு காலப்பகுதியில் குடியேற்றப்பட்டார்கள். இவற்றுள் சில கிராமங்களில் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைநீலாவணையைச் சேர்ந்த மக்களும் குடியேறி வாழ்ந்துவருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ்வாறு குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு தமது ஜீவனோபாயத்தை மேற்கொள்வதற்காக அரசினால் அரிசி, பருப்பு, சீனி, மாசி, கருவாடு, கோதுமை மா போன்ற உலர் உணவுப் பொருட்கள் ரேசன் காட் மூலம் வழங்கியதோடு விவசாயத்தை மேற்கொள்வதற்கான மண்வெட்டி, அருவக்கத்தி, அலவாங்கு, கோடரி, வாளி, தாக்கத்தி, பிரட்டுக்கலப்பு, நுகம், மாடு போன்றவற்றை மானியமாக வழங்கியதோடு வரம்புக்கட்டுக் காசி, காணியைக் குழியெடுத்துச் செப்பனிடுவதற்கான நிதியும் வழங்கப்பட்டதாகவும் அறியக் கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02 11ம் கிராம புளியடிபிள்ளையார் ஆலயத்தின் வரலாறு

இவ்வாறு இவர்கள் வாழ்ந்து வருகின்ற வேளையில் 11ம் கிராமம் 51ம் இலக்க வீட்டைச் சேர்ந்த எனது தந்தையான இராமக்குட்டி தம்பிராசா என்பவர் 11ம் கிராமம் 55ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சுப்பிரமணியம் 11ம் கிராமம் 68ம் இலக்க வீடு கணபதிப்பிள்ளை சோமசுந்தரம் என்பவரையும் அழைத்துக் கொண்டு தங்கள் தேவைக்காக கம்பு தறிப்பதற்காக ஒற்றைக்கரத்தை வண்டியுடன் கத்துன் வட்டக் காட்டுக்குச் சென்று கம்பு தறித்துக்கொண்டு வரும் போது எனது தந்தை சுப்பிரமணியம் என்பவரிடமும் சோமசுந்தரம் என்பவரிடமும் "ஒரு பழைய ஆள்" கவனிப்பாரற்று இருக்கின்றார், அவரைக் கொண்டு போவோமா எனக் கேட்ட போது அவர் யாரென வினாவினார்களாம். நான் கொலனிக்கு வருவதற்கு முன்பு கோம்பானையில் தொழில் செய்யும் காலத்தில் நாங்கள் இவ் வழியால் வருகின்ற போது இவரை வழிபட்டுத்தான் செல்லுவோம். இப்போது அவர் யாரும் கவனிப்பார் அற்று புல் பூண்டு மூடிக் கிடக்கின்றார் என கல்லுருவான மரத்தடியில் கிடக்கும் பிள்ளையாரைக் காட்டினாராம். அத்தோடு கவனிப்பாரற்றுக்கிடந்த காலத்தில் நிகழ்ந்த ஒரு அற்புதத்தையும் இவர் அவர்களுக்கு கூறியுள்ளார். கல்முனைக்குடி, சாய்ந்தமருது, கரவாகு பிரதேசங்களைச் சேர்ந்த இஸ்லாமிய சகோதர இனத்தவர்கள் தமது தேவைகளுக்காக பல மாட்டு வண்டிகளில் தொடராக இவ்வழியூடாக வந்து காட்டில் தங்களுக்குத் தேவையான மரங்களை வெட்டிச் செல்வது வழக்கமாகும். இவ்வாறான வேளைகளில் சமைத்து பசியாறிச் செல்வதும் உண்டு. ஒரு நாள் சமைப்பதற்காக அடுப்பு மூட்டுவதற்கு கவனிப்பாரற்றுக் கிடந்த இப் பிள்ளையார் கல்லையும் தூக்கி வைத்து அடுப்பு மூட்டி மச்சம், மாமிசம் போன்றவற்றைச் சமைத்துச் சாப்பிட்டு வழக்கம்போல் தமது பயணத்தை மேற்கொள்வதற்காக வண்டில்களை எடுத்துச் செல்லும் போது அவ்விடத்திலே எல்லா வண்டில்களினதும் சில்லின் குத்துக்கால்கள் மள மளவென உடைந்துவிட்டது. அவர்கள் ஆச்சரியமடைந்து அயலில் இருந்தவர்களை அழைத்து சென்று பார்த்த போது பிள்ளையார் கல் அடுப்புக்கல் மூட்டப்பட்டிருந்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார்களாம்.

"நீங்கள் பிள்ளையார் கல்லை வைத்து அடுப்பு மூட்டி மச்சம் சமைத்துச் சாப்பிட்டிருக்கின்றீர்கள் அதுதான் இப்படி நடந்திருக்கின்றது" எனக் கூறினார்களாம். அதற்கு அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் தெரியாமல் செய்துவிட்டோம். அதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும் ” எனக் கேட்டிருக்கிறார்கள் . நேர்த்திக்கடன் வைத்து பூசை வழிபாடு செய்யுமாறு அவர்கள் கூறியதற்கமைவாக அவர்கள் ஊருக்கு வந்து தமிழரின் உதவியுடன் பூசைப் பொருட்களை வாங்கி வந்து தமிழர்கள் மூலம் பூசையைச் செய்து நேர்த்திக்கடனை நிறைவேற்றிச் சென்றதாகவும் அவருடைய அற்புதத்தைக் கூறியிருக்கிறார்.

இதைக் கேட்ட சுப்பிரமணியமும், சோமசுந்தரமும் சம்மதித்து பிள்ளையாரைத் தூக்கி தமது வண்டியில் வைத்து கொலனிக்கு எடுத்து வந்து சுப்பிரமணியத்தின் வளவுக்குள் ஒரு மரத்தடியில் பந்தலிட்டு பிள்ளையாரை வைத்து வழிபட்டு வந்தாராம். இவருக்கு சில கிரியைமுறைகள் தெரிந்த காரணத்தினால் இதனை மேற்கொண்டு வந்தார். எனது தந்தையார் மூலம் நான் அறிந்து கொண்ட விடயங்கள் இவை. இவ்வாறு இவர் வழிபட்டு வரும் நேரத்தில் சில அதிசயங்களையும், அச்சுறுத்தல்களையும் காட்டியிருக்கிறார், இவர் வீட்டில் வைத்து வழிபடுவதை எனது தந்தையார் விரும்பாத காரணத்தினால் இவரை ஒரு பொது இடத்தில் வைத்து வழிபட வேண்டும் எனக் கருதி இதை யாரிடம் சொல்லி செய்வது என்று யோசித்த போது இவருக்கு ஒரு எண்ணம் தோன்றியதாம். VO என அழைக்கப்படும் குடியேற்ற அதிகாரியான மூர்த்தி என்பவர் தற்போது இந்த ஆலயத்துக்கு அருகாமையில் இருந்து அகற்றப்பட்ட விடுதியில் தங்கியிருந்து குடியேற்ற கிராமங்களுக்கும், மக்களுக்கும் அரச அதிகாரியாக கடமையாற்றி வந்திருக்கின்றார் இரவுவேளைகளில் இவர் வந்து எனது தந்தையார் மற்றும் 52 இலக்கத்தைந் சேர்ந்த பூபாலப்பிள்ளை, 53ம் இலக்கத்தைச் சேர்ந்த சாமித்தம்பி ஆகியோருடன் நீண்ட நேரம் வரை உரையாடிவிட்டு தேனீர் அருந்தி வெற்றிலை போட்டு செல்வது வழக்கமாம். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் மூலம்தான் இதை செய்யவேண்டும் என எண்ணம் கொண்டு ஒரு நாள் வழக்கம் போல் இரவு வேளையில் உரையாடிக் கொண்டிருக்கும் போது இவ்விடயத்தை விளக்கமாக அந்த குடியேற்ற அதிகாரியிடம் எடுத்துக் கூறி நீங்கள் சொன்னால் அவர் கேட்பார் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க மறுநாள் இரவு இவர்கள் அனைவரும் ஒன்று கூடி சுப்பிரமணியம் என்பவரை அழைத்து கலந்துரையாடி எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவு எடுத்திருக்கின்றார்கள் அதுதான் இப்போது இருக்கின்ற ஆலயத்துக்கு தெற்கு பக்கமாகவும் அந்த குடியேற்ற அதிகாரி இருந்த அரச விடுதியும் ஆகும். (பிற்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைவாகிலிருந்து வந்து குடும்பத்தோடு தங்கியிருந்து நீண்ட காலமாக இந்த கிராமத்துக்கு சலவை தொழில் செய்து வந்த சின்னான் குடும்பம் இந்த விடுதியில் தங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. இவருடைய வாரிசுகள் இப்போதும் இந்த கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.)

மேற்குறிப்பிட்ட அரச விடுதிக்கும் தற்போதைய ஆலயத்துக்கும் இடைநடுவில் இரண்டு புளிய மரங்கள் கிட்டக் கிட்ட நின்றது நான் சிறுவனாக இருந்த போது எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது என் தந்தையார் 53ம் இலக்க வீட்டில் வசித்த சாமித்தம்பி என்பவர் 55ம் இலக்க வீட்டில் வசித்த சுப்பிரமணியம் என்பவர் 35ம் இலக்க வீட்டில் வசித்த கந்தையா என்பவர், 45ம் இலக்க வீட்டில் வசித்த ஆறுமுகம் என்பவர், 47ம் இலக்க வீட்டில் வசித்த முத்துவேல் என்பவர், 48ம் இலக்க வீட்டில் வசித்த தம்பியப்பா என்பவர் 49ம் இலக்க வீட்டில் வசித்த இளயதம்பி என்பவர், 50ம் இலக்க வீட்டில் வசித்த சீனிக்குட்டி என்பவர் 36ம் இலக்க வீட்டில் வசித்த மாயவர் என அழைக்கப்படும் கிருஸ்ணப்பிள்ளை என்பவர், 52ம் இலக்க வீட்டில் வசித்த பூபாலப்பிள்ளை என்பவர், 69ம் இலக்க வீட்டில் வசித்த சாத்திரியார் என அழைக்கப்படும் வேலிப்பிள்ளை என்பவர், 68ம் இலக்க வீட்டில் வசித்த சோமசுந்தரம் என்பவர், 86ம் இலக்க வீட்டில் வசித்த கணபதிப்பிள்ளை என்பவர் 44ம் வீட்டில் வசித்த முத்தர் என்பவர், இவர்களோடு இன்னும் சிலர் ஒன்று சேர்ந்து இந்த புளியமரத்தடியில் அந்த கல்லுப்பிள்ளையாரைக் கொண்டு வைத்து சிறு பொங்கலிட்டு பூசை வழிபாடு செய்து எல்லோருக்கும் பகிர்ந்தளித்தார்கள் நானும், எனது தாய் தந்தையருடன் பொங்கல் வாங்கி சாப்பிட்டது இப்போதும் ஞாபகமிருக்கிறது. இந்த இரு புளிய மரங்களுக்கும் இரு சுவையுள்ளது. ஒன்று சீனிப்புளி என்றும் ஒன்று தவுட்டுப்புளி என்றும் சொல்வார்கள். சாப்பிடும் போது இரண்டு சுவைகள் தென்படும். இதற்கு தெற்குப்பக்கமாக 100 M தூரத்தில் ஒரு புளியமரம் நிற்கிறது. இதன் அடியில் ஒரு சிறு கல் ஒன்று இருக்கிறது அதிசயம் என்னவென்றால் நாங்கள் சிறுவர்களாக இருந்த போதும் இன்றும் அதே உருவத்தில்தான் அந்தபுளியமரமும் கல்லும் இருக்கிறது. வளர்ச்சி அடையவில்லை. அந்த புளியமரமும் அந்தக் கல்லும் தற்போது பாடசாலை வளவிற்குள் காட்சியளித்துக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நாங்கள் பாடசாலை முடிந்தவுடன் முண்டியடித்துக் கொண்டு ஓடி வந்து இந்த மூன்று புளியமரங்களிலும் புளியம் பழம் பொறுக்கி சாப்பிடுவது வழக்கம். ஆனால் சிறிது காலத்தின் பின் அந்த இரு புளிய மரங்களையும் நான் மேலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லோயா குடியேற்றத்திட்டத்துக்கு முந்திய வரலாற்றை கொண்ட இக்கல்லூம் புளிய மரமும் (11ம் கிராமம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டவர்களெல்லாம் சேர்ந்து கோடரி கொண்டு வெட்டி வீழ்த்தி விட்டார்கள். இதிலுள்ள புளியம் பழங்களையெல்லாம் ஓலைப்பெட்டிகளிலும், குட்டிச்சாக்குகளிலும் எடுத்துச் சென்றதோடு சிலர் நமது தாயகமான துறைநீலாவணைக் கிராமத்துக்கு விற்பனைக்காக எடுத்துச் சென்றார்கள்.

இன்னும் ஒரு விடயம் எனது நினைவுக்கு வருகிறது, ஒரு நாள் இரவு வேளையில் எங்கள் பக்கத்திலுள்ள தாய்மார்களெல்லாம் ஒன்று கூடி ஏதோ பேசுகிறார்கள் எனக்கு அரைகுறையான நித்திரை. அப்போது எனது தந்தையார் வந்து கூறுகிறார் பறயனுக்கு சோறு சமைக்க வேண்டும் என்று களுதாவளைக்கு போய் பறயனை அழைத்துக்கொண்டு அன்னமலைத் துறையால் அக்கரப்பட்டு வருவதற்கு நேரம் போய்விட்டதென்று பேசிக் கொண்டார்கள் அப்போது பறைமேளம் கேட்கின்றது நானும் விழித்துக் கொண்டேன் எனக்கு ஒரு புது அனுபவமாக இருந்தது.

எல்லோரும் கோயிலுக்கு போவதற்கு ஆயத்தமாகுகிறார்கள். எனது தாயாரும், 53ம் இலக்க வீட்டைச் சேர்ந்த பூபதிப்பிள்ளையும், 47ம் இலக்க வீட்டைச் சேர்ந்த மாரிமுத்து என்பவரும் குப்பி விளக்கைக் கொண்டு எங்கள் வளவுக்குள் நின்ற மிளகாய்ச்செடியில் மிளகாய் ஆய்கின்றார்கள். நானும் அம்மாவுடன் சென்றுவிட்டேன். அம்மாவுக்கு கூட வந்த இரு தாய்மார்களும் என்னை கிண்டல் செய்கின்றார்கள் இளந்தாரிப்பிள்ளைக்கு அம்மாட முத்தானையை பிடித்துக் கொண்டு திரிவதற்கு வெட்கமில்லையா என்று கேட்கிறார்கள். அவர்கள் இருவருமே எனக்கு மாமிமார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதற்குப்பிறகுதான் நான் அறிந்து கொண்டேன் அன்று இரவு மஹா சிவராத்திரி விரதம் என்று அதற்கு பிற்பட்ட காலங்களில் சிவராத்திரி ஆடி அமாவாசை போன்ற முக்கிய விரத காலங்களில் ஆலயத்தில் பூசை முடிந்தவுடன் ஆலயத்தில் போதிய வெளிச்ச வசதிகள் இல்லாத காரணத்தினால் குழுக்களாக வீடுகளில் விழித்திருப்பது வழக்கமாகும். எங்கள் வீட்டில் பெண்கள் சிலர் ஒன்று கூடிவிடுவார்கள். இவர்களுக்கெல்லாம் தலைவியாக 56ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சுந்தரக்கிழவி என்பவர் செயல்படுவார். இவர் தற்போது தீசர் என்று அழைக்கப்படும் ஜெகதீசனின் தாயார் ஆவார். இவர் புராண இதிகாசங்களை நன்கு கற்றுணர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய கணவர் ஒரு மந்திரவாதியும், விசவைத்தியரும், நாட்டு வைத்தியருமாவார். இவருடைய பெயர் சுந்தரமூர்த்தி இதனால்தான் இவரை சுந்தரக்கிழவியென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவராலும் அழைக்கப்படுவார் ஒன்று கூடிய பெண்கள் மத்தியில் இவர் கதை சொல்ல ஆரம்பிப்பார்.

புராண இதிகாசக் கதைகள்
கர்ண மஹா ராஜன் கதைகள்
போஜமஹா ராஜன் கதைகள்
விக்கிரமாதித்தன் கதைகள்
கண்டிராஜன் கதைகள்
ஏளுபிள்ளை நல்லதங்காள் கதைகள்
அபூர்வ சக்கரவர்த்தியும், நவகோடி நாராயணச் செட்டியும்
என்ற கதைகளைக் கூறி கூடியிருக்கும் எல்லோரையும் அதிசயத்தில் ஆழ்த்திவிடுவார். இரவும் விடிந்துவிடும் எல்லோரும் கலைந்து சென்று விடுவார்கள்.

ஆரம்பத்தில் பந்தலின் கீழ் வைத்து பூசை செய்தவர்கள் ஒரு ஓலைக் கொட்டிலை அமைத்து கிடுகால் சுற்றிவர மறைத்து வழிபட்டார்கள் இந்தக்காலப் பகுதியில் ஓலைக் கொட்டிலுக்கு அருகாமையில் வடக்கு பார்த்தமுகமாக கருங்கல்லால் ஒரு அறையில் எந்தவித திட்டமிடலும் இல்லாமல் கட்டப்பட்டது. அவை நிறைவேறவில்லை. இந்த கட்டடம் பிற்காலத்தில் எங்களால் இடித்து அகற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த காலப்பகுதியில் என்னால் முன் சொல்லப்பட்ட மூத்தவர்களின் நிருவாக கட்டமைப்பு பலவீனம் அடைகிறது. அந்த நேரத்தில் இளைஞர்களாகவிருந்த 56ம் இலக்க வீட்டைச் சேர்ந்த ஜெகதீசன் என்பவர், 52ம் இலக்க வீட்டைச் சேர்ந்த இளயதம்பி என்பவர், 95ம் இலக்கத்தை சேர்ந்தவரும் அகாலமரணத்தை தழுவிக் கொண்டவருமான வினாயகம் என்பவரும், 90ம் இலக்கத்தை சேர்ந்த ஓடாவி பொன்னம்பலம் என்பவரும், 82ம் இலக்கத்தை சேர்ந்த இலச்சுமணன் என்பவரும், 79ம் இலக்க வீட்டைச் சேர்ந்த நாராயணன் என்பவரும், இன்னும் சில இளைஞர்களும் சேர்ந்து ஜெகதீசன் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு நிருவாக கட்டமைப்பை உருவாக்கி செயற்படத் தொடங்கினார்கள்.

பழைய புளிய மரம் தறித்த இடத்தில் சீமெந்துக்கல்லால் ஒரு அறையில் ஒரு கட்டடத்தை கட்டி ஓடுபோட்டு, 52ம் இலக்க வீட்டில் இருந்த ஒரு கதவும் நிலையும் கொண்டு போட்டு அந்தக் கோயிலுக்குள் இந்தக் கல்லுப்பிள்ளையாரை வைத்து பூசை செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார்கள். பின்னர் அதோடு சேர்ந்து கிழக்கு முகமாக மூன்று மண்டபங்களுக்கான அத்திவாரம் போட்டு சில தூண்களும் கட்டப்பட்டது. ஒரு நாலு ஐந்து அடி உயரத்தில் கட்டியிருந்தார்கள். இந்தக் காலப்பகுதியில்தான் வெள்ளிக்கிழமைப் பூசை ஆரம்பித்தார்கள். வெள்ளிக்கிழமை பூசை செய்யும் உபயகாரருக்கு பூசை முடிந்ததும் குருக்கள் அவர்களால் பூமாலை அணிவித்து காளாஞ்சி கொடுத்து கௌரவிக்கப்படுவார்கள்.

11 / 13ம் இலக்க வீட்டைச் சேர்ந்த (இலுப்பைக்குளம்) கனகரெட்ணம் என்பவரும் இந்த இளைஞர் குழாத்தோடு இணைந்து செயற்பட்டு வெள்ளிக்கிழமைப் பூசை செய்து மாலை அணிவித்து காளாஞ்சி வழங்கப்பட்ட நிகழ்வு இன்னும் எனக்கு நினைவு இருக்கிறது 11 / 23ம் இலக்க வீட்டைச் சேர்ந்த நாகராசா என்பவரும் இவர்களோடு இணைந்து செயல்பட்டது குறிப்பிடத்தக்கது. காரணம் அந்தக் காலத்தில் இலுப்பைக்குளத்து கோயில் உருவாகவில்லை. பனம்காட்டு ஐயர் என்று அழைக்கப்படும் 79ம் இலக்க வீட்டில் வசித்த சோமசுந்தரம் ஐயர்தான் இந்தக் கோயிலில் குருக்களாக கடமையாற்றியவர். அதற்கு பிறகு அவருடைய மகன் நாராயணன் என்பவர் குருக்களாக கடமையாற்றியுள்ளார். குருக்களாக மட்டும் இல்லை நிருவாக சபையோடும் இணைந்து செயல்பட்டு பல சேவைகளை செய்துள்ளார். இந்தக்காலப்பகுதியில்தான் திருவெம்பாவைப் பூசையும் ஆரம்பிக்கப்பட்டது. அதிகாலை வேளையில் மழைபெய்து கொண்டிருக்கும் பக்கத்து வீட்டுக்காரரான 52ம் இலக்க வீட்டைச் சேர்ந்த இளயதம்பி என்பவர் என்னையும் 49ம் இலக்க வீட்டைச் சேர்ந்த தெய்வேந்திரன் என்பவரையும் கூட்டிக் கொண்டு இளயதம்பி அவருடைய அம்மா பிட்டும் களியும் அவித்துத் தருவார் அவற்றைக் கொண்டு கோயிலுக்குச் சென்று ஜெகதீசன் அவர்களும் நாராயணனும் வருவார் ஒரு நாலு ஐந்து பேர் கூடியிருப்போம் தேங்காயெண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் பூசை நடைபெறும்.

பின்னர் அந்தப் பிரசாதத்தை நாங்கள் பகிர்ந்து எடுத்துக் கொண்டு வீடு செல்வோம். இந்தக் காலப்பகுதியில் மேடை நாடகம் வளர்ச்சியடைந்த காலம் ஜெகதீசன் அவர்கள் பல இளைஞர்களை இணைத்துக் கொண்டு புத்தொளி நாடகமன்றத்தை உருவாக்கி பல நாடகங்களை மேடையேற்றியுள்ளார். நாடக ஆசிரியராகவும், தயாரிப்பாளர், நடிகனாகவும் இவரே சகல ஒழுங்குகளையும் செய்வார். இவர் தயாரித்து மேடையேற்றிய நாடகம் பல இவற்றில் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்கள் எனக்கு நினைவு இருக்கிறது. இரத்தக் கண்ணீர், சங்கிலியன், மாவீரதக்கன் ஆலயத்துக்கு தெற்கு பக்கமாக கொட்டகை அமைத்து மாவீரதக்கன் நாடகத்தை ரிக்கட்டுக்கு மேடையேற்றி பெரும் வரவேற்பை பெற்றுள்ளார். அக்காலத்தில் மின்சார வசதி இல்லாத காரணத்தால் சிவராத்திரிக்கு ஒரு மாதத்துக்கு முன்பே முற்பணம் செலுத்தி ஒலிபெருக்கி மின் பிறப்பாக்கி என்பவற்றை பதிவு செய்ய வேண்டும் தவறினால் அந்த வருடம் ஒலிபெருக்கி "லைற்" மெசின் இல்லாமல்தான் பெற்றோல் மெச் வெளிச்சத்தில் சிவராத்திரி நடைபெறும். அவ்வாறு நடைபெற்றதும் உண்டு காரணம் சாந்தி எலக்ரோன் என்று கல்முனையில் இரண்டு தனியார்தான் இந்த சாதனங்களை வைத்திருந்தார்கள். நமக்கு முன்வேறுயாராவது முன் கூட்டி பதிவு செய்தால் அந்த சந்தர்ப்பம் நமக்கு இல்லாமல் போய்விடும்.

சிவராத்திரி ஆடி அமாவாசை போன்ற உற்சவ காலங்களில் ஜெகதீசன் என்பவர் சிறந்த ஓவியர் என்ற காரணத்தினால் தோரணங்கள், வளைவுகள் போன்ற பல விதமான அலங்கார வேலைப்பாடுகளை செய்து ஆலயத்தையும், நாடக மேடையும் மிகவும் சிறப்பாக அழகுபடுத்துவார். நானும், இன்னும் சிலரும் வயதில் சிறியவர்களாக இருந்தாலும், இவர்களுக்குப் பின்னால் எடுபிடி வேலை செய்வதில் மிகவும் ஆர்வத்தோடு செயற்படுவதுண்டு.

இந்தக் காலப்பகுதியில்தான் புதிதாக ஒரு ஆலயத்துக்கு அத்திவாரம் இடப்பட்டது நமது அனைவருக்கும் தாயகமான துறைநீலாவணை கிராமத்தில் அமைந்துள்ள பெரிய பிள்ளையார் ஆலயத்தை நேரில் சென்று பார்வையிட்டு முற்றுமுழுதாக அதே அமைப்பில் இப்போது புதிய ஆலயம் இருக்கும் இடத்தில் கருவறையோடு சேர்த்து நான்கு மண்டபங்களைக் கொண்ட ஒரு அத்திவாரத்தை அமைத்தார்கள். இந்த ஆலயம் ஆகமத்தின்படி அமைந்த தேவ ஆலயம் அல்ல முற்றுமுழுதாக மடாலய அமைப்பைக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. அந்தவேளையில் இவர்களுக்குள் ஒரு பின்னடைவு ஏற்படுகின்றது. காரணம் நான் முன்சொல்லிய இளைஞர் குழாத்திலுள்ளவர்கள் இலட்சுமணன் என்பவர் இந்த மாவட்டத்தைவிட்டு வெளிமாவட்டத்துக்கு சென்றுவிட்டார். ஓடாவி பொன்னம்பலம் என்பவர் திருமணம் முடித்துச் சென்றுவிட்டார். இளயதம்பி என்பவர் 4ம் கிராமத்துக்கு திருமணம் முடித்துச் சென்றுவிட்டார். 95ம் இலக்க வீட்டைச் சேர்ந்த வினாயகம் என்பவர் 66ம் இலக்க வீட்டில் திருமணம் முடித்து வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தபோது அகால மரணமடைந்துவிட்டார். இந்த வினாயகம் என்பவர் சாதாரணமாகப் பேசும்போதும் பழகும் போதும் மிகவும் விகடமாகவும், நகைச்சுவையாகவும் பேசுவார். இவர் அனேகமாக நகைச்சுவை பாத்திரங்களைத்தான் ஏற்று நடிப்பார். நாடகங்களில் இவர் மேடைக்கு வந்தால் எல்லோரையும் சிரிப்பில் மூழ்கடித்துவிடுவார். தென் இந்திய நடிகர் வைகைபபுயல் வடிவேலையும் மிஞ்சுமளவுக்கு நகைச்சுவை நடிகர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரும் ஜெகதீசன் என்பவரும் யோடிப் புறாமாதிரி நாடகத்திலும் நிருவாக சபையிலும் செயல்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 79ம் இலக்க வீட்டைச் சேர்ந்த நாராயணன் என்பவர் அவரது சொந்த ஊரான பெரியநீலாவணைக்கு திருமணம் முடித்துச் சென்றுள்ளார். நாங்கள் இவரை செல்லமாக சாண்டோ என்று அழைப்பது வழக்கம்.

இந்தக் காலப்பகுதியில் ஆலய நிர்வாகம் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்டது. ஒரு தடவை இந்தக் கல்லுப்பிள்ளையாரை யாரோ தூக்கி கொண்டு போய் பெரிய வாய்க்காலுக்குள் போட்டுவிட்டார்கள். சில நாட்களுக்கு பிறகு சல்லுப்புல்லோடு உரிய இடத்தில் இருந்ததைக் கண்டு எல்லோரும் அதிசயமாகப் பேசிக் கொண்டார்கள். இவ்வாறான செயலை ஏன் செய்கின்றார்கள் என்றால் மழை குறைந்து வரட்சியால் வேளாண்மை பயிர்கள் வாடுகின்ற போது இவ்வாறு பிள்ளையாரை நீர்நிலைகளில் புதைத்து வைக்கும் போது ஓரிரு நாட்களில் மழை பெய்யும் என்னும் நம்பிக்கை அக்காலத்தில் இருந்தது. மழை பெய்தபின் புதைத்து வைத்தவர் பிள்ளையாரை மீண்டும் கோவிலுக்குள் கொண்டு வந்து பூசை வழிபாடு செய்வது வழக்கமாக இருந்தது. 1970ம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது நான், 48ம் இலக்க வீட்டைச் சேர்ந்த நண்பர் காலஞ்சென்ற சின்னத்துரை, 45ம் இலக்க வீட்டைச் சேர்ந்த வினாயகப்பிள்ளை, 59ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சின்னத்தம்பி, 93ம் இலக்க வீட்டைச் சேர்ந்த வட்டவிதானை முத்துக்குமார் ஆகியோர் ஒன்றிணைந்து மீண்டும் ஜெகதீசன் அவர்களை தலைவராகக் கொண்டு ஒரு நிருவாகக் கட்டமைப்பை உருவாக்கி செயல்பட ஆரம்பித்தோம். மஹா சிவராத்திரி, ஆடி அமாவாசை, விரதம் சித்திரகுப்த, விரதம் திருவெம்பாவை போன்ற உற்சவங்கள் தவறாமல் நடைபெறும் ஆலய தேவைக்காக நாங்கள் வீடு வீடாகச் சென்று நிதி அறவீடு செய்வது வழக்கம். 50 சதம் ஒரு ரூபா சிலர் இரண்டு ரூபா தாளும் தருவார்கள் சிலர் ஏளனம் செய்வார்கள் சிலர் அக்கறையோடு உதவி செய்வதும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக்காலத்தில் சிறுபோகம் செய்வது குறைவு. பொருளாதாரச் சிக்கல் சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் இந்த நாட்டின் பிரதமராக இருந்த காலம் அரிசி நெல்லை வெளியில் கொண்டு போகமுடியாது பொருட்கள் கண்டு வாங்குவது கடினம் காரணம் வெளிநாட்டு பொருட்கள் எதுவும் இல்லை உள்ளூர் உற்பத்திக்கு முதலிடம். ஒருபை சீமெந்து 12 ரூபா அதுவும் கூட்டுறவுக்கடைகள் மூலம்தான் கொள்வனவு செய்யலாம்.

இந்தக் காரணங்களால் புதிய ஆலய கட்டுமாணப்பணிகள் மிகவும் குறைந்த வேகத்தில்தான் தொடரமுடிந்தது. ஒரு சிலருக்கு ஆலயத்தின் மீது ஈடுபாடு குறைவாகவே காணப்பட்டது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களான 66ம் இலக்க வீட்டைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி புவனன் என்பவர்கள் சிறுவர்களாக இருந்தாலும் பூசை நேரங்களில் சில உதவிகளை அக்கறையோடு செய்வார்கள். இவர்கள் இருவரும் சகோதரர்கள்.

1973ம் ஆண்டு ஜெகதீசன் அவர்கள் 3 நாடகங்களைத் தயாரித்தார். மார்கண்டேயர், பக்தவல்லாளன், மாபெரும் அலக்சாண்டர் கதைவசனம் தயாரிப்பு சகலதும் அவருடைய ஒழுங்கமைப்புத்தான். நடிகர்களாக 48 இலக்க வீட்டைச் சேர்ந்த சின்னத்துரை, 45ம் இலக்க வீட்டைச் சேர்ந்த வினாயகம்பிள்ளை, 59ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சின்னத்தம்பி, 51ம் இலக்க வீட்டைச் சேர்ந்த கணேசமூர்த்தி, 53ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சிவலிங்கம், 55ம் இலக்க வீட்டைச் சேர்ந்த வடிவேல், 69ம் இலக்க வீட்டைச் சேர்ந்த பரசுராமன், 66ம் இலக்க வீட்டைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி, மணல் கும்பத்தடி சந்தியில் தேனீர்க்கடை வைத்திருந்து காலம்சென்ற வேலிப்பிள்ளை ஆகியோரை கொண்டு இந்து மகாவித்தியாலய மண்டபத்தில் ரிக்கட்டுக்காக மேடையேற்றப்பட்டது. மிகுந்த வரவேற்பும் மக்கள் ஆதரவும் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஏனோ தெரியாது இந்த நாடகத்துடன் ஜெகதீசன் அவர்கள் நாடகத்துறையிலிருந்து ஒதுங்கிவிட்டார். இதற்கு பிறகு நாங்கள் பல நாடகங்களை மேடையேற்றியுள்ளோம் இதற்கு அவர் வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் செயற்பட்டுள்ளார். ஆடி அமாவாசை மகாசிவராத்திரி படர்கல் பத்தினியம்மன் ஆலய உற்சவகாலங்களில் நாங்கள் தவறாமல் நாடகங்களை மேடையேற்றுவது வழக்கம். மேடை நாடகங்களுக்கு மிகுந்த வரவேற்பு இருந்த காலம் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வரிசைகளில் நாங்கள் மேடையேற்றிய நாடகங்களின் பெயர்கள்
விசுவாமித்திரர்
ஓரிரவு
எங்கிருந்தோ வந்தான்
வஞ்சம்
கடமை
மக்களாட்சி
பழிதீர்த்த பாண்டியன்
நல்ல நாடகமிது. இவ்வாறான செயலில் ஈடுபடுவது ஆலயத்தைப் பரிபாலனம் செய்வது பொதுப்பணிகளில் ஈடுபடுவது புதிய ஆலயக்கட்டுமானப் பணிகளை தொடர்ந்து கொண்டிருந்த வேளையில் நண்பர் சின்னத்துரையும் நானும் திருமணபந்தம் காரணமாக கிராமத்தைவிட்டு வெளியேறியிருந்தோம்.

1977ம் ஆண்டு நாங்கள் வெளியேறினாலும் எங்களோடு இணைந்த மற்றவர்கள் இந்தப் பணியை தொடர்ந்தார்கள். இந்தவேளையில் ஒரு இயற்கை அனர்த்தம் நிகழ்ந்தது. 1978ம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ம் திகதி வியாழக்கிழமை இரவு யாரும் எதிர்பாராத விதத்தில் 120 மைல் வேகத்தில் கடும் சூறாவளி வீசியது. இதோடு சேர்ந்து கடும் மழையும் பெய்தது, மாலை ஐந்து மணியளவில் ஆரம்பித்த காற்று படிப்படியாக வேகம் கூடி இரவு ஒன்பதுமணியாகும்போது அசுர வேகத்தில் வீசியது. ஓட்டு வீடுகளெல்லாம் ஓட்டை வீடுகளாக மாறியது. மரங்களெல்லாம் முறிந்து வீடுகளுக்குமேல் விழுந்தது நள்ளிரவு இரண்டு மணிக்குபிறகு காற்றின் வேகம் சற்று குறைவடைந்து நிலவு ஒளி மங்கலாக தெரிந்தது. இதற்கு பிறகுதான் எல்லோரது மனங்களிலும் சற்று நிம்மதி பிறந்தது விடிந்து பார்த்தால் ஆடு மாடு கோழிகள் எல்லாம் இறந்து காணப்பட்டன. மரங்கள் முறிந்து வீதியெல்லாம் மூடிக்கிடந்தன. நடந்து செல்லுவதற்குக்கூட பாதை இல்லை. சில மரணங்கள் கூட ஏற்பட்டது. எனது மனைவியின் தாயார் கூட இந்த அனர்த்தத்தில் மரணம் அடைந்துள்ளார். கண்ணுக்கு எட்டிய தூரம் வரையும் வெட்ட வெளியாக பாலைவனம் போல் காட்சியளித்தது. வீடுகள், அரச உயர்ந்த கட்டடங்கள் எல்லாம் தரைமட்டமானது பதிந்த ஓலைக்குடிசைகள் ஓரளவு பாதுகாப்பாக இருந்தது. அரச உடமைகள் எல்லாம் மக்களால் கொள்ளையடிக்கப்பட்டன. எமது ஆலயத்துக்கு வடகிழக்குத் திசையில் நூறு மீற்றர் தூரத்தில் ஒரு பாரிய தொழிற்சாலை அமைந்திருந்தது. சுமார் நூறு மீற்றர் தூரத்தைக் கொண்ட இரு பக்கமும் பாரிய அறைகளைக் கொண்ட மண்டபமும் இதற்கு கிழக்குத் திசையில் இதே நீளத்தைக் கொண்ட மண்டபமும் இதோடு சேர்த்து பத்து அறைகளைக் கொண்ட புகையிலையை பதப்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெதுப்பகமும் அமைந்திருந்தது. இது சீமெந்துக் கற்களாலும் காட்டு மரங்களாலும் தகரத்தினாலும் அமைக்கப்பட்ட கட்டடமாகும். இந்த சூறாவளியினால் தொழிற்சாலை தரைமட்டமானது. 500m தூரத்துக்கு அப்பாலும் பலரின் வளவுகளுக்குள்ளும் தகரங்கள் காணப்பட்டது. மறுநாள் எஞ்சியுள்ள தகரங்கள், கற்கள், மரம்தடிகள், தொழிற்சாலையிலுள்ள முக்கிய உபகரணங்கள், தளபாடங்கள் எல்லாம் பொதுமக்களால் எடுத்துச் செல்லப்பட்டன. இந்த தொழிற்சாலையானது 1960ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இலங்கை சிகரட் கம்பனி விவசாயப் பகுதியுடன் இணைந்து சிகரட் புகையிலைப் பயிற்ச் செய்கையை மேற்கொண்ட நிலையமாகும். இந்த இடத்தில் தற்போது அகத்தியர் வித்தியாலயம் அமைந்திருக்கின்றது.

இந்த இயற்கை அனர்த்தத்தினால் மக்களுக்கு பெரும் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டது. இது மாத்திரம் அல்ல 1956, 1977, 1981, 1983ம் ஆண்டுகளில் நமது நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரங்கள் இதற்கு பிறகு தொடராக நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகள் ஆலய வளர்ச்சிக்கு ஒரு தடையாக அமைந்தது என்று கூடச் சொல்லலாம்.

இந்தக் காலப் பகுதியில் நிருவாகக் கட்டமைப்பிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது. ஜெகதீசன் அவர்களின் தலைமைக்குப் பிறகு 45ம் இலக்க வீட்டைச் சேர்ந்த வினாயகம்பிள்ளை அவர்களை தலைவராகக் கொண்ட நிருவாகக் கட்டமைப்பு பலத்த சிரமத்துக்கு மத்தியிலும் பல பணிகளை செய்து இருக்கிறார்கள். இந்தக்காலப் பகுதியில் சில முன்னேற்றகரமான மாற்றங்களும் ஏற்பட்டதை குறிப்பிடலாம்.

இதற்கு பிறகு 70ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சுப்பிரமணியம் அவர்களைத் தலைவராகக் கொண்ட நிருவாகக் கட்டமைப்பு இந்த பணியை சிறிது காலம் செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்குப் பிறகு 49ம் இலக்க வீட்டைச் சேர்ந்த அருணாசலம் என்பவரை தலைவராகக் கொண்ட ஒரு நிருவாகக் கட்டமைப்பு உருவாகி இவரோடு 59ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சின்னத்தம்பி 91ம் இலக்க வீட்டைச் சேர்ந்த நாகப்பன், 58ம் இலக்க வீட்டைச் சேர்ந்த அருட்பிரகாசம் ஆகியோர் ஒன்றிணைந்து தலைவர் செயலாளர் என்ற வேறுபாடு இல்லாமல் தொண்டர்கள் என்ற அடிப்படையில் ஆலயத்துப்பரவு பூசை வழிபாடுகளை தவறாமல் ஆலயத்தில் மேற்கொள்ளுவது நிதி திரட்டுவது நீண்ட காலமாக ஆரம்பிக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேறாமல் கிடந்த ஆலய கட்டுமானப்பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளல் போன்ற பல பணிகளை அக்கறையோடும், ஆர்வத்தோடும் செயல்பாடுகளை மேற்கொண்டனர். இவர்களுக்கு பக்கபலமாக பல இளைஞர்களும் பொது மக்களும் நன்கொடைகள் பல்வேறுபட்ட உதவி ஒத்தாசைகள் வழங்கியதன் காரணமாக கிட்டத்தட்ட முப்பது வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இந்த புதிய ஆலய கட்டுமானப்பணியை அருணாசலம் அவர்களின் தலைமையிலான நிருவாக சபையின் முயற்சியாலும் பொதுமக்களின் பங்களிப்பாலும் முற்றுமுழுதாக ஆலயப் பணியை நிறைவு செய்து 1998ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இந்த கிராமத்தின் ஆலயத்தினது வரலாற்று பதிவாகும். இந்த காலப்பகுதியில் 45ம் இலக்க வீட்டைச் சேர்ந்த ஆறுமுகம் குடும்பத்தினர் ஆலயத்துக்கு வடமேற்கு மூலையில் ஒரு கிணற்றையும் பரிவாரக் கோயிலாக முருகன் ஆலயத்தையும் அமைத்துள்ளனர் என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

இதன் பின்னர் நிருவாகசபையில் மாற்றங்கள் ஏற்பட்டதை அறியமுடிகிறது. 53ம் இலக்க வீட்டைச் சேர்ந்த மோகன் என்பவரை தலைவராகக் கொண்ட நிருவாகசபை சிறிதுகாலம் இந்தப் பணியை தொடர்ந்த போது மீண்டும் நிருவாக சபையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. 66ம் இலக்க வீட்டைச் சேர்ந்த கண்ணதாசன் என்பவரை தலைவராகக் கொண்ட நிருவாகசபை இந்த பணியை ஏற்று முன் சொல்லப்பட்ட ஆலயம் தேவாலயமாக அமையாமல் மடாலயமாக அமைந்ததன் காரணத்தால் அவற்றை அகற்றி அப்புறப்படுத்திவிட்டு ஆகம விதிப்படி தேவாலய அமைப்பை கொண்ட ஒரு ஆலயத்தை அமைக்கும் பணியை தொடர்ந்து பொதுமக்களின் பங்களிப்போடும் ஒத்துழைப்போடும் நிருவாகசபையினரின் கடுமையான முயற்சியாலும் புலம்பெயர் உறவுகளின் அன்பளிப்பாலும் உழைப்பாலும் மிகக் குறைந்த காலத்துக்குள் நாகதம்பிரான் ஆலயம், முருகன் ஆலயம், சண்டேஸ்வரர் ஆலயம், நவக்கிரக ஆலயம், வைரவர் ஆலயம் மற்றும் வசந்தமண்டபம் மணித்தூண் போன்ற பரிவாரக் கோயில்களோடு பிரமாண்டமான ஒரு ஆலயத்தை அமைத்து சிறப்பான முறையில் 2018ம் ஆண்டு கும்பாபிசேகம் நடைபெற்றது. இவ்வளவு விரைவாக குறிப்பிட்ட காலத்துக்குள் இந்தப் பணியை நிறைவு செய்து குடமுழுக்குச் செய்தமை கண்ணதாசன் தலைமையிலான தர்மகர்த்தா சபையினரின் சிறந்த செயற்பாட்டுக்கான சான்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆலயத்தில் இன்னும் சில வேலைகள் காணப்படுகின்றது. தெற்கு வாசல் ஜாகசாலை அன்னதானமடம் போன்ற தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டால் சிறந்த ஒரு தலமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த ஆலயம் தோற்றம் பெற்ற காலம் முதல் இன்றுவரையும் இந்த ஆலயத்தின் தர்மகர்த்தா சபை தலைவர்களாக இருந்து சேவையாற்றியவர்களின் பெயர் விபரம்.

01. சுந்தரமூர்த்தி ஜெகதீசன் 11 / 56 ஆம் இல. வீடு

02. ஆறுமுகம் விநாயகம் பிள்ளை 11 / 45 இல. வீடு

03. சுப்பிரமணியம் 11 / 70 இல. வீடு

04. ஏரம்பு அருணாசலம் 11 / 49 இல. வீடு

05. நாகராசா மோகன் 11 / 53 இல. வீடு

06. இராசகோபால் சசிகரன் 11 / 49 இல. வீடு

07. கணகரட்ணம் கண்ணதாசன் 11 / 66 இல. வீடு

08. புண்ணியமூர்த்தி காந்தரூபன் 11 / 51 இல. வீடு

09. ஆறுமுகம் சிவானந்தராசா 11 / 11 இல. வீடு என்பவர் தற்போது இந்த ஆலயத்தின் தர்மகர்த்தா சபை தலைவராக கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

பூச்சிக் கூட்டு பிள்ளையாராக இருந்து 11ம் கிராமத்தில் புளியடியில் வந்தமர்ந்து கோயில் கொண்டெழுந்தருளிய அந்த பழைய கருங்கல் விக்கிரகம் தற்போது புதிதாக அமைக்கப்பட்டு கும்பாபிசேகம் செய்யப்பட்ட ஆலயத்தில் அர்த்த மண்டபத்தில் தெற்கு பக்கமாக பீடம் அமைத்து வைத்து வழிபாடு நடைபெறுகின்றது.

பூச்சிக் கூட்டில் இருந்து இந்த பிள்ளையாரைக் கொண்டு வந்து இந்தப் புளியடியைத் தேர்ந்தெடுத்து ஆலயத்தை தோற்றுவித்த ஸ்தாபகர்களை நாம் என்றென்றும் நினைவில் கொள்ளத்தக்கவர்கள்.

பரிவாரக் கோயில்களை அமைத்துக் கொடுத்தவர்களின் பெயர் விபரம்.

01. )வசந்தமண்டபம் 11/93ம் இலக்க வீடு சா. சிவலிங்கம் குடும்பம்.

02. )நாகதம்பிரான் ஆலயம் 11/94ம் இலக்க வீடு வே. கோபாலசிங்கம் குடும்பம்.

03. )முருகன் ஆலயம் 11/45ம் இலக்க வீடு ஆறுமுகம் குடும்பம்.

04. )நவக்கிரக ஆலயம் 75ம் இலக்க வீடு சா. புண்ணியமூர்த்தி குடும்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. ) சண்டேஸ்வரர் ஆலயம் 48ம் இலக்க வீடு த. அருட்பிரகாசம் குடும்பம்.
06. ) வைரவர் ஆலயம் 11/49ம் இலக்க வீடு இளையதம்பி குடும்பம்.

## தர்ம நன்கொடை

பல பொது தேவைகளுக்கு பயன்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள அரச காணிகளை ஒரு சிலரால் கையகப்படுத்தப்பட்ட போதிலும் தர்ம சிந்தனையுள்ள 11/49 ம் இல. வீட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற இளையதம்பி என்பவர் 11ம் கிராம புளியடிப்பிள்ளையார் ஆலயத்தின் மீது கொண்ட பக்தி பற்றுதல் காரணமாக பாம்வட்டை கண்டத்தில் தனக்கு சொந்தமான ஒரு ஏக்கர் நெற்காணியை 11ம் கிராம புளியடிப்பிள்ளையார் ஆலத்திற்கு அவர் உயிரோடு இருக்கும் போது தர்ம நன்கொடையாக வழங்கியுள்ளார் என்பதை அவரது பேரன் ராசகோபால் சசிகரன் அவர்கள் மூலம் அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03 11ம் கிராம படர்மலை பத்தினி கண்ணகியம்மன் ஆலயத்தின் வரலாறு

இந்த ஆலயமானது கல்லோயா குடியேற்றத்திட்ட வரலாற்றுக்கு முற்பட்ட வரலாற்றை கொண்ட ஒரு தலமாகும்.

எனது தந்தையாரான இராமக்குட்டி தம்பிராசா அவர்களின் மூலம் நான் அறிந்து கொண்ட தகவல்களை குறிப்புகளாகத் தருகின்றேன். இந்நூலின் ஆரம்பத்தில் 1950ம் ஆண்டுக்கு முற்பட்ட காலங்களில் எமது மூதாதையர்கள் எங்கு எங்கு வாழ்ந்தார்கள், என்ன என்ன தொழில்களை மேற்கொண்டார்கள் என்பதை விபரமாக விபரித்துள்ளேன். அதற்கு அமைய இந்த ஆலயத்தை சுற்றியுள்ள பிரதேசங்களை குறிப்பிட்டுகாட்டுவது சாலப்பொருந்தும். நெடியதளாவ - அக்கிலாவெளி வெள்ளையர் கண்டம், ஆம்பிளயள்ற கண்டம், பொம்பிளயள்ற கண்டம், மூக்கறயர் கண்டம், பச்ச முத்தர்ர கண்டம், மப்பிலியர்ர கண்டம் ஆகிய இடங்களில் மழையை நம்பி வேளாண்மை செய்கையில் ஈடுபடுவதும் கால் நடைகளை வளர்ப்பதும் இந்த ஆலயத்துக்கு வடமேற்கு திசையில் சுமார் 1 KM தூரத்தில் அமைந்துள்ள றாணமடு காலப்பிட்டி இந்த காலப்பிட்டியில் நாட்டு புகையிலைத் தோட்டம் செய்வார்களாம்.

இவர்களால் செய்கை பண்ணப்பட்டு பதப்படுத்தப்பட்ட புகையிலையை யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து இங்குள்ள இடைத்தரகர்கள் மூலம் குறைந்த விலைக்கு அந்த வியாபாரிகள் பெற்றும் செல்வார்களாம். இந்த றாணமடு காலப்புட்டிக்கு வட கிழக்கு திசையில் இப்போது 20 வீடுகளை கொண்ட வீட்டுத்திட்டமாக இருக்கும் மாதிரிக்கிராமம் இந்த இடத்தை வெடியண்ட வட்டத்திடல் என்றும் இந்த பத்தினி அம்மன் ஆலயம் இருக்கும் இடத்தை கல்லுக்காட்ட திடல் என்றும் கிளாக் கொடத்திடல் என்றும் அவர்களால் பெயர் சொல்லி அழைக்கப்படுவது வழக்கமாம். பிற்காலத்திலும் அந்தப் பெயர் பேச்சிவழக்கில் இருந்ததை நானும் அறிந்திருக்கிறேன். இப்போது எல்லோராலும் பத்தினியம்மன் ஆலயம் என்று பேசப்படுவதால் அந்தப் பெயர் மங்கிவிட்டது. கிளாக்கொடத்திடல் என்று சொல்வதற்கு ஒரு காரணம் அந்தப் பிரதேசம் முழுவதும் அந்தக்காலம் மட்டுமல்ல நான் அறிந்த காலத்திலும் கிளாக்கொட மரம் நிறைந்து காணப்பட்டது இப்போது குறைவாகவே காணப்படுகின்றது. இந்த மரம் முந்திரிமரத்தின் சாயலைக் கொண்டதாக இருக்கும். இதன் விசேடம் என்னவென்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



11ம் கிராம படர்மலை பத்தினி கண்ணகியம்மன் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவக் குணம் கொண்டது. இதன் குருத்துப் பகுதி மொட்டு மொட்டாக இருக்கும் பொன்னிறத்தை கொண்டது. அதன் மொட்டை கையில் கிள்ளி உருட்டினால் மெழுகு போன்று பசையாக இருக்கும்.

அந்தக்காலத்தில் நம் சமுகத்தில் ஒரு நம்பிக்கை இருந்தது. பிறந்த குழந்தைகள் கை கால்களை முறுக்கி முறுக்கி கத்தும் அப்படி கத்தும் போது முதியவர்கள் சொல்வார்கள் இந்தப் பிள்ளைக்கு முறுக்கு நூல் போட வேண்டும் என்று. அரிசி வறுத்து தேங்காய்க்கட்டியும் சூந்து போட்டு தாய்மாமனிடம் கொடுப்பார்கள் அவர் வெண்ணூலை பல பட்டுகளாக மடித்து அந்த கிளாக் கொடப்பாலை கொண்டு வந்து நூலுடன் சேர்த்து உறுட்டி உறுட்டி முறுக்குவார். அப்படி முறுக்கும் போது "முறுக்கு நிமிரு மருமகனே முறுக்கு நிமிரு மருமகனே" என்று பல தடவை அந்தச் சொல்லை உச்சரிப்பார். அந்த வேளையில் வாய் நிறைய அந்த வறுத்த அரிசியும் தேங்காய்க் கட்டியும் சாப்பிட்டுத்தான் இந்தக் காரியத்தைச் செய்வார். அவருடைய பாடு அன்று கொண்டாட்டம்தான். இவ்வாறு முறுக்கிய அந்த நூலை பிராமணர்கள் பூநூல் போடுவது போல் அந்தக் குழந்தைக்கு போட்டுவிடுவார். அத்துடன் அந்தக் குழந்தைக்கு அந்தப் பிரச்சனை தீர்ந்துவிடும். இது ஐதீகம்.

நான் முன்பு கூறியது போல் இந்தக் கல்லுக்காட்டு திடலை சுற்றியுள்ள வயல் நிலங்களில் மழையை நம்பி வேளாண்மைச் செய்கையில் ஈடுபடுவதும் கால் நடைகள் வளர்ப்பதிலும் எமது மூதாதையர்கள் வாடி கட்டியிருந்து வாழ்ந்திருக்கிறார்கள். இதில் எனது தந்தையாரும் ஒருவர். இவ்வாறு அவர்கள் இந்த பிரதேசத்தில் வாழ்ந்த காலத்தில் இந்த படர்கல் திடலில் பல அற்புதங்களையும் அதிசயங்களையும் கண்டிருக்கிறர்கள். சில வேளைகளில் வித்தியாசமான ஒலி கேட்குமாம் வெள்ளிக்கிழமைகளில் தலைவிரி கோலத்துடன் நிலத்தில் கூந்தல் அடிபட மஞ்சள் புடவையோடு ஒரு பெண் இந்த படர்கல் திடலில் நின்று உலாவுமாம். இதை பலர் நேரில் கண்டிருக்கிறார்களாம். இந்தக் காட்சியை எனது தந்தையார் நேரில் கண்டதாக பலரிடம் இதைப் பற்றிப் பேசியிருக்கிறார். அவர் நான் சிறுவனாக இருந்த போது இதை செவிமடுத்திருக்கிறேன். அவர்கள் மாடு மேய்க்கும் போது அந்தப்பக்கம் மாடுகள் போனால் தனியாகப் போவதில்லையாம். இரண்டு மூன்று பேர் சேர்ந்துதானாம் போவது வழக்கமாம். அவர்கள் இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த காலத்தில் மிகுந்த பயபக்தியோடு இந்த இடத்தை ஒரு வருடத்தில் நான்கு தடவைகள் பூசை வழிபாடு செய்வது வழக்கமாம். ஒன்று வேளாண்மை விதைத்து வேலி நாட்டி முடித்தவுடன் பொங்கல் பூசை செய்து வழிபடுவார்களாம். அதை வேலி மூண்ட சடங்கு என்று இதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வார்களாம். இரண்டாவதாக வேளாண்மை கதிர் பறிந்தவுடன் இந்த இடத்தில் பொங்கல் செய்து இளநீரைக் கொண்டு வட்டையை காவல் செய்வார்களாம். மூன்றாவதாக வேளாண்மை விளைந்த பிறகு புதிர் எடுத்து பெரிய பொங்கல் பூசை செய்துதானாம் புதிர் சாப்பிடுவது வழக்கமாம். நான்காவதாக மாடுகள் கன்று ஈன்று முதல் பால் கறந்து இந்த இடத்தில் பொங்கல் செய்து வழிபட்ட பிறகுதானாம் பால் தயிர் சாப்பிடுவார்களாம்.

இந்த பிரதேசத்தில் நமது மூதாதையர்கள் காலம் காலமாக பல தலைமுறையினர் வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள். கடைசியாக கல்லோயாக் குடியேற்றத்திட்டம் வருவதற்கு முன் இந்தப் பகுதியில் வாழ்ந்த ஒரு சிலர் எனக்கு தெரிந்த பெயர்களைக் குறிப்பிடுகின்றேன். வெள்ளைக்காளியர், வெள்ளயர், பொன்னர் மூக்கறயர், மாலக்குவர், ஆறுமுகம், இளையதம்பி, மப்பிலியர், பச்சமுத்தர் போன்றோர் இந்தப் பகுதியில் வாழ்ந்திருக்கிறார்கள். இங்குள்ள நெற்காணிகளின் பழைய உறுதிகளில் இவர்களின் பெயர்களைக் காணக்கூடியதாக இருக்கும்.

இதன் பின் 1952, 1953ம் ஆண்டுகளில் கல்லோயா குடியேற்றத்திட்டம் நடைபெற்றிருக்கிறது. இதனால் சில மாற்றங்கள் ஏற்பட்டு இந்த கல்லுக்காட்டுத்திடலும் நமது முன்னோர்களால் பயபக்தியோடு வழிபட்டு வந்த இந்த இடமும் கவனிப்பாரற்ற நிலையில் காடு மூடிக்கிடந்திருக்கிறது. 11ம் கிராமம் 145 வீடுகளைக் கொண்ட ஒரு கிராமம். தற்போது 146ம் இலக்கம் முதல் 165ம் இலக்கம் வரையும் உள்ள 20 வீடுகளும் ஆரம்பகாலத்தில் பத்தாம் கிராமத்தோடுதான் கூட்டுறவு நிருவாகம் விவசாயம் வாரக்களிப்பு போன்ற சகல அரச நிருவாகங்களும் இருந்தது. பிற்காலத்தில் ஒரு சிலரின் முயற்சியால் குறிப்பாக 147ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சுப்பிரமணியம் என்பவர் அந்தக் காலத்தில் SSC வரையும் படித்த ஒரு இளைஞனாக இருந்த காரணத்தால் கடும் முயற்சி எடுத்திருக்கிறார். இப்போது அம்பாறையில் இருக்கும் கச்சேரி அந்தக் காலத்தில் உகனையில்தான் இருந்தது. இவர் துவிச்சக்கர வண்டியில் பல தடவைகள் அங்கு சென்று அரச அதிகாரிகளைச் சந்தித்து இந்த கோரிக்கையை முன்வைத்து இவர் மேற்கொண்ட அயராத முயற்சியின் பயனாக இந்த இருபது வீடுகளும் 11ம் கிராமத்துடன் இணைத்து சகல அரச நிருவாகங்களும் செயல் படுவதற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இப்போது 11ம் கிராமம் 165 தாய் நம்பர்களைக் கொண்ட ஒரு கிராமம் என்பது அனைவரும் அறிந்த விடயம்.

1964ம் ஆண்டு இவ்வாலயம் தோற்றம் பெற்றதாக 1964ம் ஆண்டு முதல் 1990ம் ஆண்டுவரை செயலாளராக இருந்த 147ம் இல. வீட்டைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த பூ. சுப்பிரமணியம் என்பவரின் மூலம் பெற்றுக் கொண்ட தகவல் இருபது வீட்டைச் சேர்ந்த ஒரு சில முன்னோடிகள் இங்கு ஒரு ஆலயம் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு கலந்துரையாடி தற்போது கண்ணகி வித்தியாலயம் அமைந்திருக்கும் இடத்தை தெரிவு செய்து இந்த இடத்தில் நாகதம்பிரான் ஆலயம் ஒன்று அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மேற்கொண்டு அதற்கான முன்னேற்பாடுகளை செய்திருக்கிறார்கள். இந்த வேளையில் நான் முன்பு குறிப்பிட்ட 147ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சுப்பிரமணியம் என்பவர் ஒரு கருத்தை கூறியிருக்கிறார். "கல்லுக்காட்டு திடல் நல்ல இடம் அங்கு இந்தக் கோயிலைக் கட்டலாம்தானே" என்று இதற்கு ஒரு சிலர் கூறினார்களாம் " அது தூரம் சிங்களவர்கள் பக்கத்தில் இருக்கிறார்கள் " என்று. இது சம்மந்தமாக எல்லோரும் சேர்ந்து கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வந்து "சரி அந்த இடத்தில் கோயிலை கட்டுவோம்" என்று. அதற்கு பிறகு எப்படி எந்த இடத்தில் ஆலயத்தை அமைப்பது என்று யோசித்து 56ம் இல. வீட்டைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி என்பவரிடம் போய் ஆலோசனை கேட்டிருக்கிறார்கள். அவரைப்பற்றி நான் முன்னர் கூறியிருந்தேன் அந்தக் காலத்தில் அவர் மிகவும் திறமைவாய்ந்த ஒரு பூசாரி. இவர்கள் கூறியதை மிகவும் அமைதியாக கேட்டவர் சொன்னாராம் " நாங்கள் நினைத்தமாதிரி எழுந்தமானமாக கோயில் கட்டமுடியாது அதற்கு தெய்வ வாக்கு பெற வேண்டும். 11ம் கிராமம் 9ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சீனித்தம்பியை கொண்டு இடத்தை தெரிவு செய்யலாம் " என்று நாளும் குறித்து கொடுத்தாராம்.

சீனித்தம்பி என்பவர் அந்தக் காலத்தில் அம்மன் கோயில்களில் தெய்வம் ஆடுபவர். மிகவும் தெய்வ சக்தி வாய்ந்தவர். இந்தக் குழுவினர் துரிதமாக செயல்பட்டு குறித்த தினத்தில் சுந்தரமூர்த்தியரையும் சீனித்தம்பி அவர்களையும் கொண்டு சகல ஏற்பாடுகளும் செய்து தெய்வம் ஆடவைத்து வாக்கு பெற்றிருக்கிறார்கள். இந்த இடமேதான் நம் முன்னோர்களால் படயல் போடப்பட்டு வழிபட்ட இடமாகும். அதுதான் இப்போது ஆலயம் இருக்கும் இடம். அதற்கு பிறகுதான் இந்த இடத்தில் அம்மன் ஆலயம் அமைக்க வேண்டும் என்ற எண்ணக்கரு உருவாகியிருக்கிறது. இருந்தும் ஒரு சங்கடமான நிலைமை இவர்கள் மத்தியில் நிலவியிருக்கிறது. காரணம் இவர்கள் அனைவரும் துறைநீலாவணையிலிருந்து இங்கு சென்றவர்கள் துறைநீலாவணை கண்ணகையம்மன் ஆலயத்திலும், பெரியபிள்ளையார் ஆலயத்திலும் மிகுந்த பயபக்தி கொண்டவர்கள் என்ற காரணத்தினால் நமது ஊரில் கண்ணகை அம்மன் ஆலயம் இருக்கும் போது இங்கும் ஒரு கண்ணகையம்மன் ஆலயம் கட்டுவதா என்று யோசித்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் இந்த இடம் ஏற்கனவே ஒரு சக்திவாய்ந்த இடம் என்றும் முன்னவர்கள் வழிபட்டு வந்ததையும் கேள்வியுற்று சரி இந்த இடத்தில் அம்மனுக்கு கோயில் கட்டுவோம் கண்ணகைக்கு பல பெயர்கள் உண்டுதானே அதில் ஒரு பெயரை வைக்கலாம் என்று பல கருத்துக்கள் பரிமாறப்பட்டு இறுதியில் ஒரு முடிவுக்குவந்து பத்தினி கண்ணகை என்றும் சொல்வதுதானே எனவே பத்தினியம்மன் என்று பெயர் வைப்போம் என்று எல்லோரும் அந்தக் கருத்தை ஏற்று பத்தினியம்மன் என்ற திருநாமத்தோடு இப்போது இந்த பிரமாண்டமான ஆலயம் அமைந்து இருக்கும் இடத்தை 1964ம் ஆண்டு காலப் பகுதியில் புதிதாக கோயில் கட்டுவதற்கு இந்த 20 வீட்டை சேர்ந்த முதியவர்களும் இளைஞர்களும் சேர்ந்து இந்த இடத்தை துப்பரவு செய்து கொண்டிருந்த நேரத்தில் நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள முதியவர்களுள் ஒருவரான பச்சமுத்தர் என்பவர் இவ்வழியால் வந்து கொண்டிருந்தவர் கேட்டாராம் தம்பி இந்த காட்டை வெட்டி என்னப்பா செய்யப்போகிரீர்கள் என்று. அதற்கு துப்பரவு செய்து கொண்டிருந்தவர்கள் சொன்னார்களாம் நாங்கள் இந்த இடத்தில் கோயில் கட்டப்போகிறோம் என்று. அதற்கு அந்த பச்சமுத்தர் என்பவர் சொன்னாராம் " தம்பி உங்களுக்கு தெரியாது நாங்கள் அந்தக் காலத்தில் இந்த இடத்தில் பல அதிசயங்களை கண்டிருக்கிறோம். இந்தக் கல்லுமலையில் நாங்கள் பொங்கி பூசை வழிபாடுகள் செய்திருக்கிறோம். இப்ப இந்த கொளனி வந்த பிறகு ஒருவரும் அத கவனிக்கிறதில்ல நல்ல விசயம் தம்பி நீங்க இந்த இடத்தில் கோயில் கட்டுவது " என்று கூறிச் சென்றாராம். இந்தச் செய்தியைக் கேட்டு மிகுந்த உற்சாகத்தோடு பணியைத் தொடங்கியிருக்கிறார்கள்.

## 20 வீட்டைச் சேர்ந்த தலைவன், தலைவியரின் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| பொன்னையா சின்னமுத்து | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 146 |
| காத்தமுத்து செல்லம்மா | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 147 |
| பூபாலப்பிள்ளை சின்னப்பிள்ளை | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 148 |
| ஆறுமுகம் மாரிமுத்து | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 149 |
| தம்பிமுத்து பிள்ளையம்மா | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 150 |
| சிதம்பரப்பிள்ளை சந்தணப்பிள்ளை | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 151 |
| இராமக்குட்டி தங்கமுத்து | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 152 |
| வினாசித்தம்பி மாரிமுத்து | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 153 |
| பொன்னையா தங்கமணி | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 154 |
| சாமித்தம்பி சின்னத்தங்கம் | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 155 |
| பெரியதம்பி சந்தணம் | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 156 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கந்தையா சங்குவதி | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 157 |
| கந்தையா பொன்னம்மா | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 158 |
| சின்னத்தம்பி சந்தணம் | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 159 |
| சாமித்தம்பி நாகமணி | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 160 |
| கந்தப்பன் செல்லம்மா | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 161 |
| சீனித்தம்பி மேரி | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 162 |
| கந்தப்பன் தெய்வானை | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 163 |
| வினாசிதம்பி மாரிமுத்து | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 164 |
| கேசகப்பிள்ளை காளிப்பிள்ளை | 11ம் கிராமம் வீட்டு இலக்கம் | 165 |

ஆகிய குடும்பத் தலைவர்களும் அவர்களுடைய வயது வந்த ஆண்பிள்ளைகளும் சேர்ந்து கோயில் கட்டும் வேலையை தொடங்கி காட்டுக்கு போய் கம்பு வெட்டி வந்து ஓலைக்குடிசை அமைத்து 11/56ம் இலக்க வீட்டைச் சேர்ந்த திரு சுந்தரம் பிள்ளை என்னும் பூசாரியைக் கொண்டு 1964ம் ஆண்டு சடங்கு செய்து ஆரம்பித்திருக்கிறார்கள்.

அடுத்த வருடம் ஓலைக்குடிசை அழிந்துவிட்டது மீண்டும் புதிதாக குடிசை அமைத்து சடங்கு செய்திருக்கிறார்கள் இவ்வாறு சில காலம் வழிபட்டு வந்த நேரத்தில் பூசகராக இருந்த சுந்தரம்பிள்ளை அவர்கள் காலம் சென்றுவிட்டார். இதன் காரணமாக பூசகர் வெற்றிடம் ஏற்பட்டதனால் துறைநீலாவணை கண்ணகியம்மன் ஆலய பூசகர்களான கட்டாடி பிள்ளையார் பூசாரி பிள்ளையார் ஆகியோரை கொண்டு சில காலம் சடங்கு செய்தார்கள் வைகாசிப் பூரணயில் துறைநீலாவணை கண்ணகியம்மன் சடங்கும் ஆனிப் பூரணையில் 11 கிராம படர்கல் பத்தினியம்மன் சடங்கும் நடைபெறும் எவ்வித பிரச்சனையோ கருத்து வேறுபாடோ ஏற்பட்டதில்லை காரணம் எல்லோரும் ஒரே உறவுகள் சில காலம் இவ்வாறு நடைபெற்று வந்த வேளையில் முன்பு பூசகராக இருந்த சுந்தரம்பிள்ளை பூசாரியாரின் மகன் ஜெகதீசன் அவர்கள் 1975ம் ஆண்டுக்கு பிறகு பூசாரியாக கடமை ஏற்று கிட்டத்தட்ட நாப்பது வருடங்களுக்கு மேலாக இந்த ஆலயத்தில் பூசகராக கடமையாற்றி தற்போது சுகவீனமுற்ற நிலையில் இருக்கிறார். இவர் பூசகராக கடமையாற்றிய பிற்பட்ட காலத்தில் இவருடைய மகனும் இவரோடு இணைந்து பூசகராக கடமைபுரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது வேறு பூசகர்களைக் கொண்டு காரிய கருமங்கள் நடைபெறுகின்றது.

இந்த ஆலயம் தோற்றம் பெற்ற காலப்பகுதியில் 165ம் இலக்க வீட்டைச் சேர்ந்த கேசகப்பிள்ளை அவர்களை தலைவராகக் கொண்டு நிருவாகசபையை ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தக் காலப்பகுதியில் செல்லையா தம்பிப்பிள்ளை என்பவர் துறைநீலாவணையில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து 11/162ம் இலக்க வீட்டில் திருமணபந்தத்தில் இணைந்து கொண்டவர், சமய சமூக பணிகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இதன் காரணமாக இவ்வாலயத்தின் பரிபாலனசபைத் தலைவராக நியமிக்கப்பட்டு பல வருடங்களாக தலைவராக இருந்து இந்த ஆலயத்தின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்து அயராது உழைத்ததன் காரணமாக ஓலைக் குடிசையாக இருந்து வந்த ஆலயம் பிரமாண்டமான ஆலயமாக தோற்றம் பெற இவருடைய காலப்பகுதி அடிகோலாகியது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் காலப்பகுதியில் அம்மனின் உற்சவம் நடைபெறுகின்ற அந்த எட்டு நாட்களில் இரண்டு பூசைகள் 11ம் கிராம புளியடிப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினர் செய்வது வழக்கமாக இருந்தது. ஒன்று வெள்ளிக்கிழமை அம்மன் ஊர்வலம் செல்லும் பூசையும் மற்றது ஞாயிற்றுக்கிழமை கன்னிக்கால் வெட்டி வந்து இரவு நடைபெறுகின்ற கலியாணப்பூசையும் செய்வது வழக்கம் அந்தக்காலத்தில் இப்போது இருக்கின்ற எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லை, பொருளாதாரச்சிக்கல் இருந்தும், புளியடிப்பிள்ளையார் ஆலய பரிபாலனசபையில் நானும் ஒரு அங்கத்தவர் என்ற வகையில் என்னோடு ஓய்வுபெற்ற அதிபர் விநாயகம்பிள்ளை காலம்சென்றவர்களான நண்பர் சின்னத்துரை சின்னத்தம்பி மற்றும் சிவலிங்கம் (சில்லறை) ஆறுமுகம் இன்னும் பலர் சேர்ந்து சுறுசுறுப்பாக இயங்கி பூசைச்சாமான் சேகரித்து புதிதாக தோரணம் கட்டி அலங்கரித்து மாட்டு வண்டியில் பூசைச் சாமான்களை ஏற்றி பலபேர் சேர்ந்து தோரணத்தைத் தூக்கிக் கொண்டு பிற்பகல் மூன்று மணியளவில் புளியடிப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு ஊர்வலமாகச் சென்று படர்கல் பத்தினியம்மன் ஆலயத்தைச் சென்றடைந்து பூசைக்குரிய சகல ஏற்பாடுகளும் செய்து இரவுப் பூசை முடிந்ததும் அம்மன் ஊர்வலம் செல்வதற்காக புறப்பட்டு பிரதான பாதையை வந்தடைந்து தெற்கு நோக்கி சென்று புளியடிப் பிள்ளையார் ஆலயத்தை சென்றடைந்து ஆலய தரிசனத்தை முடித்துக் கொண்டு மீண்டும் தெற்கு நோக்கிப் புறப்பட்டு தற்போது ஆலயடி என்றழைக்கப்படுகின்ற 3 மூன்றாம் வாய்க்கால் சந்தியால் திரும்பி வடக்கு நோக்கி சென்று இலுப்பைக்குளம் அம்பாரையர்ரசந்தியை சென்றடைந்து அங்கிருந்து மேற்கு புறமாகத் திரும்பி கஞ்சாறோட்டு வழியாக வந்து அம்மன் ஆலயத்தை சென்றடைவது ஆரம்பகால வழக்கமாக இருந்தது.

1968ம் ஆண்டுக்கு பிற்பட்ட காலத்திலிருந்து 13ம் கிராமத்தில் துறைநீலாவணையிலிருந்து நமது உறவுகள் சில பகுதியில் குடியேறியதன் காரணமாக நான் முன் சொல்லப்பட்ட பாதையால் அம்மன் ஊர்வலமாக சென்று அம்பாரையர்ர சந்தியால் மேற்கு நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லாமல் நேராக வடக்கு நோக்கி புளியடிக் கட்டால சென்று பிரதான வாய்க்காலைக் கடந்து 11ம் வாய்க்கால் வழியாகச் சென்று மண்டூர் றாணமடு பாதையால் மேற்கு நோக்கி திரும்பி அம்மன் ஆலயத்தை வந்தடைவது வழக்கமாக இருந்தது. அந்தக்காலத்தில் வாகன வசதியில்லை அம்மன் ஆலயத்திலிருந்து புறப்பட்டு மீண்டும் ஆலயத்தை வந்தடையும் வரையும் பல்லக்கை தோளில் சுமந்து செல்வதுதான் வழக்கம் இப்போது இருப்பது போல் அந்த காலத்தில் இளைஞர்கள் மிக மிக குறைவு. அகப்பட்டவர்களின் பாடு திண்டாட்டம்தான். அந்த நிலையை அனுபவித்தவர்களில் நானும் ஒருவன் என்றவகையில் இதைக் குறிப்பிடுகின்றேன். அந்தக் காலத்தில் மின்சாரம் இப்பகுதியில் இல்லை. ஆலயத்திலும் அம்மன் ஊர்வலம் செல்லும் போதும் பெற்றோள் மெக்ஸ் ஒளியில்தான் எல்லா கருமங்களும் நடைபெறும். முதியவர்களெல்லாம் வேட்டி சால்வை அணிந்து விபூதி பூசி ஆலயத்தில் அவர்கள் செயல்படுவது மிகவும் சிறப்பாக இருக்கும்.

இப்போது அவர்களைப் போன்று முதியவர்களைக் காண்பது அரிது. இவர்களுக்கு பக்கபலமாக சுப்பிரமணியம் காசிப்பிள்ளை, வேலிப்பிள்ளை செல்வராசா, பூபாலப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை இன்னும் பல இளைஞர்கள் மிகவும் சுறுசுறுப்பாக செயற்படுவார்கள் உற்சவ காலங்களிலும் ஆலய வளர்ச்சிக்காகவும் இந்த ஆலயம் தோற்றம் பெற்ற காலம் முதல் இன்று வரையும் பரிபாலனசபைத் தலைவர்களாக இருந்து செயல்பட்டவர்களின் பெயர்விபரம்.

165ம் வீட்டைச் சேர்ந்த கேசகப்பிள்ளை
158ம் வீட்டைச் சேர்ந்த கந்தையா
162ம் வீட்டைச் சேர்ந்த சீனித்தம்பி
162ம் வீட்டைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை
165ம் வீட்டைச் சேர்ந்த செல்வராசா
147ம் வீட்டைச் சேர்ந்த சண்முகம் (உதவி அதிபர்)
163ம் வீட்டைச் சேர்ந்த கார்த்திகேசு (வரி மதிப்பீட்டாளர்)
160ம் வீட்டைச் சேர்ந்த மார்க்கண்டு (ஆசிரியர்)
159ம் வீட்டைச் சேர்ந்த ஜெயசுந்தரம் (ஆசிரியர்)
147ம் வீட்டைச் சேர்ந்த குணபாலசிங்கம்
148ம் வீட்டைச் சேர்ந்த லெட்சுமிகாந்தன்

ஆகியோரை தலைவர்களாகக் கொண்டு இவர்களின் காலத்தில் செயலாளர்களாகவும் பொருளாளராகவும் ஏனைய நிருவாகசபை உறுப்பினர்களாகவும் செயல்பட்ட ஆலய அறங்காவல் சபையினரின் கடின உழைப்பாலும் பொதுமக்களின் பங்களிப்போடும் பல வருடங்களாக மேற்கொண்டு வந்த முயற்சியின் பலனாக புதிய ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுமாணப் பணி பூர்த்தி செய்யப்பட்டு இந்த ஆலயத்தின் வரலாற்றில் முதல் முதலாக 1990ம் ஆண்டு கும்பாபிசேகம் நடைபெற்றது. இந்தக் காலப்பகுதியில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றது. 11ம் கிராம புளியடிப்பிள்ளையார் ஆலயம், மத்தியமுகாம் திருமுருகன் ஆலயம், இலுப்பைக் குளம் மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், காட்டுவாசல் மாதிரிக்கிராமம் ஆலயம், 13ம் கிராம பொதுமக்கள், 11ம் கிராம பொது மக்கள் அனைவரையும் உள்வாங்கி பூசைகள் பகிர்ந்தளிக்கப்பட்டு ஆலய உற்சவம் நடைபெறுவது மிகவும் சிறப்பம்சமாகும். இப்போது அம்மன் ஊர்வலம் செல்லும்பாதை மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. வெள்ளிக்கிழமை இரவு அம்மன் ஊர்வலம் செல்வதற்கான பூசை முடிந்ததும் ஆலயத்திலிருந்து புறப்பட்டு பிரதான பாதையை வந்தடைந்து மணல் கும்பத்தடிச் சந்தியை ஊடறுத்து வடக்கு நோக்கிச் சென்று 13ம் கிராமம், மாதிரிக்கிராமம் காட்டு வாசல் ஆகிய பிரதேசங்கள் ஊடாக சென்று 13ம் கிராம பாடசாலைச் சந்தியைச் சென்றடைந்து, தென்மேற்கு நோக்கி திரும்பி பிரதான பாதையூடாகச் சென்று மீண்டும் மணல்கும்பத்தடி சந்தியை வந்தடைந்து கிழக்கு நோக்கி சென்று இலுப்பைக்குளம் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தை தரிசித்துவிட்டு 3ம் வாய்க்கால் வழியாக தெற்கு நோக்கி சென்று வம்மியடி சந்தி வழியாக கிழக்கு நோக்கி திரும்பி 3ம் வட்டார பிரதேசம் ஊடாக சென்று மத்தியமுகாம் ஸ்ரீ முருகன் ஆலயத்தைச் சென்றடைந்து, அங்கிருந்து மீண்டும் வடக்கு நோக்கி திரும்பி பிரதான பாதையூடாக வந்து 11ம் கிராம புளியடிப் பிள்ளையார் ஆலயத்தை வந்தடைந்து மீண்டும் பிரதான பாதையூடாக அம்மன் ஆலயத்தை வந்தடைவது வழக்கமாக உள்ளது.

இதே போன்று ஞாயிற்றுக்கிழமை கன்னிக்கால் வெட்டும் நிகழ்வானது மதியப் பூசை முடிவடைந்ததும் ஆலயத்திலிருந்து அம்மன் புறப்பட்டு பிரதான பாதையூடாகச் சென்று புளியடிப்பிள்ளையார் ஆலயத்தை வந்தடைந்து அங்கு தீர்மானிக்கப்படுகின்ற இடத்தில் கன்னிக்கால் வெட்டும் நிகழ்வு இடம்பெற்று மீண்டும் அம்மன் ஆலயத்தை வந்தடைவது தற்போதய வழக்காக நடைமுறையில் உள்ளது.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு செய்ய வேண்டும் என்ற ஆகம விதிகளுக்கு அமைய மீண்டும் இந்த ஆலயம் வாலஸ்தானம் செய்யப்பட்டு திருத்த வேலைகள் மேற்கொண்டு பிரமாண்டமான முன் முகப்பு மண்டபம் புதிதாக அமைக்கப்பட்டு பரிவார மூர்த்திகளாக பிள்ளையார், வைரவர், நாகதம்பிரான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதனமார் ஆலயங்களும் அமைத்து இந்த ஆலயத்தின் வரலாற்றில் இரண்டாவது தடவையாக 2009ம் ஆண்டு மீண்டும் கும்பாபிசேகம் நடைபெற்றிருக்கிறது.

பூசைவழிபாடுகள், காரியகருமங்கள் அனைத்தும் மரபு ரீதியிலான விதிப்படியே நடைபெறுகின்றது. பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஓருமுறை கும்பாபிசேகம் செய்ய வேண்டும் என்ற நியதிக்கமைய மீண்டும் 2020ம் ஆண்டு 2ம் மாதம் 7ம் திகதி இந்த ஆலயம் வாலஸ்த்தானம் செய்யப்பட்டு கருவறை கற்பகிரகம் முற்றாக அகற்றப்பட்டு புதிதாக அத்திவாரம் இடப்பட்டு புதிய கருவறையோடு பிரமாண்டமான ஸ்த்தூபி பொம்மைகளோடு அமைக்கப்பட்டு மார்க்கண்டு அவர்களின் தலைமையிலான நிருவாக சபையினரின் கடின உழைப்பினாலும் பொது மக்களின் பங்களிப்போடும் ஆலய திருப்பணியாவும் பூர்த்தி செய்து 2022/03/23ம் திகதி மஹா கும்பாபிசேம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

படர்மலை பத்தினிக்கண்ணகியம்மன் ஆலயத்திற்கு செல்லும் கிழக்கு நுழைவாயில் முன் கோபுரம் பிரதான பாதையில் இருந்து ஆறாம் வாய்க்கால் கிளை பிரியும் இடத்தில் பிரம்மாண்டமான முன்கோபுரம் தெய்வீக கலையம்சங்களோடு அமைக்கப்பட்டு கம்பீரமாக காட்சியளித்துக் கொண்டிருப்பது சிறப்பம்சமாகும்.

இதற்கான நிதியை வழங்கியவர்கள்:
தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் முன்னாள் கிழக்குமாகான சபை முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்கள் இரண்டுலட்சம் ரூபா நிதியை 2009ம் ஆண்டு ஒதுக்கீடு செய்ததாகவும், 2017ம் ஆண்டு இலங்கை தமிழரசுக்கட்சியின் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் திரு. தவராசா கலையரசன் அவர்கள் 10 இலட்சம் ரூபா நிதியை வழங்கி இந்த முன் முகப்புக் கோபுரத்தை நிறைவு செய்து 2018ம் ஆண்டு தவராசா கலையரசன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டதாக ஆலய அறங்காவல் சபையினர் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04 11ம் கிராம மத்தியமுகாம் ஸ்ரீ முருகன் ஆலயத்தின் வரலாறு

11ம் கிராமம் 112ம் இலக்க வீட்டில் வசித்த மன்னாரச் சாமியார் என்றழைக்கப்படும் ஆறுமுகம் என்பவர் தான் வணங்குவதற்காக தனது வளவுக்குள் ஒரு சிறு ஓலை குடிசையமைத்து சிறு சிறு விக்கிரகங்களை வைத்து தனது வழிபாட்டை மேற்கொண்டு வந்தவர் இவரைப் பற்றி சுருக்கமாக சொல்வதென்றால் மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இங்கு திருமணபந்தத்தில் இணைந்திருக்க வேண்டும். சிறு தாடி வைத்திருப்பார். ஒரு துப்பட்டியால் எப்போதும் தன்னை போர்த்திக் கொள்வார். பார்ப்பதற்கு சற்று அலங்கோலமாக இருந்தாலும் மிகுந்த இறைபக்தன் சமய ஈடுபாடு கொண்டவர். தான் உண்டு தன் பாடு உண்டு மிகவும் அமைதியான சுபாவம் கொண்ட ஒரு மனிதர். இவரை மன்னாரச்சாமியார் என்றுதான் எல்லோருக்கும் தெரியும். இவருடைய சொந்தப் பெயர் அனேகமானவர்களுக்கு தெரியாது. தினமும் அதிகாலை வேளையில் இவருடைய இந்த ஆலயத்தில் சங்கு ஊதும் சத்தம் கேட்கும். அந்தக் காலத்தில் இயற்கையின் நிகழ்வுகளை வைத்துத்தான் நேரத்தை கணிப்பிடுவார்கள். சாமக்கோழி கூவுது தலக்கோழி கூவுது, மூன்றாம் சாமத்துக் கோழி கூவுது என்றெல்லாம் சொல்லுவார்கள். அது மாத்திரம் அல்ல அதிகாலை வேளையில் வானத்தில் உதயமாகும் வெள்ளிகள், செட்டியை கெடுத்தான் வெள்ளி விடிவெள்ளி என்று எல்லாம் சொல்லுவார்கள். இந்த சமிக்ஞைகளை வைத்துத்தான் தூர இடங்களுக்கான பிரயாணத்தை செய்பவர்கள் தங்களைத்தயார்படுத்திக் கொள்வார்கள். இந்தவேளையில் மன்னார்ச்சாமியாரின் கோயிலில் ஊதும் சங்குச் சத்தம் இவர்களை இன்னும் நேரத்தை உறுதி செய்துவிடும் தாயகமான துறைநீலாவணைக்கு செல்பவர்கள் தலவள்ளத்துக்கு போகவேண்டும் என்று வெளிக்கிட்டு போவார்கள் அந்தக்காலத்தில் கால் நடையாகத்தான் அனேகமானவர்கள் பிரயாணம் செய்வார்கள். சிலர் துவிச்சக்கரவண்டியில் பிரயாணம் செய்வார்கள். சிலர் மாட்டு வண்டியிலும் பிரயாணம் செய்வார்கள்.

இப்போது இருக்கின்ற மின்சார வசதியோ வாகனப்போக்குவரத்து வசதியோ தொடர்பாடல் வசதியோ எதுவும் இருந்ததில்லை. கண்டதும் இல்லை. மன்னார்சாமியார் தனது வளவுக்குள் வைத்து வழிபட்டு வந்த அந்த ஓலைக்குடிசை ஆலயத்தை சிறிது காலத்தின் பின் 23ம் வாய்க்கால் சந்தியில் தற்போது அந்த இடத்தில் அவருடைய மருமகன் தெய்வநாயகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



11ம் கிராம மத்தியமுகாம் ஸ்ரீ முருகன் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடை இருக்கின்றது. அந்த இடத்தில் ஓலைக்குடிசை அமைத்து வழிபட்டு வந்தார். இந்த ஓலைக்குடிசை ஆலயம் முற்று முழுதாக அவருடைய தனிப்பட்ட வழிபாட்டு ஆலயமாகத்தான் ஆரம்பிக்கப்பட்டது. பிற்காலத்தில் பொது மக்களும் இந்த ஆலய வழிபாடுகளில் ஈடுபாடு கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள். இந்தக்காலப்பகுதியில் தற்போது நகரமாக இருக்கின்ற (சென்றல்கேம்) மத்தியமுகாம் பிரதேசம் அடர்ந்த காட்டு பகுதியாக காணப்பட்டது. நான் எனது தாய் தந்தையரோடு வைத்தியசாலைக்கு செல்லும் போது இரு மருங்கும் சூரக்காடு. சிங்கிலியங்காடு பெருமரங்களும் காணப்பட்டது. குரங்குகள் பாய்ந்தோடும். பன்றிகளின் நடமாட்டமும் இருக்கும். பயந்து பயந்துதான் பிரயாணம் செய்வது. ஆரம்பத்தில் இரண்டு கடைகள்தான் இருந்தது பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் தேனீர்க்கடையும், புடவைக்கடையும் உசைன்ர கடையென்று சொல்வார்கள். அண்ணன் தம்பி இருவரும் ஒரே கடையாகத்தான் இருந்தார்கள். பொலிஸ்நிலையத்துக்கு அருகாமையில் ஒரு கடை இருந்தது. வண்டாட கடையென்று சொல்வார்கள். தேனீர்க்கடை, புடவைக்கடை, நெல்லுக்கடையாக இருந்தது. இதற்கு பிறகு தற்போது பரிதா ஸ்ரோர் என்று சொல்லப்படுகின்ற கடை இருக்கும் இடத்தில் ஒரு தகரக் கொட்டில் அமைத்து சில்லறக்கடை உருவாகியது. சிறிது காலத்தின் பின் தகரக் கடை ஓட்டுக் கடையாக மாற்றம் அடைந்தது. இதன் காரணமாக இதை ஓட்டுக்கடையென்று எல்லோரும் சொல்லுவார்கள். இதற்கு பிறகுதான் ஏனையகடைகள் தோற்றம் பெற்றது.

இந்தப்பகுதி அரச காணியாக இருந்தபடியால் பிற்பட்ட காலப்பகுதியில் பொதுமக்கள் காணிகளை பிடித்து குடியேறியுள்ளனர். இந்தக் காலப்பகுதியில் தற்போது ஸ்ரீ முருகன் ஆலயம் அமைந்து இருக்கும் இடமும் சகோதர இனத்தவர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட போது சட்டபூர்வமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களை வெளியேற்றிவிட்டு, 23ம் வாய்க்கால் சந்தியில் மன்னார்சாமியாரால் தோற்றம் பெற்று பின்னர் பொது மக்களாலும் பராமரிக்கப்பட்டு வழிபட்டு வந்த முருகன் ஆலயத்தை அந்த இடம் இடவசதி போதாத காரணத்தினால், தற்போது ஸ்ரீ முருகன் ஆலயம் அமைந்திருக்கும் இடத்தில் ஆலயம் கட்ட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு பல சிரமங்களுக்கு மத்தியில் பணியை தொடங்கியிருக்கிறார்கள். 106ம் இலக்க வீட்டைச் சேர்ந்தவரும் கிராம சேவகராக கடமையாற்றி காலஞ்சென்ற திரு.கா.நல்லையா அவர்கள் தலைவராகவும், 114ம் இலக்க வீட்டைச் சேர்ந்த திரு.மா.சதாசிவம் அவர்கள் செயலாளராகவும், 111ம் இலக்க வீட்டைச் சேர்ந்த தெய்வநாயகம், 100ம் இலக்க வீட்டைச் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாயகம், 141ம் இலக்க வீட்டைச் சேர்ந்த தியாகராசா, 142ம் இலக்க வீட்டைச் சேர்ந்த நடராசா, இன்னும் பலரையும் இணைத்துக் கொண்டு இந்த இடத்தில் ஓலைக் குடிசை அமைத்து 1975 - 1976ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து வழிபடத் தொடங்கியதோடு மகா சிவராத்திரி, ஆடி அமாவாசை, சித்திரகுப்த விரதம் போன்ற முக்கிய விழாக்களையும் நடாத்தி வந்திருக்கிறார்கள். இந்த கால கட்டத்தில் புதிய ஆலயம் அமைப்பதற்கான அத்திவாரமும் இடப்பட்டு கட்டுமானப்பணிகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பொருளாதார சூழ்நிலை காரணமாக பணிகள் மெதுவாத்தான் நடைபெற்று வந்தன.

ஆனால் பூசைவழிபாடுகள் உற்சவங்கள் தொடராக நடைபெற்று வந்தது. உற்சவகாலங்களின் போது ஆலயத்தில் சில நாடகங்களும் மேடைபேற்றப்பட்டிருக்கிறது. 111ம் இலக்கவீட்டைச் சேர்ந்தவரும் தற்போது வெளிநாட்டில் வசிதகுவருபவருமான தேவதாஸ் என்பவர் 124ம் வீட்டைச் சேர்ந்த நல்லதம்பி சிகை அலங்கரிப்பாளர் ஆறுமுகம் இன்னும் பல இளைஞர்கள் கலை ஆர்வம் கொண்டவர்கள் ஒன்றிணைந்து நாடகங்களை மேடையேற்றியிருக்கிறார்கள். இன்னும் ஒருவிடயத்தையும் குறிப்பிட்டாக வேண்டும். 23ம் வாய்க்கால் சந்தியில் இந்த ஆலயம் இருந்து மக்களால் வழிபட்டு வந்த நேரத்தில் 114ம் இலக்க வீட்டைச் சேர்ந்த மார்க்கண்டு என்பவர் இந்த ஆலயத்தில் சில முக்கியமான உற்சவகாலங்களில் பூசகராக செயல்பட்டு இருக்கின்றார்கள். இவர் ஓய்வு பெற்ற கிராமசேவகர் இதன் காரணமாக இவரை மார்க்கண்டு விதானையார் என்று எல்லோரும் சொல்வார்கள். விசவைத்தியம், நாட்டு வைத்தியம், சோதிடம் போன்றவற்றில் ஈடுபாடு உள்ளவர். இவருடைய குடும்பப் பின்னணியும் இதுதான். துறைநீலாவணையிலுள்ள காணி அடப்பன்மார் கணக்கப்பிள்ளைமாரோடு இணைந்து செயல்படுபவர். மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தின் 13ம், 15ம் திருவிழாக்களிலும் கலந்து கொள்வார். இவருடைய காலப்பகுதியில் மண்டூரிலிருந்து வேல் ஒன்று கொண்டுவரப்பட்டு இந்த ஆலயத்தில் வைத்து வழிபட்டுவந்தாக இவருடைய புத்திரர் சதாசிவம் அர்களின் மூலம் அறியமுடிகின்றது. இவ்வாறு இவ்ஆலயத்தின் நிருவாகசபையிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டு பூசை வழிபாடுகளும், கட்டுமானப்பணிகளும் இடம்பெற்று ஆலயம் வளர்ச்சி பாதையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த வேளையில் 1990ம் ஆண்டு வட கிழக்கு மாகாணங்களில் கோரமான அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டு உயிர் உடமைகள் இழந்து பொருளாதாரம் வீடுவாசல் இழந்து, பிரதேசத்தை இழந்து இடம் பெயர்ந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகவும், அனாதைகளாகவும் முகாம்களிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறுபட்ட இடங்களிலும் வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக இந்த மத்தியமுகாம் பிரதேசத்திலும் தமிழ் முஸ்லிம் சிங்கள மக்களும் இடம் பெயர்ந்துள்ளனர். இதனால் இப்பிரதேசம் சூனியமாக காட்சியளித்திருக்கிறது. இந்தக் காலப்பகுதியில் இந்த ஆலயம் இடித்து தகர்த்து தரைமட்டமாக்கப்பட்டு உடமைகளும் சூறையாடப்பட்டுள்ளது.

சில காலத்துக்கு பிறகு மக்கள் இந்த பிரதேசத்தில் மீண்டும் படிப்படியாக குடியேறி வீடு வாசல்களை அமைத்து பொருளாதாரத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டு ஆலயக்கட்டுமானப்பணிகள் சிறந்தமுறையில் தொடரப்பட்டிருக்கிறது. இந்த ஆலயத்தின் ஆரம்பம் முதல் கும்பாபிசேகம் வரையும் தலைவர்களாக இருந்து சேவையாற்றியவர்களின் பெயர் விபரம்.

11ம் கிராமம் 106ம் இலக்க வீட்டைச் சேர்ந்த திரு. கா. நல்லையா - மு. நா. கிராமசேவகர்

11ம் கிராமம் 114ம் இலக்க வீட்டைச் சேர்ந்த மா. சதாசிவம்

11ம் கிராமம் 109ம் இலக்க வீட்டைச் சேர்ந்த கு. இராசகுமார்

11ம் கிராமம் CCம் இலக்க வீட்டைச் சேர்ந்த க. கணபதிப்பிள்ளை

11ம் கிராமம் CCம் இலக்க வீட்டைச் சேர்ந்த ஆ. பரமேஸ்வரன்

11ம் கிராமம் 104ம் இலக்க வீட்டைச் சேர்ந்த க. கிருபாகரன்

11ம் கிராமம் 126ம் இலக்க வீட்டைச் சேர்ந்த க. உதயகுமார்

11ம் கிராமம் 128ம் இலக்க வீட்டைச் சேர்ந்த க. உதயரஞ்சன்

11ம் கிராமம் 116ம் இலக்க வீட்டைச் சேர்ந்த யோ. தினகரன்

11ம் கிராமம் 134ம் இலக்க வீட்டைச் சேர்ந்த மேகராசா

11ம் கிராமம் 114ம் இலக்க வீட்டைச் சேர்ந்த ச. யுதர்சனன் ஆகியோர்களை தலைவர்களாகக் கொண்ட நிருவாகசபையினரின் முயற்சியினாலும், கடின உழைப்பாலும் பொதுமக்களின் பங்களிப்போடும் அரச உதவியினாலும் இந்த மத்தியமுகாம் ஸ்ரீ முருகன் ஆலயப்பணிகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு மற்றும் பிள்ளையார், நாகதம்பிரான், நவக்கிரகம், வயிரவர், சண்டேஸ்வரர் பரிவாரக் கோயில்களும் வசந்தமண்டபம், யாக சாலை போன்ற மண்டபங்களைக் கொண்ட பிரமாண்டமான ஆலயம் அமைக்கப்பட்டு கடந்த 2020ம் ஆண்டு கும்பாபிசேகம் செய்வதற்கான சகல ஏற்பாடுகளும் ச. யுதாசனன் தலைமையிலான நிருவாகசபையினர் செய்துள்ளனர். இந்த நேரத்தில் யாரும் எதிர்பாராத விதத்தில் நமது நாட்டின் மட்டுமில்லை உலகத்தில் இருநூறுக்கு மேற்பட்ட நாடுகளில் (கொவிற் நையின்டின்) எனும் கொரோனா என்ற கொள்ளை நோய் ஏற்பட்டு பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டது. குறிப்பாக இந்தியா அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளிலும் இலட்சக்கணக்கான உயிர்கள் இறந்ததோடு பல இலட்சக்கணக்கானவர்கள் இந் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். நமது நாடும் இதனால் பாதிக்கப்பட்டு வெளிநாட்டவர்களாலும், வெளிநாட்டிலிருந்து வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது நாட்டவர்களாலும் இங்கு இந்த நோய் ஏற்பட்டது. நாட்கணக்கிலும், வாரக்கணக்கிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நாடுபூராகவும் மக்கள் வீடுகளில் முடக்கப்பட்டனர். வாகனங்கள் ஓடவில்லை அரச கருமங்கள் யாவும் இயங்கவில்லை. சகல நிகழ்வுகளும் தவிர்க்கப்பட்டது. 3ம் மாசம் முதல் 5-6ம் மாசம் வரையும் இந்தநிலை தொடர்ந்தது. ஆறாம் மாசத்துக்குப்பிறகு சற்று இன்நிலை குறைந்தது. இதுவரையும் நமது நாட்டில் கொரோனா நோயினால் அதிகமான பேர் உயிர் இழந்துள்ளனர். சற்று குறைவடைந்தாலும் இன்னும் நாட்டைவிட்டு இன் நோய் நீங்கவில்லை நாளாந்தம் நோயாளிகள் இனம் காணப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதனால் 2020ம் ஆண்டு நடைபெற இருந்த கும்பாபிசேகம் தடைப்பட்டுள்ளது. இந்த நோய் சற்றுக் குறைவடைந்திருந்ததன் காரணமாக 2020/09/04ம் திகதி கும்பாபிசேகம் நடைபெற்று 4/1 கால்மண்டலம் மண்டலாபிசேகம் நடைபெற்று தற்போது தினப்பூசை நடைபெறுகின்றது. இந்த ஆலயத்தின் வரலாற்றில் இதுதான் முதலாவது கும்பாபிசேகம் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு:

இந்த இடத்தில் இந்த ஆலயம் அமைக்கப்படாமல் இருந்திருந்தால் இந்த இடத்தின் வரலாறு வேறுவிதமாக மாறியிருக்கும். எனவே இந்த இடத்தில் ஆலயத்தை தோற்றுவித்த ஸ்தாபகர்களான கா.நல்லையா, மா.சதாசவம் போன்றோர்களும் இவர்களோடு இணைந்து செயல்பட்டவர்களும் என்றென்றும் மறக்காமல் நினைவு கூறத்தக்கவர்கள்.


ஆலயம்:

ஸ்ரீ முருகன் ஆலயம் அமைந்திருக்கும் இந்த இடம் பல வருடங்களுக்கு முன் மாற்று இனத்தவர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட போது அந்த முயற்சியை தடுத்து நிறுத்தி பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து இந்தக் காணியை மீட்டெடுத்தவர்களின் பெயர் விபரம்.

- 119ம் இலக்க வீட்டைச் சேர்ந்த பாலன்
- 130ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சபாரெட்ணம்
- 135ம் இலக்க வீட்டைச் சேர்ந்த பிள்ளையான்தம்பி
- 126ம் இலக்க வீட்டைச் சேர்ந்த கிருஸ்ணப்பிள்ளை
- 144ம் இலக்க வீட்டைச் சேர்ந்த ஆறுமுகம்
- 106ம் இலக்க வீட்டைச் சேர்ந்த நல்லையா
- 114ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சதாசிவம்
- 142ம் இலக்க வீட்டைச் சேர்ந்த நடராசா
- 111ம் இலக்க வீட்டைச் சேர்ந்த தெய்வநாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாவது கும்பாபிஷேகம் செய்யப்பட்ட 11ம் கிராம
இலுப்பைக்குள மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05 இலுப்பைக்குளம் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் வரலாறு

11ம் கிராமம் 02ம் இலக்க வீட்டின் குடும்பத் தலைவர் அம்பாரையர் இவரை அம்பாரச்சாமியார் என்றுதான் எல்லோரும் சொல்வார்கள். இதன் காரணமாக மூன்றாம் வாய்க்கால் கஞ்சாரோட்டை ஊடறுத்துச் செல்லும் சந்தியை அம்பாரையர்ர சந்தி என்று சொல்வது வழக்கமாயிற்று. இவரைப்பற்றி சொல்லப்போனால் மிகவும் அமைதியான சுபாவம் கொண்டவர். முழங்காலுக்குமேல் ஒரு வேட்டி துண்டை அணிந்திருப்பார். சால்வையால் தன்னை எப்போதும் போர்த்திக் கொள்வார். சிறு குடும்பி வைத்திருப்பார். பின்னுக்கு பெயருக்கு ஏற்றாற்போல் மிகுந்த இறைபக்தியில் ஈடுபாடு கொண்டவர்போல் தோற்றமளிப்பார். இவருக்கு கத்துன் வட்டையில் சொந்தக்காணியுண்டு. நான் எங்கள் வயலில் எனது தந்தையாரோடு விவசாயத்தில் ஈடுபடும் போது இவர் வெள்ளச் சால்வையால் போர்த்தியவாறு தோளிலே சிறு அடப்பையை போட்டுக்கொண்டு கஞ்சாரோட்டால் கால் நடையாக சென்று வருவது வழக்கம்.

இவர் தனது வழிபாட்டுக்காக தன்னுடைய இரண்டாம் நம்பர் வளவுக்குள் வடமேற்கு மூலையில் சிறு ஓலைக்குடிசை அமைத்து சிறுசிறு தெய்வ உருவங்களான வயிரவர் பொல்லு சூலம் போன்றவற்றை நிலத்தில் வைத்து பூ வைத்து வழிபட்டு வந்துள்ளார். இந்த ஓலைக்குடிசைக்கு அருகாமையில் வேலி ஓரத்தில் ஒரு வம்மி மரம் இருந்தது. அந்த நிழலில் சிறு பந்தல் அமைத்து பெரிய மண்பானையில் தண்ணீர் வைத்து அதற்குமேல் பலகைத் துண்டால் மூடி சிறட்டையும் வைத்திருப்பார்கள். நாங்கள் சிறுவர்களாக தாய் தந்தையரோடு ஊருக்கு செல்லும் போதும் வரும் போதும் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு ஓடி வந்து இரண்டு மூன்று சிறட்டைத் தண்ணீர் குடிப்போம் காரணம் புகை மணமும், குளுமையாகவும் சுவையாகவும் இருக்கும்.

அந்தக் காலத்தில் வாகன வசதி எதுவுமில்லை கிட்டங்கிப் பாலம் றோட்டு போடவில்லை எனவே நமது தாயகத்திலிருந்து விவசாய செய்கையிலீடுபடுவதற்கும் கால் நடைகளை வளர்ப்பதற்கும் அன்னமலைத்துறையால் அக்கரப்பட்டு றாணமடு, மாலையர்கட்டு, பால்காச்சின வட்டை, எறக்கத்துவட்டை, கோணாவளை, கல்வட்டை, 35ம் கிராமம், கத்துன்வட்டை போன்ற இடங்களுக்கு செல்பவர்களெல்லாம் இந்த அம்பாரயர்ர கோயிலடி வம்மிமர நிழலில் இருந்து நீரருந்தி களைப்பாறித்தான் செல்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாரயர் என்பவர் தனது வழிபாடடுக்காக அவருடைய சொந்த வளவுக்குள் வைத்து வழிபட்டு வந்த அந்த சிறு ஓலைக்குடிசை ஆலயத்தை பொதுமக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டு இலுப்பைக்குள மக்களிடம் இந்த சிறு ஆலயத்தை ஒப்படைத்ததோடு தனக்கு பிறகு தனது பிள்ளைகள் இந்தக் காணியில் உரிமை கோரக்கூடாதென்ற காரணத்தினால் தனது பிள்ளைகள் அனைவரிடமும் சம்மதம் வாங்கி 1975ம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியில் இந்த ஆலயத்தையும் காணியையும் பொதுமக்களிடம் ஒப்படைத்திருக்கிறார். 13ம் கிராமம் 153ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சரவணமுத்து நாகராசா என்பவரின் தலைமையில் நிருவாகக் கட்டமைப்பை உருவாக்கி பொதுமக்கள் வழிபடத் தொடங்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நல்லுள்ளம் கொண்டவர்களை காண்பதரிது.

இவருடைய இரண்டாவது மருமகன் சீனித்தம்பி அம்பலவாணன் அவர்கள் கலையார்வம் கொண்டவர். அந்தக் காலத்தில் மேடை நாடகங்களுக்கு மக்கள் மத்தியில் மிகவும் வரவேற்பு இருந்த காலம். அம்பலவாணன் என்பவர் அங்குள்ள இளைஞர்களைக் கொண்டு அவருடைய தலைமையில் சில நாடகங்களை தயாரித்து ஆலய உற்சவ காலங்களில் மேடை ஏற்றியுள்ளார். இதனால் இளைஞர்களின் மனதிலும் பொது மக்கள் மத்தியிலும் எழுச்சியும் விழிப்பும் ஏற்பட்டது. நாடகக் கலையின் வளர்ச்சியும் இந்த ஆலய வளர்ச்சிக்கு ஒரு காரணம் என்று கூடச் சொல்லலாம். 1977-1978ம் ஆண்டு காலப்பகுதியில் அருவிவெட்டும் குழுவினரால் வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசை வழிபாடுகளைச் செய்து ஆலயத்தை சிறப்பித்தமை விசேட அம்சமாகும். நிருவாக கட்டமைப்புகளில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் பூசை வழிபாடும், உற்சவங்களும் காரிய கருமங்களும் ஆலய கட்டுமானப்பணிகளும் அபிவிருத்தியும் தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ளது. நிருவாகசபையினரின் கடின முயற்சியாலும் பொதுமக்களின் பங்களிப்போடும் புதிய ஆலயம் அமைக்கப்பட்டு 10-06-2006ம் ஆண்டு கும்பாபிசேகம் நடைபெற்றுள்ளது. இந்த ஆலயத்தின் முதலாவது கும்பாபிசேம் என்பது வரலாற்று பதிவாகும். 24ம் இலக்க வீட்டைச் சேர்ந்த த. சோதிநாதன் என்பவரை தலைவராகக் கொண்ட நிருவாகசபையினரின் காலத்தில் இந்த கும்பாபிசேகம் நடைபெற்றதென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆலயத்தின் ஆரம்பம் முதல் இன்று வரையும் தலைவர்களாக இருந்து இந்த ஆலயத்தை வளர்ச்சிபாதையை நோக்கி கொண்டு சென்றவர்களின் பெயர் விபரங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13/133ம் இலக்க வீட்டைச் சேர்ந்த ச. நாகராசா
11/13ம் இலக்க வீட்டைச் சேர்ந்த க. கனகரெட்ணம்
13/131ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சா. நடராசா
13/134ம் இலக்க வீட்டைச் சேர்ந்த ச. புலேந்திரன்
13/103ம் இலக்க வீட்டைச் சேர்ந்த ந. வாசுதேவன்
11/24ம் இலக்க வீட்டைச் சேர்ந்த த. சோதிநாதன்
11/09ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சு. ஜெயராசா ஆகியோர் இந்த ஆலயத்தை பரிபாலனம் செய்த தலைவர்களாவார்கள்.

2006ம் ஆண்டு கும்பாபிசேகம் செய்யப்பட்ட அந்த ஆலயத்தை முற்றாக அகற்றிவிட்டு புதிய ஆலயம் அமைக்கும் பணியை சு. ஜெயராசா அவர்களின் தலைமையிலான நிருவாகசபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த அம்பாரயர் என்பவருக்கு இன்னும் ஒரு வரலாறு இருப்பதாக அறியமுடிகிறது. கல்லோயா குடியேற்றத்திட்டத்துக்கு முன் துறைநீலாவணையில் அவர் வாழ்ந்த காலத்தில் பல வருடங்களுக்கு முன் துறைநீலாவணைக் கிராமத்தின் கிழக்கே அமைந்துள்ள குமரப்போடியார் குளத்துக்குள் அந்த சிறு புட்டியில் பிள்ளையார் உருவிலான ஒரு கல்லை வைத்து அவர் வழிபட்டதாகவும் பின்னர் இன்னும் சிலர் அவரோடு இணைந்து ஓலைக் கொட்டில் அமைத்து வழிபட்டதாகவும் வாய் வழி செய்தியாக அறியக்கூடியதாக உள்ளது. அம்பாரயர் என்பவர் இந்த பிள்ளையாரை வைத்து வழிபட்டதன் காரணமாக இன்று மக்களால் அம்பாரைப் பிள்ளையார் அம்பாரயன் கோயில் என்று எல்லோராலும் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இவர் குடியேற்ற கிராமத்துக்கு போன பிறகு மீனவர் அமைப்பால் இந்த ஆலயம் பராமரிக்கப்பட்டு தற்போது மாரியம்மன் ஆலயத்தோடு இணைந்ததாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06 ஆரம்பகால குடியேற்ற வாசிகள்

நம் அனைவருக்கும் தாயகமான துறைநீலாவணைக் கிராமத்திலிருந்து 1952-1953ம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து அரசினால் கல்லோயா குடியேற்ற திட்டத்தின் கீழ் குடியேற்றம் செய்யப்பட்ட 11ம் கிராமத்தில் குடியேறிவந்த குடும்ப தலைவன் தலைவியர்களின் பெயர் விபரம்.

## 11ம் கிராமம் முதலாம் வட்டாரம்

11/01 சீனித்தம்பி பாலாத்தை
11/02 அம்பாரயர் சின்னத்தங்கம்
11/03 சாமித்தம்பி பிள்ளைம்மா
11/04 வயிரமுத்து சின்னப்பிள்ளை
11/05 சிந்தாத்துரை பூபதிப்பிள்ளை
11/06 முருகப்பன் மாரிமுத்து
11/07 பூபாலப்பிள்ளை கைப்பகம்
11/08 பிள்ளையான்தம்பி மயிலாத்த
11/09 சீனித்தம்பி தெய்வானை
11/10 சாமித்தம்பி பாக்கியம்
11/11 அப்பாக்குட்டி நாகம்மா
11/12 சீனித்தம்பி செல்லம்மா
11/13 கந்தையா செல்லம்மா
11/14 கிருஷ்ணப்பிள்ளை கற்பகவதி
11/15 கணபதிப்பிள்ளை கற்பகம்
11/16 சின்னத்தம்பி பேச்சிப்பிள்ளை
11/17 பிள்ளையான்தம்பி கண்ணமுத்து
11/18 தம்பியப்பா அழகம்மா
11/19 கந்தையா பிள்ளையம்மா
11/20 சின்னத்துரை பூபதிப்பிள்ளை
11/21 ஏரம்பர் பிள்ளையம்மா
11/22 கதிரேசப்பிள்ளை தங்கம்மா
11/23 பூபாலப்பிள்ளை கண்ணகை
11/24 மார்க்கண்டு வள்ளிப்பிள்ளை
11/25 பெரியதம்பி முத்துக்குட்டி
11/26 தம்பியப்பா தங்காத்த
11/27 பொன்னையா பிள்ளையம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11ம் கிராமம் இரண்டாம் வட்டாரம்

11/28 திருமதி. பொன்னையா ராசம்மா
11/29 கந்தையா பாக்கியம்
11/30 பிள்ளையான்தம்பி நேசம்மா
11/31 சீனித்தம்பி அழகம்மா
11/32 கந்தப்பர் செல்லம்மா
11/33 சாமித்தம்பி பிச்சப்பிள்ளை
11/34 சீனித்தம்பி மூத்தபிள்ளை
11/35 கந்தைய்யா அன்னம்மா
11/36 கந்தப்பன் திரவியம்
11/37 பூபாலப்பிள்ளை வீராகி
11/38 செல்லய்யா சின்னத்தங்கம்
11/39 கந்தையா மூத்தபிள்ளை
11/40 கந்தையா பிள்ளையம்மா
11/41 கதிராமத்தம்பி தெய்வான
11/42 முருகப்பன் பிள்ளையம்மா
11/43 சாமித்தம்பி பிச்சப்பிள்ளை
11/44 முத்துக்குமார் கண்ணம்ம
11/45 ஆறுமுகம் சந்தணப்பிள்ளை
11/46 காத்தமுத்து குழந்தையம்மா
11/47 முத்துவேல் மாரிமுத்து
11/48 தம்பியப்பா அழகம்மா
11/49 இளயதம்பி சீதப்பிள்ளை
11/50 சரவணயர் வள்ளிப்பிள்ளை
11/51 தம்பிராசா சின்னப்பிள்ளை
11/52 பூபாலப்பிள்ளை வள்ளிப்பிள்ளை
11/53 சாமித்தம்பி பூபதிப்பிள்ளை
11/54 வயிரர் கண்ணம்மை
11/55 சுப்பிரமணிம் அன்னம்மா
11/56 சுந்தரமூர்த்தி லெட்சுமி
11/57 ஆறுமுகம் கண்ணகை
11/58 வெள்ளக்குட்டி கண்ணம்மை
11/59 வைகாளிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை
11/60 கந்தப்பர் செல்லம்மா
11/61 சாமித்தம்பி பூபதிப்பிள்ளை
11/62 நாகப்பன் அன்னம்மா
11/63 கந்தப்பன் தங்கம்மா
11/64 கணபதிப்பிள்ளை
11/65 கந்தையா மாரிமுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11/66 சாமித்தம்பி சந்தணப்பிள்ளை
11/67 நாகப்பன் மயிலாத்த
11/68 கணபதிப்பிள்ளை பூபதிப்பிள்ளை
11/69 வேலுப்பிள்ளை பாக்கியம்
11/70 பெரியார் குழந்தையம்மா
11/71 சிவகுரு காராமணி
11/72 தம்பாப்பிள்ளை அழகம்மா
11/73 அருளம்பலம் வள்ளிப்பிள்ளை
11/74 தம்பாப்பிள்ளை குப்பப்பிள்ளை
11/75 முத்தர் பாலாத்தை
11/76 சேனாதிபதி சின்னமுத்து
11/77 சித்தம்பலம் மாதாங்கம்
11/78 அலயன் செவத்தாள்
11/79 சோமசுநடதரம் பூபதிப்பிள்ளை
11/80 குஞ்சித்தம்பி சிவக்கொழுந்து
11/81 கிருஷ்ணப்பிள்ளை மாரிமுந்து
11/82 முருகேசப்பிள்ளை பாலாத்தை
11/83 கந்தையா வள்ளிப்பிள்ளை
11/84 முருகேசுப்பிள்ளை நாகம்மா
11/85 முருகப்பன் பார்வதி
11/86 கணபதிப்பிள்ளை கனகம்மா
11/87 சாமித்தம்பி அழகம்மா
11/88 தேசகப்பிள்ளை கண்ணம்மை
11/89 காளிக்குட்டி சீதி
11/90 பிள்ளையம்மா. மகன்மார் பொன்னையா தம்பிராசா
11/91 நாகப்பன் மாரிமுத்து
11/92 கனபதிப்பிள்ளை தங்கம்மா
11/93 முத்துப்பிள்ளை முத்துக்குமார் சகோதரர்கள்
11/94 சாமித்தம்பி அழகம்மா
11/95 பொன்னையா சின்னமுத்து

## 11ம் கிராமம் மூன்றாம் வட்டாரம்

11/96 பொன்னையா வேலாத்த
11/97 கணபதிப்பிள்ளை பார்வதி
11/98 காளிகுட்டி வள்ளிப்பிள்ளை
11/99 கந்தையா சின்னமுத்து
11/100 வைரமுத்து நாகம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11/101 குளந்தையர் வள்ளிப்பிள்ளை
11/102 மயில்வாகனம் ராசம்மா
11/103 முருகப்பன் நாகமணி
11/104 கந்தையா கருப்பாயி
11/105 கருவல்தம்பி தெய்வானை
11/106 காத்தமுத்து காளிப்பிள்ளை
11/107 தம்பையா பிள்ளையம்மா
11/108 கந்தையா அன்னம்மா
11/109 சாமித்தம்பி ராசம்மா
11/110 மாணிக்கன் முத்துப்பிள்ளை
11/111 சாமித்தம்பி தங்கப்பிள்ளை
11/112 ஆறுமுகம் தங்காள்
11/113 சாமித்தம்பி பூபதிப்பிள்ளை
11/114 மார்க்கண்டு பூபதிப்பிள்ளை
11/115 சீனித்தம்பி வள்ளிப்பிள்ளை
11/116 வைரமுத்து கதிராகி
11/117 மாணிக்கன் புள்ளையம்மா
11/118 காத்தமுத்து பொன்னம்மா
11/119 பாலன் சந்தனம்
11/120 மூத்ததம்பி நல்லம்மா
11/121 வேலாயுதம் கற்பகம்
11/122 பிள்ளையான்தம்பி குழந்தையம்மா
11/123 வேலுப்பிள்ளை பிள்ளையம்மா
11/124 மார்க்கண்டு சங்குபதி
11/125 ஞானமுத்து பொன்னம்மா
11/126 கணபதிப்பிள்ளை கனகம்மா
11/127 பொன்னையா கணகம்மா
11/128 வயிரமுத்து மாரிமுத்து
11/129 மாரியார் சந்குவதி
11/130 கணபதிப்பிள்ளை முத்துப்பிள்ளை
11/131 கணபதிப்பிள்ளை நல்லம்மா
11/132 வயிரமுத்து சின்னமுத்து
11/133 காசிப்பிள்ளை கண்ணகை
11/134 சாமித்தம்பி தங்கப்பிள்ளை
11/135 கோவிந்தப்பிள்ளை சின்னப்பிள்ளை
11/136 கிருஷ்ணப்னிள்ளை கண்ணகை
11/137 பிள்ளையான்தம்பி பூபதிப்பிள்ளை
11/138 கண்ணப்பன் தெய்வானை
11/139 செல்லையா காளிப்பிள்ளை
11/140 பிள்ளையான்தமபி கற்பகம்
11/141 பிள்ளையான்தம்பி தங்கப்பிள்ளை
11/142 சாமித்தம்பி செல்லம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11/143 கணபதிப்பிள்ளை ரெட்ணம்
11/144 தாமேதரம் அழகம்மா
11/145 காத்தமுத்து முத்துக்குட்டி

## 11ம் கிராமம் நாலாம் வட்டாரம்

11/146 பொன்னையா சின்னமுத்து
11/147 காத்தமுத்து செல்லம்மா
11/148 பூபாலப்பிள்ளை சின்னப்பிள்ளை
11/149 ஆறுமுகம் மாரிமுத்து
11/150 தம்பிமுத்து பிள்ளைம்மா
11/151 சிதம்பரப்பிள்ளை சந்தனப்பிள்ளை
11/152 இராமக்குட்டி தங்கமுத்து
11/153 வினாசித்தம்பி மாரிமுத்து
11/154 பொன்னையா தங்கமனி
11/155 சாமித்தம்பி சின்னத்தங்கம்
11/156 பெரியதம்பி சந்தனப்பிள்ளை
11/157 கந்தையா சங்குவதி
11/158 கந்தையா பொன்னம்மா
11/159 சின்னத்தம்பி சந்தனம்
11/160 சாமித்தம்பி நாகமணி
11/161 கந்தப்பன் செல்லம்மா
11/162 சினித்தம்பி மேரி
11/163 கந்தப்பன் தெய்வானை
11/164 வினாசித்தம்பி மாரிமுத்து
11/165 கேசகப்பிள்ளை காளிப்பிள்ளை

மேற்சொல்லப்பட்ட குடும்பத்தலைவன் தலைவியர்கள் அவர்களுடைய ஆண் பெண் பிள்ளைகளோடும் குடியேறிவந்து காடுமேடாக இருந்த காணிகளைத் துப்பரவு செய்து குழியெடுத்து தலையால் மண் சுமந்து காணிகளைத் திருத்தி விவசாய செய்கையில் ஈடுபட்டதோடு குடியிருப்புக் காணிகளுக்குள்ளும் மா, பலா, தென்னை போன்ற பயன்தரும் மரங்களையெல்லாம் நாட்டி வளர்த்து இப்போது இருக்கின்ற சந்ததியை அனுபவிக்கத் தந்துவிட்டு சென்றிருக்கிறார்கள். அவர்களை எத்தனை சந்ததிகள் தோன்றினாலும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும் இந்த பூமியுள்ள வரையும் நினைவு கூரத்தக்கவர்கள் இந்த குடியேற்ற வாசிகள். இவர்களை இவர்களுடைய சந்ததியினர் இதயங்களில் வைத்துப் பூசிக்க கடமைப்பட்டவர்கள். சில வீடுகள் வேறு நபர்களுக்கு கைமாறியிருக்கிறது சிலர் விலையாகவும் விற்றிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைநீலாவணையை தாயகமாகக் கொண்ட சந்ததியினர் வாழ்ந்து கொண்டிருக்கும் இடங்கள். அம்பாறை மாவட்ட நாவிதன்வெளி பிரதேச செயலகப்பிரிவில் 7ம் கிராமம், 13ம் கிராமத்தில் ஒரு பகுதி, 11ம் கிராமம், 15ம் கிராமம் மற்றும் திருக்கோயில் பிரதேச செயலகப்பிரிவில் வினாயகபுரம், சின்னத்தோட்டம், தாமரைக்குளம், தங்கவேலாயுதபுரம், கஞ்சுகுடிச்சாறுபோன்ற இடங்களிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெல்லாவெளி பிரதேச செயலகப்பிரிவில் 13ம் கிராமதில் ஒரு பகுதியும் மாதிரிக் கிராமம் மாலயர்க்கட்டு (சின்னவத்தை) கல்வட்டை, 35ம் கிராமம், (வைக்யெல்ல) நெடியவட்ட, யானைகட்டியவெளி போன்ற இடங்களிலும் சில படித்த அரச தொழில் புரிபவர்கள் மட்டக்களப்பு நகரத்திலும் வாழ்ந்து வருகிறார்கள். திருகோணமலை மாவட்டத்திலும் தம்பலகாமம், கந்தளாய் போன்ற இடங்களில் நீண்ட காலமாக துறைநீலாவணைச் சந்ததியினர் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

நாங்கள் துறைநீலாவணையை தாயகமாகக் கொண்டவர்களாக இருந்தாலும் நம் அனைவருக்கும் பூர்வீகத் தாயகம் வீரர்முனை. வீரர்முனை என்பது காரணப் பெயர். மட்டக்களப்பை இராஜதானியாகக் கொண்டு ஆட்சி புரிந்த கூர்த்திக மன்னனின் வீரர்கள் மட்டக்களப்பு வாவியின் தெற்கு எல்லையில் அரண் அமைத்து காவல் காத்து வந்ததன் காரணமாக வீரர்முனையென பெயர் வந்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

வீரர்முனை எனும் சொல் மருவி வீரமுனையென்று தற்போது எல்லோராலும் அழைக்கப்படுகின்றது. சோழ இளவரசியான சீர்பாத தேவியோடு இந்தியாவிலிருந்து வந்து இந்தவீரர் முனையில் குடியேறி இருந்த குடிப் பரம்பல்கள்தான் இன்று சேனைக்குடியிருப்பு, நாவிதன்வெளி, துறைநீலாவணை, குறுமண்வெளி, மகிளூர்முனை, மண்டூர்க் கோட்டமுனை, கரையாக்கன்தீவு, பாலமுனை தம்பலவத்தை, வளத்தாப்பிட்டி, மல்வத்தை, மல்லிகைத்தீவு, வீரச்சோலைவட்ட போன்ற இடங்களில் வாழ்ந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சீர்பாதகுல வரலாறு பற்றி நான் இங்கு விபரிக்கவில்லை. குறுமண்வெளியைச் சேர்ந்த எழுத்தாளரும் ஆசிரியருமான திரு. அருள்செல்வநாயகம் அவர்களினால் எழுதப்பட்ட " சீர்பாத குல வரலாறு "எனும் நூலும் வீரமுனையைச் சேர்ந்த ஆசிரியர் த. லோகிதாசன் அவர்களினால் எழுதப்பட்ட "சீர்பாதர் சரித்திரம்" எனும் நூலும் ஏற்கனவே வெளிவந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு: 1952 - 1953ம் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற கல்லோயா குடியேற்றத்திட்டத்தில் நமது பகுதியைச் சேர்ந்த பல கிராமத்திலுள்ள மக்களைக் கொண்டு குடியேற்றுவதில் முன்னின்று உழைத்தவர் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் முன்னாள் தலைவரும் மட்டக்களப்பு பட்டிருப்புத் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. சி. மு. இராசமாணிக்கம் அவர்களின் கடின முயற்சியின் பலனாக நம்மவர்களை பல குடியேற்றக்கிராமங்களில் கொண்டு குடியேற்றம் செய்ததாக வரலாறுகள் மூலம் அறிய முடிகிறது. இந்தக் குடியேற்றத்திட்டம் நடைபெற்ற காலப்பகுதியில் எல்லாப்பிரதேசமும் மட்டக்களப்பு மாவட்டமாக இருந்ததாகவும், 1961ம் ஆண்டு 4ம் மாதம் 10ம் திகதி இப்போதிருக்கின்ற அம்பாரை மாவட்டம் என்ற பெயரோடு இரண்டாகப் பிரிக்கப்பட்டதாகவும் அறியமுடிகின்றது. இது ஒரு வரலாற்றுக் குறிப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07 11ம் கிராமமும் கரப்பந்தாட்டமும்

11ம் கிராம மயானத்திலிருந்து தெற்கு நோக்கி செல்லும் பாதை 18ம் வாய்க்காலில் வந்து சேராமல் 35ம் இலக்க வளவு ஓரத்தால் சென்று 5ம் வாய்க்காலை ஊடறுத்து 43ம், 49ம், 50ம், 52ம் இலக்க குடியிருப்பு காணிகளை ஊடறுத்து புகையிலைப்பாம் புளியடிப்பிள்ளையார் ஆலயம் ஆகிய பிரதேசங்களையும் ஊடறுத்து 11ம் கிராம பாடசாலை ஆசிரியர் விடுதி மற்றும் 11ம் கிராம கூட்டுறவு கடைக்கு செல்லும் பாதை ஆகிய பகுதிகளையும் ஊடறுத்து சென்று, 3ம் வாய்க்கால் அதாவது இப்போது இருக்கின்ற ஆலையடிச் சந்தியை சென்றடையும். இந்தச் சந்திக்கு அந்தக் காலத்தில் தரங்கொண்டாமடுச் சந்தி என்று ஒரு பெயர் இருந்தது. இப்போது அந்தப் பெயர் மறைந்துவிட்டது. இதை கீழ்றோடென்று சொல்லுவார்கள். அந்தக் காலத்தில் மக்கள் அதிகமாக இந்த பாதையைத்தான் பயன்படுத்தினார்கள். ஆனால் இப்போது இந்தப் பாதை மக்கள் குடியிருப்புகளாக மாறிவிட்டது.

18ம் வாய்க்கால் 5ஆவது கோசுவைக் கிழக்கு பக்கமாக 52ம் இலக்க குடியிருப்பு காணிக்கும் 18ம் வாய்க்காலுக்கும் இடைப்பட்ட இந்த கீழ் றோட்டு என்று சொல்லப்படுகின்ற பாதையில் கரப்பந்தாட்ட மைதானம் அமைத்து 11ம் கிராம 47ம் இலக்க வீட்டைச் சேர்ந்த முத்துவேல் என்பவர் 11/48ம் இலக்க வீட்டைச் சேர்ந்த தம்பியப்பா என்பவர் மற்றும் இளைஞர்களான வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட 11/36ம் இலக்க வீட்டைச் சேர்ந்த மாயவர் என்று அழைக்கப்படும் கிருஸ்ணப்பிள்ளை 11/49ம் இலக்க வீட்டைச் சேர்ந்த அருணாசலம் என்பவர் 11/50ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சீனிக்குட்டி என்பவர் 11/51ம் இலக்க வீட்டைச் சேர்ந்த கோவிந்தப்பிள்ளை என்பவர் 11/52ம் இலக்க வீட்டைச் சேர்ந்த கோணேசன் என்பவர் 11/67ம் இலக்க வீட்டைச் சேர்ந்த மாமாங்கம் என்பவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இந்த இடத்தில் இரண்டு கட்டைகளை நாட்டி நடுவில் ஒரு வலைமாதிரி ஒன்றை கட்டி ஒரு பந்தைப் போட்டு அங்கும் இங்குமாக எல்லோரும் அடித்து விளையாடுவார்கள். இவர்களை சுற்றி பலபேர் நிற்பார்கள். நானும் இன்னும் பல சிறுவர்களும் ஓடிச் சென்று இந்த பந்து விளையாட்டை பாரப்போம்.

நான் மிகவும் சிறுவனாக இருந்தபடியால் அதிசயமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது எனக்கு. இந்தக் காட்சி ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் நாங்கள் பின்னேரம் ஆகிவிட்டால் இந்த இடத்துக்கு ஓடிவந்து இருந்துவிடுவோம் இவர்கள் அடிக்கிற பந்து வெளியில் உருண்டு சென்றால் நாங்கள் ஒருவரை ஒருவர் முண்டியடித்துக் கொண்டு ஓடிச் சென்று பந்தைப் பொறுக்கிக் கொண்டு அவர்களிடம் கொடுப்போம். ஒரு நாள் இவர்கள் அடித்த பந்து வாய்க்காலுக்குள் விழுந்துவிட்டது 48ம் இலக்க வீட்டைச் சேர்ந்த தம்பியப்பா என்பவர் வாய்க்காலுக்குள் இறங்கி பந்தை எடுத்து வந்தார். இந்த இடம் சரிவராது என்று அவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

சில நாட்களுக்கு பிறகு 11ம் கிராம பாடசாலைக்கு அருகாமையில் இவர்கள் விளையாடுவதை கண்டோம். சிறுவர்களாகிய நாங்கள் அங்கும் சென்று பந்து பொறுக்கிக் கொடுத்து விளையாட்டை ரசிப்பது வழக்கம். 82ம் இலக்க வீட்டைச் சேர்ந்த இலட்சுமணன் 90ம் இலக்க வீட்டைச் சேர்ந்த ஓடாவி பொன்னம்பலம் 95ம் இலக்க வீட்டைச் சேர்ந்த வினாயகமூர்த்தி 56ம் இலக்க வீட்டைச் சேர்ந்த ஜெகதீசன் என்பவர்கள் மிகவும் சிறந்த வீரர்களாக விளையாடுவார்கள். 95ம் இலக்க வீட்டைச் சேர்ந்த வினாயகம் என்பவர் விளையாடும் போது மிகவும் நகைச்சுவையாக பேசிப் பேசி விளையாடி எல்லோரையும் சிரிக்க வைப்பார். குறிப்பாக 57ம் இலக்க வீட்டைச் சேர்ந்த நல்லையா என்பவர் மற்றவர்கள் விளையாடும் போது தான்தான் விளையாடுவது போன்று கண்ணசைத்து கைகால்களை பாவனை செய்வார். வினாயகம் என்பவர் ஒப்பனை சொல்லி கேலி செய்வார் இவருடைய நகைச்சுவையைக் கேட்டு சிரிப்பதற்காகவே பின்னேரமானால் பெரும் கூட்டமே கூடிவிடும்.

இந்தக் காலப்பகுதியில் 11ம் கிராம 154ம் இலக்க வளவுக்குள் மைதானம் அமைத்து வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை பூபாலப்பிள்ளை சின்னத்தம்பி போன்ற பல இளைஞர்கள் ஒன்று சேர்ந்து கரப்பந்தாட்டத்தை ஆரம்பித்துவிட்டார்கள். இதற்கு பிறகுதான் ஏனைய வட்டாரங்களிலும் கரப்பந்தாட்டம் தோற்றம் பெற்றது. முதலாம் வட்டாரத்தில் 13ம் இலக்க வீட்டைச் சேர்ந்த காலம் சென்ற க.கனகரெட்ணம் என்பவரின் தலைமையில் கரப்பந்தாட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்பதை குறிப்பிட்டு சொல்லலாம். ஆனால் தற்போதைய றாணமடு இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் இருந்த கரப்பந்தாட்ட மைதானத்தில் அதிகமானவர்கள் கூடி விளையாடுவதை அந்தக் காலத்தில் காணமுடிந்தது.

1965ம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியில் நானும் என்போன்ற சில இளைஞர்களும் இவர்களோடு இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரப்பந்தாட்டத்தில் ஈடுபட்டோம். அதிகமான வீரர்கள் இந்த விளையாட்டில் ஈடுபட்டதன் காரணமாக இந்த மைதானத்துக்கு மேற்கு பக்கம் ஆசிரியர் விடுதிக்கு அருகாமையில் இன்னும் ஒரு மைதானம் அமைத்து இரண்டு பகுதிகளாக விளையாட்டில் ஈடுபட்டார்கள். ஆனால் என் போன்றவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைப்பது மிகவும் குறைவாகவே இருக்கும். இதன் காரணமாக நாங்கள் 12 பேர் சேர்ந்து ஒரு ஆளுக்கு ஐந்து ரூபா காசி எடுத்து கல்முனைக்கு சென்று புதுப்பந்து வாங்கிவந்து தற்போது மிகவும் பிரமாண்டமான ஆலயமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும் புளியடிப்பிள்ளையார் ஆலயத்தின் முன் வீதியில் அந்தக் காலத்தில் மிகவும் காடாக இருந்தது அதை துப்பரவு செய்து மைதானம் அமைத்து விளையாட ஆரம்பித்தோம். இது எங்களுடைய கன்னிமுயற்சி என்று கூடச் சொல்லலாம்.

அந்தக் காலத்தில் ஆறுபேரைக் கொண்டதுதான் ஒரு அணி. இரண்டு பக்கத்திலும் 12 பேர் நின்று விளையாடுவார்கள். எமது மூத்த வீரர்கள் அந்த நாளையில் வெளியிடங்களுக்கு சென்று பல போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பல வெற்றி தோல்விகளைச் சந்தித்தவர்கள். அந்தக் காலத்தில் ஜெகதீசன் என்று சொன்னால் மாற்று அணியினருக்கு உள்ளூற ஒரு தயக்கம். அந்த அளவுக்கு துடுப்பான ஒரு சிறந்த விளையாட்டு வீரர் அவர். ஆனால் சில காலத்துக்கு பிறகு மூத்த வீரர்கள் ஓய்வு எடுத்துவிட்டார்கள். நாங்கள் அவர்கள் விட்ட இடத்தில் இருந்து விளையாட்டை தொடர்ந்தோம். மீண்டும் றாணமடு இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் இருந்த பழைய மைதானத்தில் வந்து விளையாட ஆரம்பித்தோம் எங்களை முழுமையான விளையாட்டு வீரர்களாக உருவாக்கிவிட்ட அந்த இடத்தை என்றும் மறக்க முடியாது. தற்போது அந்த இடத்தில் பாடசாலைக்கட்டடம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இது மாத்திரமல்ல 11/154ம் இலக்க வளவு ஒரு விசாலமான வளவு என்ற காரணத்தினால் அங்கும் மைதானம் அமைத்து விளையாடுவது மற்றும் தற்போது கண்ணகி வித்தியாலயம் அமைந்திருக்கும் இடத்திலும் மைதானம் அமைத்து விளையாடுவது மூன்று இடத்திலும் காலத்துக்குக் காலம் மாறி, மாறி விளையாடுவது வழக்கம். "கிறீன் லையிற்" விளையாட்டுக் கழகம் என்ற திருநாமத்தோடு சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அனேகமான போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வெற்றிவாகை சூடி சிறந்த கரப்பந்தாட்ட அணியாக திகழ்ந்த காலம் அது. கரப்பந்தாட்டத்திற்கு மிகவும் வரவேற்பு இருந்த காலம் அது.

கிழக்கு மாகாண ரீதியில் சம்பியன் அணிகளாக திருகோணமலை மாவட்டத்தில் சல்லி, சாம்பல் தீவு, மூதூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர், கல்லாறு, செங்கலடி, கல்லடி, துறைநீலாவணை மற்றும் அம்பாரை மாவட்டத்தில் கல்முனை மார்க்கட் அணியினரும், தம்பிலுவில் இரண்டு அணியினரும், 11ம் கிராம கிறீன்லைற் அணியும் சம்பியன் அணிகளாக திகழ்ந்த காலம் அது. சென்றல்கேம் பொலிசாரால் ஆண்டுதோறும் தமிழ் சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் பொது விளையாட்டு போட்டி நிகழ்ச்சி நடாத்துவது வழக்கம். அந்தவகையில் 1977ம் ஆண்டு பிரமாண்டமான முறையில் விளையாட்டு போட்டி நிகழ்ச்சியை நடாத்துவதற்கு பொலிசாரால் ஏற்பாடு செய்யப்பட்டு முதல் கட்டமாக சித்திரைப் புத்தாண்டுக்கு இரண்டு வாரங்களுக்கு முன் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியை கட்டம் கட்டமாக நடாத்தினார்கள். இந்த கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் என்னோடு 53ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சிவலிங்கம் 49ம் இலக்க வீட்டைச் சேர்ந்த ஓய்வுபெற்ற தபாலதிபர் குருநாதன் 45ம் இலக்க வீட்டைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபரும் கோட்டக்கல்வி அதிகாரியுமான வினாயகப்பிள்ளை ஓய்வுபெற்ற பிரதி அதிபர் சண்முகம் காலம் சென்ற 48ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சின்னத்துரை ஆகியோர் ஆறுபேர் கொண்ட அணியாக விளையாடி கட்டம் கட்டமாக நடாத்தப்பட்ட இந்த கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் சகல அணிகளையும் தோற்கடித்து வெற்றி கொண்டு இறுதிச் சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தோம்.

சென்றல்கேம் பொலிஸ் அணியினர்க்கும் எங்களுக்கும் இறுதிச் சுற்றுப் போட்டி நடைபெற்றது. கிறீன் லையிற் அணியை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக பொலிஸ் அணியினர் சில விளையாட்டு ரீதியிலான தந்திரோபாயங்களை மேற்கொண்டதன் காரணமாக நாங்கள் ஒரு கட்டத்தில் தோல்வியின் விளிம்பிற்கு சென்றுவிட்டோம். பொலிஸ் நிலைய வளாகத்துக்குள்தான் விளையாட்டு நடைபெற்றது. ஆதரவாளர்களெல்லாம் வெளியேறிவிட்டார்கள். இந்தக் கட்டத்தில் றாணமடு மகாவித்தியாலய அதிபரும் கொத்தனி அதிபருமான காலம்சென்ற சம்புநாதர் தினகரம்பிள்ளை அவர்கள் எங்களை ஆர்வப்படுத்தி "விளையாட்டு இன்னும் முடிவடையவில்லை நீங்கள் வெற்றிபெறுவீர்கள் மனத்தைரியத்தோடு விளையாடுங்கள்" என்று சொல்லி தனி ஒருவராக நின்று எங்களை உற்சாகப்படுத்தியதோடு விளையாட்டு முடியும் வரையும் எங்களுக்கு பக்கத்தில் நின்று ஆதரவு வழங்கினார். நாங்களும் முழுத்திறமையையும் வெளிப்படுத்தி அபாரமாக விளையாடியதன் காரணமாக பொலிஸ் அணியினர் படு தோல்வி அடைந்தனர். நாங்கள் வெற்றிபெற்றோம். பொலிஸ் அணியை 11ம் கிராம கிறீன் லைற் அணியினர் தோற்கடித்துவிட்டார்கள் என்ற செய்தி இந்த பிரதேசமெங்கும் சில காலம் பேசு பொருளாக மாறியிருந்தது. இந்த வெற்றி காலம் சென்ற அமரர் சம்புநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினகரம்பிள்ளை அவர்களுக்கு சமர்ப்பணமாகட்டும். இதற்கு பிறகும் நாங்கள் பல போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து வெற்றி தோல்விகளைச் சந்தித்தோம். இந்தக்காலப்பகுதியில் கரப்பந்தாட்டத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அணிக்கு ஆறுபேராக இருந்த முறைமாறி நான்கு பேரைக் கொண்ட அணியாக மாற்றம் அடைந்தது. இதன் காரணமாக பல வீரர்கள் விளையாடுவார்கள். ஆனால் போட்டிக்கு செல்லும் போது சண்முகம், சின்னத்துரை, குருநாதன், கணேசமூர்த்தி ஆகியோர் நான்குபேர் கொண்ட அணியாகச் சென்று விளையாடுவது வழக்கம். 53ம் இலக்கவீட்டைச் சேர்ந்த சிவலிங்கம் 49ம் இல தெய்வேந்திரன் 154ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சின்னத்தம்பி 161ம் இலக்க வீட்டைச் சேர்ந்த வேலிப்பிள்ளை ஆகியோர் சிறந்த கரப்பந்தாட்ட வீரர்களாகத் திகழ்ந்தவர்கள். பொழுதுபோக்குக்காக இன்னும் அனேகமானவர்கள் வந்து விளையாடுவது வழக்கம்.

1980ம் ஆண்டு எட்டாம் மாதம் 03ம் திகதி கிழக்குமாகாண ரீதியில் அணிக்கு நான்குபேர் கொண்ட மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி நிகழ்ச்சியை நடாத்தியுள்ளோம். றாணமடு மகாவித்தியாலய வளாகத்தில்தான் இந்த விளையாட்டு போட்டி நடைபெற்றது. ABC என்று மூன்று மைதானங்கள் அமைக்கப்பட்டிருந்தது. 40க்கு மேற்பட்ட கழகங்கள் இந்த போட்டி நிகழ்ச்சியில் பங்கு கொண்டிருந்தது. இறுதியில் மட்டக்களப்பு கல்லடி அணியினர் வெற்றிபெற்று கேடயத்தை சுவிகரித்துக் கொண்டனர். இதில் விசேடம் என்னவென்றால் சவால் கேடயமாகத்தான் இவர்களுக்கு வழங்கப்பட்டது. மூன்று தடவைகள் தொடர்ச்சியாக வெற்றி பெற்ற கழகத்துக்கு கேடயம் சொந்தமாகும் என்ற விளையாட்டு விதிமுறைக்கு அமைவாகத்தான் இந்த சவால் கேடயமாக வழங்கி வைக்கப்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

கிறீன் லைற் விளையாட்டுக்கழக ஸ்தாபகர்களான சண்முகம், கணேசமூர்த்தி, குருநாதன், சின்னத்துரை, விநாயகம்பிள்ளை, மார்க்கண்டு ஆகிய நாங்கள்தான் 11ம் கிராம வரலாற்றிலேயே கிழக்கு இலங்கை ரீதியிலான நான்குபேர் கொண்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி நிகழ்ச்சியை நடாத்தி ஆரம்பித்து வைத்துள்ளோம். இதை யாரும் மறுக்கவும் முடியாது மறைக்கவும் முடியாது. இதற்கு பிறகு இலுப்பைகுள உதயசூரியன் அணியினர் காலம் சென்ற 11/13ம் இலக்க வீட்டைச் சேர்ந்த க.கனகரெட்ணம் என்பவரின் தலைமையிலான அணியினர் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி நிகழ்ச்சியை நடத்தியுள்ளனர். இப்போதும் தொடர்ந்து நடாத்தி வருகின்றனர். காலமாற்றத்துக்கு ஏற்ப பல கழகங்கள் உருவாகி பல விளையாட்டுப்போட்டிகளை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக 1980ம் ஆண்டு எங்களால் கிறீன் லைற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுக்கழகத்தினரால் அணிக்கு நான்கு பேர் கொண்ட கிழக்கு இலங்கை ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்ததற்கு பிறகு கிறீன் லையிற் விளையாட்டுக்கழகத்தை தலைமையேற்று வழிநடாத்தி வந்த தலைவர்களின் பெயர் விபரம்.

01. இ. குருநாதன்
02. சே. புவனேந்திரன்
03. த. நீலவர்ணன்
04. த. சிவராசா
05. தெ. ஜீவா
06. இ. சசி
07. பே. கிருபாகரன்
08. வ. குமார்
09. கோ. சாந்தன்
10. சி. கிருபைராசா ஆகியோரின் தலைமையில் பல இளைஞர்கள் ஒன்று சேர்ந்து ஆண்டுதோறும் கரப்பந்தாட்டம், கிரிக்கட் மற்றும் கலாசார விளையாட்டுப் போடடி நிகழ்ச்சிகளை நடாத்திவருகின்றார்கள்.

1990ம் ஆண்டு இந்த நாட்டில் ஏற்பட்ட தமிழ் மக்களின் வரலாற்றிலே மறக்கமுடியாத கொடூரமான வன்செயல் காரணமாக சில வருடங்கள் இந்த விளையாட்டுப் போடடி நிகழ்ச்சிகள் தடைப்பட்டிருந்தது என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

1980ம் ஆண்டு முதல் இந்த விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் அனைத்தும் 11ம் கிராம இந்து மகாவித்தியாலயத்தை சூழவுள்ள பிரதேசத்தில்தான் பல வருடங்களாக நடைபெற்று வந்தது. பிற்பட்ட காலத்தில் பாடசாலை அபிவிருத்தி அடைந்ததன் காரணமாக அந்த பகுதிகளில் எல்லாம் பாடசாலைக் கட்டிடங்கள் அமைந்துள்ளன. இதன் காரணமாக 11ம் கிராம இந்து மயானத்துக்கு அருகாமையில் ஒரு பொது விளையாட்டு மைதானத்தை அமைத்து அந்த விளையாட்டுத்திடலில் இப்போது சகல விளையாட்டு போட்டி நிகழ்ச்சிகளும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

1980ம் ஆண்டுக்கு பிற்பட்ட காலங்களில் 11/49ம் இலக்க வீட்டை சேர்ந்தவர்களான தெய்வேந்திரன், குருநாதன், கோபால கிருஷ்ணன் மூவரும் சகோதரர்கள். 11/50ம் இலக்க வீட்டைச் சேர்ந்த தெய்வேந்திரன், புவனேந்திரன் இருவரும் சகோதரர்கள். இவர்கள் நான்கு பேர் கொண்ட அணியாக வெளியிடங்களுக்கு சென்று பல போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிவாகை சூடி கிறின் லைற் விளையாட்டுக் கழகத்திற்கு பெருமைசேர்த்தவர்கள். இவர்களுக்கு பிறகு காலத்திற்கு காலம் உருவாகின்ற இளைஞர்கள் இதைத்தொடர்ந்து வழிநடத்திக் கொண்டிருப்பது வரவேற்கதக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11ம் கிராம கிறீன்லேட் விளையாட்டுக் கழகம் நடாத்தும்**
**கிழக்கிலங்கை ரீதியான நான்குபேர் கொண்ட**

**மாபெரும்**

# கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

# 1980

**அன்புடையீர்,**

*எங்கள் கிறீன்லேற் விளையாட்டுக் கழகத்திஞல் நான்குபேர் கொண்ட கிழக்கிலங்கை ரீதியான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி 1980-08-03ம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 7-30 மணிக்கு தொடங்கி மதியபோசன இடைவேளையின் பின் தொடர்ந்து மாலை 4-30 மணி வரை நடைபெறும்.*

**இடம்: பாடசாலை விளையாட்டு மைதானம்**
**காலம்: 1980-08-03 ஞாயிற்றுக்கிழமை**

*பிரதம விருந்தினர்:*

## ஜனுப். M. A. அப்துல் மஜீத் அவர்கள்

*(எரிபொருள் மின்சக்தி பிரதி அமைச்சரும், சம்மாந்துறைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும்)*

**விருந்தினர்கள்:**

**திரு. T. ரங்கராசா அவர்கள்**
(A. G. A. சம்மாந்துறை)

**திரு. P. செல்வநாயகம் அவர்கள்**
(ஆணையாளர் - நாவிதன்வெளி)

**திரு. S. தினகரன்பிள்ளை அவர்கள்**
(தலைமை ஆசிரியர் க.மு/ ரூணமடு அ. த. க. பா)

**திரு. S. ஜெயசிங்கன் அவர்கள்**
(T. A நீர்ப்பாசனப் பகுதி)

**திரு. R. தனபாலசிங்கம் அவர்கள்**
(T. D. O. அம்பாறை)

**திரு. கா. நல்லையா அவர்கள்**
(C. O. 11ம், 13ம் கிராமம்)

*சக ஆசிரியர்களும் இன்னும் பல விருந்தினர்களும் கலந்துகொள்வார்கள்.*
*வெற்றியீட்டிய கழகங்களுக்கு பிரதம விருந்தினர்*
**ஜனுப். M. A. அப்துல் மஜீத் அவர்கள்**
*பரிசுகள் வழங்குவார்.*

## அனைவரையும் அன்புடன் அழைக்கிறேம்

**11ம் கிராம**
**கிறீன் லேற் விளையாட்டுக் கழகம்**
*சென்றல்கேம்.*

குட்வின் கம்பனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08 நாட்டுக் கூத்து

அந்தக்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனேகமான கிராமங்களில் நமது பாரம்பரிய கலைகளில் ஒன்றான நாட்டுக்கூத்து மிகவும் பிரபல்யம் பெற்றிருந்த காலம். ஒவ்வொரு ஊர்களிலும் ஒருவருடத்துக்கு குறைந்தது ஒரு கூத்தாவது அரங்கேற்றம் செய்வது வழக்கம். இந்த நாட்டுக் கூத்தை மூன்று பிரிவுகளாக பிரித்து மேடையேற்றம் செய்வார்கள். ஆரம்பத்தில் இந்தக் கலையில் ஆர்வம் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு குழுவை அமைப்பார்கள். பொருத்தமான ஒரு அண்ணாவியாரை தெரிவு செய்வார்கள். இவர்கள் எல்லோரும் சேர்ந்து மகாபாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம், அரிச்சந்திரன், நளமகாராசன் கதை, கண்டிராசன் கதை போன்ற புராண இலக்கிய வரலாறுகளில் இருந்து ஒரு கதையை தேர்ந்து எடுப்பார்கள். அந்தக்கதைகளில் வரும் ஆண், பெண் பாத்திரங்களுக்கு ஏற்ற பொருத்தமான நடிகர்களை தேர்ந்தெடுப்பார்கள். பாடல்களை பாடுவதற்காகவும் தாளத்துக்கு ஏற்றவாறு ஆடுவதற்காகவும் சில காலம் பழக்குவார்கள். பிரதம அண்ணாவியார் மத்தளம் அடிப்பார். பக்கவாத்திய கலைஞர்கள் சல்லாரி அடிப்பார்கள் பக்கப்பாட்டு பாடுவார்கள். ஏனையவர்கள் நிருவாகத்தை கவனிப்பார்கள்.

சிலகாலம் பழக்கப்பட்டதற்கு பிறகு முதலாவது ஒத்திகை பாப்பார்கள் இதை அடுக்குப் பாரப்பது என்று சொல்வார்கள். இதற்கு பிறகு அவர்களுக்கு வசதியான ஒரு நாளை தெரிவு செய்து பகல் வேளையில் காலை முதல் மாலை வரையும் ஆடுவார்கள். விசேட அம்சம் என்னவென்றால் காலில் சலங்கை கட்டி ஆடுவார்கள். சனக்கூட்டம் நிரம்பிவழியும். வெளிக்கிராமங்களில் இருந்தும் பலபேர் வருவார்கள். அந்தக் கிராமமே விழாக்கோலமாகத்தான் இருக்கும். இதை சலங்கை கட்டுவதென்று சொல்லுவார்கள். இதற்கு பிறகு இந்த கூத்தை ஏற்பாடு செய்த முகாமையாளர்கள் அரங்கேற்றம் செய்வதற்கும் நாள் குறிப்பார்கள். இந்த நாட்டுக் கூத்துக்கலைக்கு ஏற்றவாறு உடைகள், வில்லு, அம்பு, கத்தி, கோடரி, வாள், தண்டாயுதம் முதலான பல்வேறுபட்ட ஆயுதம் பல விதமான அலங்கார உடுப்புகள் தயாரித்து வைத்திருப்பார்கள். மட்டக்களப்பு, கன்னன்குடா, மண்டபத்தடி போன்ற இடங்களில் அந்தக்காலத்தில் இந்த உடுப்பு தயாரிப்பவர்கள் இருப்பார்கள். அவர்களிடம் போய் பொருத்தம் பேசி கொண்டுவருவார்கள். அலங்காரம் செய்வதற்காக அவர்களும் கூடவந்து பொருத்தமான பாத்திரத்துக்கு பொருத்தமான உடுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டு முகமாத்து போட்டு அந்த அந்த வேடத்துக்குரிய ஆயுதங்களையும் கையில் கொடுத்துவிடுவார்கள். அலங்காரம் செய்த பிறகு ஆட்களையே மதிக்க முடியாத அளவுக்கு உருமாற்றம் செய்துவிடுவார்கள்.

திறந்தவெளியில் வட்டக்களரி அமைத்து அலங்காரம் செய்து "பெற்றோள்மெக்ஸ்" வெளிச்சத்தில் மாலை வேளை ஆனதும் கூத்து ஆரம்பம் ஆகும். வெளிக்கிராமத்து மக்களும் ஊர் மக்களும் நேரகாலத்தோடு வந்து வட்டக்களரியை சுற்றி இடம் பிடித்து அமர்ந்துவிடுவார்கள். கூத்து மேடையேறுவதற்கு முன் பிரதம அண்ணவியார் பக்கவாத்திய கலைஞர்கள் எல்லாம் மேடைக்கு வந்து இறைவணக்கம் செய்து தெய்வத்தை வேண்டி விருத்தம் சொல்லி தாளவாத்தியத்தை இசைத்து ஆரவாரம் செய்வார்கள். இதற்கு பிறகு கட்டிய காரன் வரவு இடம் பெறும் இந்த கட்டியகாரன் என்பவர் மேடைக்கு வந்து தாள வாத்திய இசையோடு நடைபெறப்போகும் சம்பவத்தை பாடல் மூலம் கட்டியம் கூறிச் செல்வார். அதற்கு பிறகு சரித்திரத்திற்கு ஏற்றவாறு நாடகம் மேடையேறும். ஒவ்வொரு வேடம் தரித்தவர்களும் முதலில் மேடைக்கு வரும்போது பிரதம அண்ணாவியாரும் பக்கவாத்திய கலைஞர்களும் வரவேற்பு தாளம் இசைத்து வரவேற்பு பாடல் பாடி வரவேற்பார்கள். இந்த நேரத்தில் கூத்தாடுபவர்களின் உறவினர்களால் பட்டாசு கொளுத்தி வான வேடிக்கைகளால் ஆரவாரம் செய்து வரவேற்பதோடு மாலை அணிவித்து சால்வை அணிவித்து உறவினர்களால் பணமும் அன்பளிப்பு செய்து மகிழ்விப்பார்கள். இது ஒரு சிறப்பம்சமாகும். வெறுமனே இது ஒரு கண்காட்சி மட்டுமல்ல ஆடல் பாடல் தாளலயம் குரல் இனிமையோடு ஒரு வரலாற்றையே எடுத்துக் கூறும் கலையம்சமாகும்.

வடமோடி தென்மோடி என்று இதை இரண்டு வகைப்படுத்திக் கூறுவார்கள்.

விசேடம் என்னவென்றால் மாலை வேளையில் வந்து வட்டக்களரியைச் சுற்றி இடம்பிடித்து அமர்ந்தவர்கள் விடிய விடிய கூத்தை ரசித்து விடிந்து கூத்து முற்றாக நிறைவு பெற்ற பிறகுதான் அந்த இடத்ததை விட்டு நகர்ந்து செல்வார்கள். அந்த அளவுக்கு மதிப்பும் மரியாதையும் வரவேற்பும் நாட்டுக் கூத்துக்கு இருந்த காலம் அது. இப்படிப்பட்ட இந்த பாரம்பரிய கலை எமது பிரதேசத்தில் இப்போது அருகிப்போய்விட்டது. ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பிரதேசமான கொக்கட்டிச்சோலை, அரசடித்தீவு மகிழடித்தீவு, முனைக்காடு, பண்டாரியாவெளி, படையாண்ட வெளி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையாகக்ன்தீவு, மண்டபத்தடி, கன்னன்குடா ஆகிய பிரதேசங்களில் இந்தக் கலை இப்போதும் மறையாமல் அங்குள்ள கலைஞர்களால் பேணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

11ம் கிராமத்தில் பல நாட்டுக்கூத்துக்கள் அந்த நாளையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. அதில் எனக்கு தெரிந்தவற்றை தருகின்றேன்.

01. அல்லி நாடகம்
02. வில்வளைவு
03. அருச்சுனன் தவநிலை
04. சித்திரசேனன் சண்டை
05. வீரகுமரன்
06. கற்பக அலங்காரி
07. குயலவன்

போன்ற நாட்டுக்கூத்துகள் இந்தக்கிராமத்தில் உள்ள கலைஞர்களால் அந்தநாளையில் அரங்கேற்றம் செய்யப்பட்வைகளாகும். இதில் பங்குகொண்ட அனேகமான கலைஞர்கள் காலம் சென்று விட்டார்கள். இப்போதும் இந்தக் கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர்களின் பெயர் விபரம்.

11/23ம் இல. வீட்டை சேர்ந்த பூபாலப்பிள்ளை அருளன்

11/38ம் இல. வீட்டை சேர்ந்த செல்லையா நடராசா

11/49ம் இல. வீட்டை சேர்ந்த ஏரம்பு அருணாட்சலம்

11/154ம் இல. வீட்டை சேர்ந்த பொன்னையா சின்னத்தம்பி

11/155ம் இல. வீட்டை சேர்ந்த சாமித்தம்பி மகேஸ்வரன்

11/78ம் இல. வீட்டை சேர்ந்த கோவிந்தப்பிள்ளை பிள்ளையான் தம்பி

11/58ம் இல. வீட்டை சேர்ந்த தம்பியப்பா அருட்பிரகாசம்

11/44ம் இல. வீட்டை சேர்ந்த பிள்ளையான் தம்பி ரகுநாதன்

11/87ம் இல. வீட்டை சேர்ந்த சாமித்தம்பி நடராசா

11/126ம் இல. வீட்டை சேர்ந்த கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை

11/144ம் இல. வீட்டை சேர்ந்த தாமோதரம் வீரகுமார்

11/10ம் இல. வீட்டை சேர்ந்த சாமித்தம்பி கிருஷ்ணபிள்ளை

11/53ம் இல. வீட்டை சேர்ந்த கந்தையா சிவலிங்கம். (இவர் நாட்டுக்கூத்து மட்டுமல்ல அனேகமான மேடை நாடகங்களிலும் நடித்திருக்கிறார். சிறந்த கரப்பந்தாட்ட வீரரும் கூட. அரசினால் வழங்கப்படுகின்ற கலைஞர்களுக்கான கொடுப்பனவு பெற்றுக்கொண்டிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09 மேடை நாடகங்கள்

புளியடிப்பிள்ளையார் ஆலயத்தில் புத்தொளி நாடகமன்றத்தினரால் மேடையேற்றப்பட்ட நாடகங்கள்.

1. மாவீரதக்கன்
2. இரத்தக்கண்ணீர்
3. சங்கிலியன்
4. பக்தமார்க்கண்டேயர்
5. பக்தவல்லாளன்
6. மாபெரும் அலக்சாண்டர்
7. ஓரிரவு
8. விசுவாமித்திரர்
9. எங்கிருந்தோ வந்தான்
10. மக்களாட்சி
11. வஞ்சம்
12. கடமை
13. பழிதீர்த்த பாண்டியன்
14. நல்லநாடகமிது

1977ம் ஆண்டுக்குபிறகு 11ம் கிராமம் 44ம் இலக்க வீட்டைச் சேர்ந்த முத்துக்குமார் வயிரமுத்து என்பவரால் தயாரித்து புளியடிப்பிள்ளையார் ஆலயத்தில் மேடையேற்றப்பட்ட நாடகங்கள்.

15. விதியின் வழியில்
16. விடியாத இரவு

இதில் பல கலைஞர்கள் பங்குபற்றி நடித்திருக்கிறார்கள். திரு. வயிரமுத்து அவர்கள் இளமையிலே கலையார்வம் கொண்டவர். கவிபாடும் ஆற்றலும் இவரிடம் காணப்பட்டது.

பத்தினியம்மன் ஆலயத்தில் உழவர் மன்றத்தினரால் ஏற்பாடு செய்து மேடையேற்றப்பட்ட நாடகங்கள்

1. பணம் தந்த பரிசு
2. என் மகன்

இலுப்பைக் குளம் உதய சூரியன் கலைக்கழகத்தினரால் ஏற்பாடு செய்து மேடையேற்றப்பட்ட நாடகங்கள்

1. பழிதீர்த்த கண்ணகி
2. மகன் தந்த பரிசு
3. யார் அந்த முகமூடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியமுகாம் மத்திய கலைக் கழகத்தினரால் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் மேடையேற்றப்பட்ட நாடகங்கள்

1. கண்டியரசன்
2. அவளுக்காக
3. கமலாகலியாணம்

1985ம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியில் 11/66ம் இலக்க வீட்டை சேர்ந்த காந்தன் என்று அழைக்கப்படும் தவயோகன் அவர்களின் தலைமையில் 11/82ம் இலக்க வீட்டை சேர்ந்த முரசொலிமாறன். 11/41ம் இலக்க வீட்டை சேர்ந்த திருச்செல்வம் சோதிலிங்கம் 11/92ம் இலக்க வீட்டை சேர்ந்த பகிரதன் கண்ணதாசன், 11/51ம் இலக்க வீட்டை சேர்ந்த தெ. தயாலிங்கம் 11/165ம் இலக்க வீட்டை சேர்ந்த மு. ஜெயசுந்தரம் இன்னும் பல இளைஞர்கள் சேர்ந்து வாணி கலா மன்றம் என்னும் நாடகமன்றத்தையும், பிறைம்வோள் என்னும் விளையாட்டுக் கழகத்தையும் தோற்றுவித்து கரப்பந்தாட்டம், கிரிக்கட், கால்பந்தாட்டம் போன்ற பல சுற்றுப்போட்டி நிகழ்ச்சிகளையும் நடாத்தியிருக்கின்றார்கள். வெளிக்கிராமத்திற்கு சென்று பல கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு வெற்றியீட்டியதாக அறிய முடிகின்றது. வாணிகலா நாடகமன்றத்தினரால் சில நாடகங்களும் மேடையேற்றப்பட்டதாக அறியக்கூடியதாக உள்ளது.

1987-1988ம் ஆண்டு காலப்பகுதியில் வாணி கலாமன்றத்தினரால் புளியடிப்பிள்ளையார் ஆலய வளாகத்தில் நாடகப்போட்டி நிகழ்ச்சி ஒன்றை நடாத்தியிருக்கிறார்கள். நடுவர்களாக துறைநீலாவணை ஜீவா ஜீவரத்தினம் பாண்டிருப்பு கவிஞர் பாண்டியூரன் கொத்தனி அதிபரும் கலாபூசணம் தினகரம்பிள்ளை ஆகியோர் நடுவனம்வகித்திருக்கிறார்கள். இதில் 11ம் கிராமம் 44 இலக்க வீட்டை சேர்ந்தவரும் தற்போது 13ம் கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் முத்துக்குமார் வயிரமுத்து என்பவரால் தயாரித்து மேடையேற்றப்பட்ட பக்தியின் வலிமை என்னும் நாடகம் முதலாம் இடம் பெற்றிருக்கிறது. இதில் விசேட அம்சம் என்னவென்றால் இந்த நாடகத்தில் நடித்த நடிகர்கள் அனைவரும் பெண்பிள்ளைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில் சிறந்த விவசாயிகளுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டதாக வாணிகலா மன்றத்தினர் மூலம் அறிய முடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு வயிரமுத்து அவர்கள் பல நாடகங்களை தயாரித்து மேடையேற்றியிருக்கின்றார். வீரமுனை, மட்/வெல்லாவெளி பிரதேச செயலக கலாசார பிரிவினரால் நடாத்தப்பட்ட நாடக போட்டி நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு பரிசில்களும் பெற்றிருக்கிறார். இவரால் தயாரித்து மேடையேற்றப்பட்ட நாடகங்கள்

01. விதியின் வழியில்
02. உறங்காத உள்ளங்கள்
03. கராட்டி சகுந்தலா
04. பக்தியின் வலிமை
05. அதிகாலைப் பறவைகள்
06. விழியில் குற்றிய விரல்கள்
07. இதயத்தில் நீ
08. விடியாத இரவு

இவர் இளமையில் சிறந்த நாடக நடிகனாகவும் ஓரங்க நாடக நடிகனாகவும் திகழ்ந்தவர். கவிபாடுவதிலும் ஈடுபாடு கொண்டவர். பின்னர்நாடக ஆசிரியராகவும் தயாரிப்பாளராகவும் தன்னை சமூகத்தில் அடையாளப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 அரசியல்

நாவிதன்வெளிக்கிராமாட்சி மன்ற உறுப்பினராக 11/11ம் இலக்க வீட்டைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஆறுமுகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க முகாமையாளராகவும் நாவிதன்வெளிக் கிராமாட்சிமன்ற உறுப்பினராகவும் பல தடவை சேவையாற்றியிருக்கிறார். இவர் தவிசாளராக வருவதற்கு பலதடவைகள் முயன்றும் கைகூடவில்லை.

ஒருதடவை நடைபெற்ற கிராமாட்சி மன்ற தேர்தலில் ஆறுமுகம் அவர்களை தோற்கடித்து 11/ம்/கி/69ம் இலக்க வீட்டைச் சேர்ந்த வேலிப்பிள்ளைச் சாத்திரியார் அவர்கள் வெற்றி பெற்றுள்ளார். இவருடைய காலத்தில் இவரால் செய்யப்பட்ட சேவைகளில் ஒன்று இன்றும் மறையாமல் இருக்கிறது. இது அனேகமானவர்களுக்கு தெரியாமல் இருக்கலாம். மூன்றாம் வாய்க்கால் முதலாவது கிளை பிரியும் சந்தியிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் பாதையும் பாலமும் இவரால் செய்யப்பட்டது என்பது வரலாற்று உண்மை.

பிற்பட்ட காலத்தில் இந்தப்பாலம் திருத்தி அமைக்கப்பட்டிருக்கலாம். 1952ம் ஆண்டு குடியேற்றம் செய்யப்பட்ட காலத்திலிருந்து சம்மாந்துறையில்தான் DRO காரியாலயமும் கிராமாட்சி மன்ற தலைமைக்காரியாலயமும் இயங்கி வந்தது. நாவிதன்வெளியில் 7ம் கிராமத்தில் கிராமாட்சி மன்ற உப செயலகம் இயங்கி வந்தது. தற்போது பிரதேசசபை காரியாலயம் அமைந்திருப்பதும் இதே இடத்தில்தான். 1966, 1967ம் ஆண்டு காலப்பகுதியில் இந்த இடத்தில் தற்காலிக சினிமா கொட்டகை அமைத்து திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டது.

நான் சிறுவனாக இருந்த காலம் எனது தாய்தந்தையரோடு சென்று ஆயிரத்தில் ஒருவன், வீரபாண்டிய கட்டபொம்மன் ஆகிய திரைப்படங்களை இந்த சினிமா கொட்டகையில் பார்த்திருக்கிறேன். அந்த பசுமையான நினைவுகள் இன்றும் உள்ளத்திரையில் நிழலாடுகின்றன.

1999ம் ஆண்டுக்குமுன் இதுவரை காலமும் சம்மாந்துறையோடு இயங்கி வந்த பிரதேச செயலகமானது பிரிந்து நாவிதன்வெளி உப பிரதேச செயலகமாக உதயமாகிறது. 2001ம் ஆண்டு தை மாதம் 12ம் திகதி சகல நிருவாக அலகுகளோடும் 20 கிராமசேவகர் பிரிவுகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட நாவிதன்வெளி பிரதேச செயலகமாக தரம் உயர்த்தப்பட்டு மூவின மக்களும் சகோதர வாஞ்சையோடும், ஒற்றுமையோடும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு பிரதேச செயலகமாக செயல்படுகின்றது. இந்த பிரதேச செயலகம் அமைந்திருக்கும் இடத்துக்கு முந்திய வரலாறு ஒன்று இருக்கிறது.

அரசாங்கத்துக்கு சொந்தமான பிரமாண்டமான அரிசி ஆலை ஒன்று இந்த இடத்தில் இருந்தது. விவசாயிகளிடமிருந்து கூட்டுறவு சங்கங்கள் மூலம் அரசாங்கம் நெல்லை கொள்வனவு செய்து இந்த அரிசி ஆலையில் அரிசாக்கப்பட்டு மீண்டும் இந்த அரிசியை கூட்டுறவு கடைகள் மூலம் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கிய காலம் அது. இங்கு உற்பத்தி செய்யப்படும் அரிசியை வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்வதற்காக மட்டக்களப்பிலிருந்து இயந்திரப்படகு மட்டக்களப்பு வாவியூடாக இந்த அரிசி ஆலைக்கு வந்து அரிசியை கொண்டு செல்வது வழக்கம். அந்தக் காலத்தில் படுவான்கரையும் எழுவான் கரையும் இணைக்கும் எந்தவொரு பாலமும் இருந்ததில்லை. இதனால்தான் வாவியூடாக பிரயாணத்தை மேற் கொண்டிருக்கிறார்கள். பிற்பட்ட காலத்தில்தான் மட்டக்களப்பு வாவியை ஊடறுத்து பல பாலங்கள் அமைக்கப்பட்டது. பட்டிருப்புப் பாலம், கிட்டங்கிப் பாலம், வலயிறவுப்பாலம் அன்மைக் காலத்தில் மண்முனைப் பாலமும் அமைக்கப்பட்டு மக்கள் தங்குதடையின்றி பிரயாணத்தை மேற்கொள்கின்றனர். வாவியினூடாக இயந்திரப்படகு செல்வதற்கு பாதையை அடையாளப்படுத்துவதற்காக வாவியின் மையப்பகுதியூடாக வயிரக் கட்டைகளை நாட்டியிருந்தார்கள். காலவெள்ளோட்டத்தின் காரணமாக பல கட்டைகள் சிதைந்து மறைந்துவிட்டது. இப்போது மூன்று கட்டைகள் மாத்திரம் இருக்கிறது. கிட்டங்கி பாதையால் செல்லும்போது வடபக்கம் பார்த்தால் மூன்று கறுத்தக் கட்டைகள் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. ஆற்றுக்குள் இருக்கும் இவையே இதற்கு சான்றாகும்.

1978ம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ம் நாள் இரவு இந்த பிரதேசத்தையே உலுக்கிவிட்ட பயங்கரச் சூறாவளி காரணமாக பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. வீடுவாசல்கள் எல்லாம் முற்றாக அழிந்தன. பல கட்டடங்கள் முற்றாக தரைமட்டமாக்கப்பட்டன. மரம்தடிகளெல்லாம் வேரோடு சாய்ந்தன. ஆனால் இந்த அரிசி ஆலைக்குமட்டும் எந்தவிதமான சேதமும் ஏற்படவில்லை. நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் தொழில் செய்து நன்மையடைந்த தொழிற்சாலையிது. இந்தப்பிரதேசத்திற்கே ஒரு வரப்பிரசாதமான தொழிற்சாலையாக இது விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்காசியாவிலேயே நான்காவது தொழிற்சாலையென பலராலும் பேசப்பட்டதை நான் கேள்வியுற்றிருக்கிறேன். இந்த தொழிற்சாலையில் பணிபுரிந்த மேலதிகாரிகள் ஏனைய தொழிலாளர்கள் அனைவரும் தங்குவதற்கான தங்குமிட விடுதிகள் மற்றும் ஏனைய வளங்களையும் கொண்ட ஒரு தொழிற்சாலையாக விளங்கியிருக்கிறது. இந்த தொழிற்சாலை இயங்கிய காலப்பகுதியில் தமிழ் சிங்கள உறவு மேம்பட்டதன் காரணமாக சில கலப்பு திருமணங்கள் கூட நடந்ததாக அறியமுடிகிறது.

இப்படிப்பட்ட பிரமாண்டமான மாபெரும் தொழிற்சாலையை கடந்த 1990ம் ஆண்டு வடகிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட பயங்கரமான அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி இனம் தெரியாத பலராலும் கபழீகரம் செய்யப்பட்டு இங்குள்ள இயந்திரங்கள், தளபாடங்கள் ஏனைய வளங்கள், கட்டிடங்கள் அனைத்தும் சூறையாடப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் இப்போது பிரதேசசெயலகம் சுகாதாரபணிமனை இன்னும் சில அரச கட்டிடங்கள் அமைந்திருக்கின்றன. இந்த தொழிற்சாலையின் இழப்பானது இந்தப் பகுதியில் வாழும் மூவின மக்களுக்கும் பேர் இழப்பாகத்தான் கருதமுடியும்.

கிராமாட்சிமன்ற உபசபையாகவிருந்து 1978ம் ஆண்டு காலப்பகுதியில் பிரதேசசபையாக மாற்றம் அடைந்து உப பிரதேசசபையாக இயங்கிவந்த சபையானது தரம் உயர்த்துவதற்காக 11ம் கிராமம் 68ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சோமசுந்தரம் புஸ்பராசா அவர்களின் முயற்சியாலும் அவரோடு இணைந்து செயல்பட்டவர்களின் கடின உழைப்பாலும் பல தடைகளையும் தாண்டி அவர்களின் முயற்சியின் பயனாக 2006ம் ஆண்டு நாலாம் மாதம் 15ம் திகதி முழுமையான நாவிதன்வெளி பிரதேசசபையாக மாற்றம் பெற்றது.

2006ம் ஆண்டு 6ம் மாதம் 19ம் திகதி இந்த பிரதேசசபையின் முதலாவது தேர்தல் நடைபெறுகின்றது. 11ம் கிராமம் 68ம் இலக்க வீட்டைச் சேர்ந்தவரும் தற்போது சொறிக்கல்முனைக் கிராமத்தில் திருமண பந்தத்தில் இணைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் சோமசுந்தரம் புஸ்பராசா அவர்கள் இந்தத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக்கட்சி சார்பாக வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டி இந்த நாவிதன்வெளிப் பிரதேசசபையின் வரலாற்றிலேயே முதன் முதலாக தவிசாளராக பதவியேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தவிசாளராக பதவியேற்று இரண்டு வருடங்கள் சேவையாற்றிக் கொண்டிருந்த நேரத்தில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வேண்டிய தேவை ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதைய சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்பாக 2008-05-18ம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். துறைநீலாவணை சந்ததி சார்பாக கிழக்குமாகாணசபைக்கு சென்ற முதலாவது நபர் புஸ்பராசா என்பது வரலாற்று பதிவாகின்றது.

19-06-2006ம் ஆண்டு முதலாவது நடைபெற்ற நாவிதன்வெளி பிரதேசசபைத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக்கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்று சபைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரம்.

01. ) 11/155ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சிவலிங்கம் குணரெட்ணம்

02. ) 11/16ம் இலக்க வீட்டைச் சேர்ந்த ஏரம்பு அமிர்தலிங்கம் இவர் வெற்றி பெறவில்லை

03. ) 11/68ம் இலக்க வீட்டைச் சேர்ந்தவரும் தற்போது சொறிக்கல்முனைக் கிராமத்தை வதிவிடமாகக் கொண்டவருமான சோமசுந்தரம் புஸ்பராசா

04. ) 15/40ம் இலக்க வீட்டைச் சேர்ந்த தவராசா கலையரசன் நாவிதன்வெளியைச் சேர்ந்த பழனித்தம்பி குணசிங்கம் ஆகியோர் இவர்கள் அனைவரும் துறைநீலாவணைக் கிராமத்தை தாயகமாகக் கொண்டவர்கள்.

05. ) 15/15ம் இலக்க வீட்டைச் சேர்ந்த லிங்கராசா இவர் பெரியநீலாவணைக்கிராமத்தை தாயகமாகக் கொண்டவர். இவர்கள் அனைவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள். பெரும்பான்மையோடு சபையின் நிருவாகத்தை பொறுப்பேற்று ஆட்சி அமைத்திருக்கிறார்கள்.

18-05-2008ம் ஆண்டு புஸ்பராசா அவர்கள் மாகாணசபைக்கு சென்றதன் காரணமாக அந்த வெற்றிடத்துக்கு கட்சியின் தீர்மானத்துக்கமைய 11/16ம் இலக்க வீட்டைச் சேர்ந்த அமிர்தலிங்கம் அவர்கள் சபையின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். தவராசா கலையரசன் அவர்கள் தவிசாளராகவும் சிவலிங்கம் குணரெட்ணம் அவர்கள் உதவித் தவிசாளராகவும் நிருவாகத்தை பொறுப்பேற்று சபையின் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். மீண்டும் 2011ம் ஆண்டு நடைபெற்ற பிரதேசசபைத் தேர்தலில் திரு. கலையரசன் அவர்கள் வெற்றிபெற்று தவிசாளராக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். திரு. குணரெட்ணம் அவர்களும் வெற்றி பெற்று உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். திரு. ஆனந்தன் அவர்கள் உதவி தவிசாளராக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். 2012ம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் திரு. கலையரசன் அவர்கள் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைநீலாவணை சமூகம் சார்பாக கிழக்கு மாகாண சபைக்குச் சென்ற இரண்டாவது நபராக வரலாற்றில் தடம் பதித்துள்ளார்.

கலையரசன் அவர்கள் மாகாண சபைக்கு சென்றதன் காரணமாக சபையில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு கட்சியின் முடிவுக்கமைவாக நாவிதன்வெளிப் பிரதேசசபையின் தவிசாளராக திரு. குணரெட்ணம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டு மீண்டும் 2018ம் ஆண்டு நடைபெற்ற பிரதேசசபையின் தேர்தலில் மாகாணசபையின் ஆயுட்காலம் முடிவடைந்ததன் காரணமாக நாவிதன்வெளிப் பிரதேசசபையின் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி சார்பாக திரு. தவராசா கலையரசன் அவர்கள் மீண்டும் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். திரு. குணரெட்ணம் அவர்களும் போட்டியிட்டு வெற்றி பெற்று உறுபபினராகத் தெரிவு செய்யப்பட்டள்ளார். 2006ம் ஆண்டு முதல் 2018ம் ஆண்டு வரையில் நாவிதன்வெளிப் பிரதேசசபையின் தேர்தல்களில் போட்டியிட்டு தொடர்ச்சியாக வெற்றி பெற்று தவிசாளராகவும் உதவித் தவிசாளராகவும் உறுப்பினராகவும் இப்போதும் கடமையாற்றிக் கொண்டிருககிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. திரு. குணரெட்ணம் அவர்கள், திரு. கலையரன் அவர்கள் தவிசாளராக கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் இலங்கை நாட்டின் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் 2020-08-05ம் திகதி நடைபெறவுள்ள காரணத்தினால் தவிசாளர் பதவியைத் துறந்து அம்பாறை மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக வேட்பாளராக தேர்தல் களத்தில் குதித்தார். இருந்தும் வெற்றிபெறவில்லை. அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் ஒற்றுமையின்மையினாலும் குறிப்பாக திட்டமிடல் தூரநோக்கு சிந்தனையுமில்லாமல் செயல்பட்டதன் காரணமாக எந்தவொரு கட்சி சார்பாகவும் அம்பாறை மாவட்டத்தில் ஒரு தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாமல் இழக்கப்பட்டது வரலாற்று தவறாக பதிவாகின்றது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முக்கிய ஆதரவாளர்களான நானும் இன்னும் பல முக்கியஸ்தர்களும் கட்சியிடம் முன்வைத்த கோரிக்கைகளுக்கு அமைவாகவும் அம்பாறை மாவட்டத்தின் தமிழ் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற பெரு நோக்கோடு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைப்பீடம் காலத்தின் தேவை கருதி நல்லதொரு தீர்மானத்தை எடுத்து தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைக்கப் பெற்ற ஒரே ஒரு தேசியப்பட்டியல் நியமனத்தை திரு. தவராசா கலையரசன் அவர்களுக்கு வழங்கி நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் அம்பாறை மாவட்டத்தில் இருந்து ஒரு தமிழ் பிரதிநிதி நாடாளுமன்றத்துக்கு சென்றுள்ளமை பொது நோக்குள்ள அனைவருக்கும் ஒரு நல்ல செய்தியாக அமையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2020-08-20ம் திகதி இலங்கை நாடாளுமன்றத்துக்கு சென்று முதலாவது கன்னி அமர்வில் கலந்து அம்பாரை மாவட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக திரு.தவராசா கலையரசன் அவர்கள் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றுள்ளார். இந்த பதவியேற்பானது துறைநீலாவணைச் சமூகத்துக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த சீர்பாத குலத்தில் இருந்து இலங்கை நாடாளுமன்றத்துக்கு சென்ற முதலாவது நபராக திரு.தவராசா கலையரசன் அவர்கள் வரலாற்றில் தடம் பதித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 அரச தொழில்

11ம் கிராமம் றாணமடு மண்டூர் அ/த/க பாடசாலையில் ஆரம்பக் கல்வியை தொடர்ந்து S.S.C க/பொ/த/சா/தரம் உயர்தரம் கற்பதற்காக துறைநீலாவணை மண்டூர் 10ம் கிராமம் ஆகிய பாடசாலைகளுக்குச் சென்று பல்வேறுபட்ட தடைகள் கஸ்டங்களுக்கு மத்தியில் கல்வியைக் கற்று 11ம் கிராமத்தில் முதலாவது அரச தொழில் நியமனம் பெற்றவர்களின் விபரம்.

1. முதலாவது 1977ம் ஆண்டு 11ம் கிராமம் 45ம் இலக்க வீட்டைச் சேர்ந்த ஆறுமுகம் வினாயகப்பிள்ளை அவர்கள் ஆசிரியராக நியமனம் பெற்றுள்ளார்.

2. 11/106ம் இலக்க வீட்டைச் சேர்ந்த காத்தமுத்து நல்லையா அவர்கள் CO நியமனம் பெற்றுள்ளார்.

3. 11/35ம் இலக்க வீட்டைச் சேர்ந்த கந்தையா குணரெட்ணம் அவர்கள் ஆசிரியராக நியமனம் பெற்றுள்ளார்.

4. 11/142ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சாமித்தம்பி நடராசா அவர்கள் இலங்கை போக்குவரத்து சபையில் நியமனம் பெற்றுள்ளார்.

5. 11/109ம் இலக்க வீட்டைச் சேர்ந்த குமாரலிங்கம் அவர்கள் நீதிமன்ற முதலியாராக நியமனம் பெற்றுள்ளார்.

6. 11/49ம் இலக்க வீட்டைச் சேர்ந்த இளயதம்பி குருநாதன் அவர்கள் தபால் அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

7. 11/51ம் இலக்க வீட்டைச் சேர்ந்த தம்பிராசா கணேசமூர்த்தி அவர்கள் தொலைத் தொடர்பு திணைக்களத்தில் தரம் இரண்டு தொழில் நுட்பவியலாளராக நியமனம் பெற்றுள்ளார்.

இந்தக் குடியேற்றக் கிராமமான 11ம் கிராமத்திலிருந்து முதலாவது பல்கலைக்கழகம் சென்றவர் 11/45ம்இலக்க வீட்டைச் சேர்ந்த ஆறுமுகம் ஜனேந்திரன் என்பவர்.

றாணமடு இந்து மகாவித்தியாலயத்தில் கல்வி பொதுதராதர உயர்தரத்தில் சித்தியடைந்து இந்த பாடசாலையின் வரலாற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது பல்கலைக்கழகம் சென்றவர் 13/102 இலக்க வீட்டைச் சேர்ந்த கதிராமர் தம்பிராசா என்பவர்.

இந்த 11ம் கிராமத்தில் முதலாவது பெண் ஆசிரியைகளாக நியமனம் பெற்றவர்கள் 11/61ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சேனாதிபதி கலா என்பவர் 11/39ம் இலக்க வீட்டைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை இரத்தினமணி என்பவர் 11/51ம் இலக்க வீட்டைச் சேர்ந்த தெய்வநாயகம் தங்கமணி என்பவர் (சிலர் யோசிக்காலாம் இவர்கள் மட்டும்தானா அரச நியமனம் பெற்றவர்கள் என்று எந்த நிகழ்வு ஆனாலும் பல தடவைகள் நிகழலாம். ஆனால் ஒரு காரியம் முதல் முதல் எப்போது நடைபெறுகின்றதோ அதுதான் வரலாற்று பதிவாகக் கொள்ளலாம். அந்த வகையில்தான் நான் ஆரம்ப காலங்களையும் ஆரம்ப நிகழ்வுகளையும் இங்கு குறிப்பிட்டுள்ளேன். ) இற்றைக்கு சுமார் 45-50 ஆண்டுகளுக்கு முன் இந்த கிராமத்தைப் பற்றி சிந்தித்தவர்களுள் நானும் ஒருவன். நாங்கள் பல பொது பணிகளில் ஈடுபட்ட போது எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லை. படித்த இளைஞர்களும், யுவதிகளும் குறைவாகவே காணப்பட்டனர். இதன் காரணமாக எங்களால் பல காரியங்களில் முன்னேற்றம் காணமுடியவில்லை. அந்த நேரத்தில் நாங்கள் யோசித்ததுண்டு. இன்னும் 25-30 ஆண்டகளுக்கு பிறகுதான் நமது கிராமத்தில் இளைஞர் யுவதிகள் படித்து வளர்ந்த பிறகுதான் கிராமம் முன்னேற்றம் அடையும் என்று அந்தக் கனவு இப்போது நிகழ்வாக நிகழ்நது கொண்டிருக்கிறது. பலர் ஆசிரியர் ஆசிரிகைகளாகவும், கிராம சேவகர்களாகவும், பட்டதாரிகளாகவும், பொறியியலாளர்களாகவும், விரிவுரையாளர்களாகவும், பல் துறைசார்ந்த அரச ஊழியர்களாகவும் இந்தக் கிராமத்திலுள்ள இளைஞர் யுவதிகள் முன்னேறிக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 நாணயங்கள்

நமது தாய் தந்தையர் காலத்தில் இருந்த நாணயங்களைப் பற்றி கேள்வியுற்றிருக்கின்றேன். நான் கண்டதில்லை.

துட்டு -
சல்லி -

நான் அறிந்த காலத்திலிருந்த நாணயக் குற்றிகள்

1. ஒரு சதம்
2. இரண்டு சதம்
3. ஐந்து சதம்
4. பத்து சதம்
5. இருபத்தைந்து சதம்
6. ஐம்பது சதம்

இருபத்தைந்து சதத்தை நாலு பணம் என்று சொல்வார்கள்
ஐம்பது சதத்தை ஒரு சிலின் என்று சொல்வார்கள்
ஒரு ரூபா ஐம்பது சதத்தை மூன்று சிலின் என்று சொல்வார்கள்

நாணயத்தாள்கள்:
ஒரு ரூபாத் தாள்
இரண்டு ரூபாத் தாள்
ஐந்து ரூபாத் தாள்
பத்து ரூபாத் தாள்
ஐம்பது ரூபாத் தாள்
நூறு ரூபாத் தாள்
பத்து ரூபாவை ஒரு பவுண் என்று சொல்வார்கள்
நூறு ரூபாவை பத்து பவுண் என்று சொல்வார்கள் இதற்கு மேல் அந்தக்காலத்தில் நாணயத்தாள்கள் இருந்ததில்லை. இப்போது புழக்கத்திலுள்ள நாணயத்தாள்களெல்லாம் அண்மைக்காலத்தில் தோற்றம் பெற்றவைகள்.

அந்தக் காலத்தில் பால்டின் தகரப் பேணியை அரிசி அளக்க பயன்படுத்துவார்கள் இதை சுண்டுக்கொத்து என்று சொல்லுவார்கள். ஒரு சுண்டு அரிசியை காக்கொத்து என்று சொல்வார்கள். மூன்று சுண்டு அரிசியை முக்காக்கொத்து என்று சொல்வார்கள். நாலு சுண்டு அரிசியை ஒரு கொத்து என்று சொல்வார்கள் இவ்வாறு ஆறு கொத்து அரிசி நெல்லை ஒரு மரைக்கால் என்று சொல்வார்கள். மரைக்கால் என்று சொல்வது பிரம்பால் பின்னப்பட்டு மாட்டுச் சாணியால் பூசி மெழுகப்பட்டிருக்கும். இவ்வாறு முப்பது மரைக்கால் நெல்லை ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவணம் என்று சொல்வார்கள். இதுதான் அந்தக்காலத்து கணக்கு நடைமுறைகள். கிலோ மூடை என்ற கணக்கு பிற்பட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1953ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 11ம் கிராம றணமடு மண்டூர்
அ/த/க பாடசாலை கட்டிடம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 11ம் கிராமம் தற்போதய றாணமடு இந்துக் கல்லூரியின் வரலாறு

11ம்கிராமம் றாணமடு மண்டூர் அ/த/க பாடசாலையின் ஆரம்பம் 1953ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 100x25 அகலங்களைக் கொண்ட இரு கட்டிடங்களும் நிருவாக அலகுகளைக் கொண்ட கட்டிடங்களும் அதிபர் விடுதியும் ஐந்து ஆசிரியர் விடுதிகளையும் பெரு நிலப்பரப்புகளையும் கொண்ட ஒரு பாடசாலையாக ஆரம்பித்து இருந்தது. இப்போது நமது கிராமத்தில் முதியவர்களாக இருக்கும் ஆண்கள், பெண்கள் எல்லாம் இந்தப் பாடசாலையில் கல்வி கற்றிருக்கிறார்கள். பாடசாலையை சுற்றி அடர்ந்த காடு காணப்பட்டது. பெரு விருட்சங்களாக புளிய மரம், கயட்ட மரம், தேத்தா மரம், இத்தி மரம் எல்லாம் நின்றது. ஆனால் இப்போது அவைகளெல்லாம் அழிக்கபட்டுவிட்டன. பாடசாலையின் வடமேற்கு திசையின் பக்கம் புளிய மரம் ஒன்று இப்போதும் நிற்பது இதற்கு சான்றாகும். இது கல்லோயா திட்டத்துக்கு முந்திய ஒரு தல விருட்சமாக ஞாபகச் சின்னமாக இப்போதும் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. இதை அழியவிடாமல் பாதுகாப்பது அனைவரது கடமையாகும்.

இதைவிட பாடசாலை சூழலை சுற்றியுள்ள காட்டுப் பகுதியில் பல விருட்சம், கனிதரும் மரங்கள் நின்றது. சூரமரம், தவுட்ட மரம், கூளா மரம், கார மரம், கறுக்கா மரம், கிளக்கா மரம், நாயுண்ணிய மரம், புளிய மரம், தேத்தா மரம் போன்ற பழம் தரும் மரங்கள் காலத்துக்கு காலம் பூத்துக் குலுங்கி காய்த்து கனிந்து கிடக்கும். அந்த கண்கொள்ளாக் காட்சிகள் இன்றும் மனக் கண்முன் நிழலாடுகின்றது.

பாடசாலை இடைவேளையின் போதும் பாடசாலை முடிந்து வரும் போதும் மாணவர்களாகிய நாங்கள் ஒருவரை ஒருவர் முண்டியடித்துக் கொண்டு ஓடி வந்து பழங்களை பறித்து சாப்பிடுவதும் அதன் சுவையும் இன்றும் நாவிலும் மனதிலும் நிழலாடுகின்றது. ஆனால் இந்த இயற்கையான கனிதரும் மரங்களெல்லாம் இன்றய மனிதனுடைய மேலதிக தேவையினாலும் இரசாயன பாவனயாலும் ஊர்வன பறப்பன இயற்கை தாவரங்கள் அனைத்தும் அனேகமாக அழிந்துவிட்டதென்றே கூறலாம். இயற்கையை நீயழித்தால் இயற்கை உன்னையழிக்கும் இதன் எதிர்மறை விளைவுகளை இன்றய மனித குலம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுகளுக்குள் நாங்கள் சென்று பழங்களை பறித்து சாப்பிடும் போது எங்கள் ஆரவாரத்தை கண்டு காட்டு பன்றி, உடும்பு முயல் முள்ளம்பன்றி போன்ற மிருகங்கள் கலைந்து ஓடுவதும் நாங்கள் அதைக் கண்டு அலறியடித்துக் கொண்டு ஓடிய சம்பவங்களும் நடந்தது உண்டு.

அந்தக் காலத்தில் பாலர் வகுப்பு பாலர் பாடசாலை இருந்ததில்லை. முதலாம் வருடம் பாடசாலைக்கு சென்றவுடன் அரிவரி என்ற வகுப்பில்தான் வைப்பார்கள். சிறு உறுண்டைகள் சிறு குச்சிகளை வெட்டி கட்டிக் கொண்டு போனால் எண்ணிப்பழக்குவார்கள். விரலை பிடித்து மண்ணில் எழுதிப்பழக்குவார்கள்.

இவ்வாறு ஒருவருடம் அரிவரியில் படித்த பிறகுதான் முதலாம் வகுப்புக்கு வகுப்பு ஏற்றுவார்கள். இப்போது இருப்பது போல் கொப்பி பென் இருந்ததில்லை. இரண்டாம் வகுப்பு வரையும் சிலேற் பென்சிலால் சிலேற்றில் எழுதிப்படிக்க வேண்டும். மூன்றாம் வகுப்பிலிருந்துதான் கொப்பியில் பேனாவால் எழுத முடியும். அந்தக்காலத்தில் வேறு பாடசாலைகளில் எப்படியோ தெரியாது பின்தங்கிய கிராமமும் பின்தங்கிய பாடசாலை என்ற காரணமோ என்னவோ சிறுவர் சிறுமிகள் எல்லாம் அவர் அவர் வசதிக்கேற்ற உடைகளை அணிந்து வருவார்கள். வெள்ளைச் சீருடை குறைவாகவே காணப்பட்டது. பெரிய வகுப்பு மாணவர்கள்தான் வெள்ளைச் சீருடை அணிந்து வருவார்கள். பிற்காலத்தில் சகல மாணவர்களும் வெள்ளை சீருடை அணிய வேண்டிய சூழல் மாற்றம் பெற்றது. இப்போது அரசினால் சீருடை பாடப் புத்தகம் சப்பாத்து வழங்குவதுபோல் அந்தக் காலத்தில் இல்லை. பெற்றோர்கள்தான் சகலதும் பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டும். தை மாதம் வகுப்பேற்றப்பட்டால் கல்முனைக்கு சென்று மணமகள் புத்தகசாலையில் கொப்பிகள் பாடப்புத்தகங்கள் தேவையான உபகரணங்கள் அனைத்தையும் வாங்கிச் செல்வது வழக்கம். இதில் மறக்கமுடியாத ஒரு நினைவு புதுப்புத்தகத்தை பிரித்து படிக்கும் போது இதமான ஒரு மணம் வரும். இந்த வாசனையை பல நாட்களுக்கு முகந்து முகந்து சுவாசிப்பது மகிழ்ச்சியாக இருக்கும். இப்போது இருப்பது போல் நேர்த்தியான புத்தகப் பை இல்லை. கற்பன் பன்னால் பின்னப்பட்ட வேக்கு குட்டிப்பை துணியால் தைக்கப்பட்ட வேக்கு இவைகளைத்தான் புத்தகப் பையாக மாணவர்கள் பாவிப்பதுண்டு. அந்தக்காலத்தில் இருந்த கல்வித்திட்டம் SSC HSC பயினல் O/LA/L பிற்காலத்தில் தோற்றம் பெற்ற கல்வித்திட்டம். இந்த றாணமடு மண்டூர் அ/த/க பாடசாலையில் SSC வரையும் அந்தக்காலத்தில் வகுப்பு இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1953ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட றணமடு மண்டூர் அ/த/க பாடசாலை
தலைமை ஆசிரியர் விடுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பைச் சேர்ந்த பூபாலப்பிள்ளை என்பவர் தலைமை ஆசிரியர் விடுதியில் குடும்பத்தோடு தங்கியிருந்து அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். இவரது மனைவியும் இதே பாடசாலையில் உதவி ஆசிரியையாகக் கடமைபுரிந்தார். வெளி ஊர்களிலிருந்தும் பல ஆசிரியர்களும் இந்தப் பாடசாலையில் கல்வி கற்பித்துக் கொண்டிருந்தார்கள்.

பிற்காலத்தில் இந்தப் பாடசாலையின் அதிபராகவும் இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்கு காரணகர்த்தாவாகவும் இருந்து காலம்சென்ற சம்புநாதன் தினகரம்பிள்ளை அவர்கள். 1965, 1967, 1968ம் ஆண்டு காலப்பகுதியில் உதவி ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். இந்தக் காலகட்டத்தில் ஆசிரியர் குழாமுக்குள் சில உள்ளக முரண்பாடுகள் நிலவியதை மாணவர்களாகிய எங்களால் உணர முடிந்தது. அந்தக் காலத்தில் மட்டக்களப்பு கல்வி நிருவாகத்தின் கீழ்தான் இந்தப் பிரதேச பாடசாலைகள் இருந்தன. 1968ம் ஆண்டு நாவிதன்வெளி சொறிக்கல்முனை இரண்டு பாடசாலைகளும் தவிர்ந்த ஏனைய குடியேற்றத்திட்ட 4ம் கிராமம் 5ம் கிராமம் 12ம் கிராமம் 15ம் கிராமம் 11ம் கிராமம் ஆகிய பாடசாலைகள் 5ம் வகுப்பு தரம் இறுக்கப்பட்டுள்ளது. அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்த பூபாலப்பிள்ளை அதிபரும் குடும்பத்தோடு இடமாற்றம் பெற்று சென்றுள்ளார். வெளி ஊர்களில் இருந்து வந்து இந்த பாடசாலையில் கல்வி கற்பித்துக் கொண்டிருந்த சில ஆசிரியர்களும் இடம் மாற்றம் பெற்று சென்றுள்ளனர். தினகரம்பிள்ளை அவர்களும் 15ம் கிராம பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று சென்றுள்ளார்.

இந்த காலகட்டத்தில் றாணமடு மண்டூர் அ/த/க பாடசாலையில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அந்தக் காலத்தில் படித்த இளைஞர் யுவதிகள் நமது கிராமத்தில் மிகவும் குறைவு. மூத்தவர்களும் இந்தப் பாடசாலையின் அபிவிருத்தியில் போதிய அக்கறை செலுத்தியதாக தெரியவில்லை. நாவிதன்வெளியைச் சேர்ந்த சீனித்தம்பி என்பவர் அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். இந்த நிலை சில காலம் நீடித்தது. இதன் காரணமாக மண்டூர் துறைநீலாவணை மற்றும் சகோதர மொழியைக் கற்பதற்காக பக்கத்திலுள்ள பத்தாம் கிராமம் போன்ற பாடசாலைகளுக்கு சென்று சில மாணவர்கள் தங்கள் கல்வியை தொடர்ந்தனர். இது விவசாயக் கிராமம் என்ற காரணத்தினால் அனேகமான மாணவர்கள் தங்கள் தந்தை சகோதரர்களுடன் இணைந்து முழுமையாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். பெண் பிள்ளைகளெல்லாம் அந்தக் காலத்து கிராம வழக்கப்படி திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


1968ம் ஆண்டு இடமாற்றம் பெற்று சென்றுள்ள தினகரம்பிள்ளை அவர்கள் 1973ம் ஆண்டு காலப்பகுதியில் இந்த அ/த/க பாடசாலைக்கு மீண்டும் அதிபராக கடமையேற்று வந்துள்ளார். மட்டக்களப்பு கல்வி நிருவாகத்தின் கீழ் றாணமடு மண்டூர் அ/த/க பாடசாலை என்று இயங்கி வந்த இந்த பாடசாலை 1967- 1968ம் ஆண்டு காலப்பகுதியில் கல்வி நிருவாக மாவட்டம் பிரிக்கப்பட்டதன் காரணமாக கல்முனை கல்வி நிருவாகத்தின் கீழ் இந்த பாடசாலைகள் கொண்டுவரப்பட்டன.

தினகரம்பிள்ளை அவர்கள் இந்தப் பாடசாலையின் எதிர்காலம் பற்றிய சிந்தனையோடு அவருடைய கல்வி நிருவாகத்தை மேற்கொண்டதன் காரணமாக பல பெற்றோர்களை அழைத்து ஆலோசனைக் கூட்டங்களை நடாத்தியதோடு அவர்களை இந்த பாடசாலையின் மீது அக்கறை கொண்டவர்களாக செயற்படுவதற்கு வழிகாட்டியாக செயல்பட்டார். ஓய்வுபெற்ற தபால் அதிபர் குருநாதன் ஓய்வு பெற்ற சண்முகம் அதிபர், அதிபராகவும் கல்வி அதிகாரியாகவும் கடமையாற்றி ஓய்வு பெற்ற வினாயகம்பிள்ளை, கணேசமூர்த்தியாகிய நான் இளைஞர்களாக விளையாட்டு, நாடகம், கோயில் நிருவாகம் போன்ற பல பொது பணிகளில் ஈடுபட்ட காலம். மற்றும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை அதிபர் குணரெட்ணம் ஆகியோர் எங்களையும் தினகரம்பிள்ளை அவர்கள் சந்தித்து "தம்பி நீங்களெல்லாம் இளைஞர்கள் இந்த பாடசாலையின் அபிவிருத்தியில் கவனம் செலுத்த வேண்டும்" என்று பல அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் கூறுவார். போக்குவரத்து வாகன வசதிகள் தொலைத் தொடர்புகள் போன்ற அடிப்படை வசதிகள் எதுவுமே இல்லாத காலம் அது.

இருந்தும் நாங்கள் பல கஷ்டத்துக்கு மத்தியில் கல்வி அலுவலகங்களுக்கு சென்று சில அதிகாரிகளைச் சந்தித்து இந்த பாடசாலையில் ஆறாம் வகுப்பு வைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொண்ட போதும் இந்த பாடசாலையில் ஆறாம் வகுப்பு வைப்பதை சில அதிகாரிகள் விரும்பவில்லையோ என்னவோ தெரியாது. அவர்கள் இந்த விடயத்தில் அவ்வளவு கவனம் செலுத்தவில்லை. இந்த காலகட்டத்தில் அதிபர் தினகரம்பிள்ளை அவர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தை அமைத்து அவர் அதன் தலைவராகவும் விநாயகம்பிள்ளை அவர்கள் செயலாளராகவும் கொண்ட பாடசாலை அபிவிருத்தி சங்கம் செயல்பட ஆரம்பித்தது. 11ம் கிராமம் 87ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சுந்தரலிங்கம் என்பவர் சமூக சேவையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அவரும் இந்த பாடசாலை அபிவிருத்தி சங்கத்தில் இணைந்து முன்மாதிரியாக செயல்பட்டார். பிற்பட்ட காலத்தில் கிராம அபிவிருத்தி சங்க தலைவராகவும் பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



11ம் கிராம றாணமடு இந்துக்கல்லூரியின் புதிய பாடசாலை கட்டிடங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையில் மிகுந்த அக்கறையோடு செயல்பட்டதை காணமுடிந்தது. இதனால் இவரை RDS சுந்தரம் என்றுதான் பலரும் அழைப்பார்கள். 1987ம் ஆண்டு காலப்பகுதியில் பொலிசாரின் துப்பாக்கிசூட்டில் அகால மரணம் அடைந்தார்.

1977ம் ஆண்டு 6ம் மாதம் 03ம் திகதி வினாயகம்பிள்ளை அவர்கள் ஆசிரிய நியமனம் பெற்று இதே பாடசாலையில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இந்த 11ம் கிராமத்தில் முதலாவது அரச நியமனம் பெற்றவர் வினாயகம்பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது. இரு பிள்ளைகள் தினகரன் பிள்ளை அதிபராகவும் தலைவராகவும் வினாயகம்பிள்ளை உதவி ஆசிரியராகவும் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளராகவும் இளைஞர்களாகிய எங்களையும் இணைத்துக் கொண்டு பாடசாலையின் அபிவிருத்தியில் அக்கறையோடு செயல்பட்டனர். 1977ம் ஆண்டு நானும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரையும் அதிபர் குணரெட்ணம் அவர்களும் சொந்த வாழ்க்கையின் நிமித்தம் கிராமத்தைவிட்டு வெளியேறிவிட்டோம். ஆனால் அதிபர் ஆசிரியர்களோடு பாடசாலை அபிவிருத்தி சங்கம் என்ற வகையில் சண்முகம் குருநாதன் போன்ற இளைஞர்கள் இவர்களோடு இணைந்து இந்த பாடசாலையில் ஆறாம் வகுப்பை வைப்பதற்கு உரிய அதிகாரிகளைச் சந்தித்து பல முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டனர். இவர்களுடைய தொடர் முயற்சியின் பயனாக 1978ம் ஆண்டு தைமாதம் 14ம் திகதி வினாயகம்பிள்ளை ஆசிரியரும் சண்முகக் குருநாதன் மூன்று பேரும் நிந்தவூருக்குச் சென்று ஜாக்கூப் என்னும் கல்வி அதிகாரியை சந்தித்து பேசிய போது அவர் ஒரு நன்நோக்கம் கொண்ட கல்வி அதிகாரியாக ஆறாம் ஆண்டு வைப்பதற்கான சிபாரிசு வழங்கியதோடு "தம்பி இன்று உங்கள் தைப்பொங்கல் என்று தெரியாமல் உங்களை வரச்சொல்லிவிட்டேன்" என்று ஆதங்கப்பட்டதோடு அவருடைய சொந்தக் காரில் இவர்கள் மூன்று பேரையும் ஏற்றிக் கொண்டு கல்முனையில் விட்டுச் சென்றுள்ளதாக இந்த மூன்று நண்பர்கள் மூலமும் அறியமுடிந்தது.

இந்தப் பாடசாலையின் அபிவிருத்திக்கு ஆறாம் ஆண்டு தரம் உயர்த்தலானது முதலாவது படிக்கல்லாக அமைந்துள்ளது. இந்த காலகட்டத்தில் துரதிஷ்டவசமாக ஒரு இயற்கை அனர்த்தம் நிகழ்கின்றது 1978ம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ம் நாள் வியாழக்கிழமை இரவு வேளையில் யாரும் எதிர் பாராத பயங்கரச் சூறாவளி வீசியது. இதன் தாக்கம் பற்றி நான் முன்னால் விபரித்துள்ளேன். இந்த சூறாவளியின் தாக்கத்தினால் இந்த பாடசாலை மிகவும் பாதிக்கபட்டுள்ளது. மாணவர்கள் எல்லாம் மரநிழல்களுக்கு கீழ் இருந்து கல்வி கற்க வேண்டிய அவல நிலை காணப்பட்டது. இருந்தபோதிலும் விநாயகம் பிள்ளை தினகரம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் கடின முயற்சியின் பயனாக இந்த தாக்கத்தில் இருந்து பாடசாலை மீண்டெழுந்தது. கட்டம் கட்டமாக வகுப்புகள் உயர்த்தப்பட்டு 1982ம் ஆண்டு கல்வி பொது தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு இந்தப் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் முதலாவதாக தோற்றியுள்ளனர். மட்டக்களப்பு கல்லடி இன்னும் பல வெளியூர்களில் இருந்தும் பல ஆசிரிய ஆசிரியைகள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்பித்துக் கொண்டிருந்தனர். 1500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்றுக் கொண்டிருந்தனர். மண்டூர் துறைநீலாவணை போன்ற வெளிக் கிராமங்களிலிருந்தும் இதே கிராமத்தைச் சேர்ந்தவர்களுமாக 25க்கும் மேற்பட்ட தொண்டர்கள் தொண்டர் ஆசிரியர்களாக சேவை செய்து கொண்டிருந்தனர். தினகரன்பிள்ளை அவர்கள் இந்தப் பாடசாலையின் அதிபராகவும் சம்மாந்துறை வடக்கு நாவிதன்வெளி பிரதேச கொத்தனி அதிபராகவும் கடமையாற்றிக் கொண்டிருந்தார். இந்தப் பாடசாலையின் வரலாற்றில் ஒரு பொற்காலம் என்று கூட சொல்லலாம். இவ்வாறு இந்தப்பாடசாலை அபிவிருத்தி அடைந்து கொண்டிருந்த வேளையில் 1990ம் ஆண்டு இந்த நாட்டில் வடகிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட கொடூரமான வன்செயல் காரணமாக இந்தப் பாடசாலை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இருந்த போதிலும் இந்தப் பாதிப்பிலிருந்து பாடசாலை விரைவாக மீண்டெழுந்து 1991ம் ஆண்டு காலப்பகுதியில் இந்தப் பாடசாலையில் தொண்டர்களாக கடமையாற்றிக் கொண்டிருந்த அனைவருக்கும் ஒருவரும் தவறாமல் 26 பேருக்கும் ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது.

பாடசாலை நிருவாகம் மற்றும் அதிபர் அவர்களின் முயற்சி என்று கூடச் சொல்லலாம். இந்த இடத்தில் ஒரு முக்கியமான தகவலை சுட்டிக்ககாட்டவேண்டிய தேவை எழுகின்றது. 1978ம் ஆண்டு இந்தப் பாடசாலையில் 6ம் ஆண்டு ஆரம்பித்தபோது இதே பாடசாலையில் 6ம் ஆண்டு கல்வியை தொடர்ந்த மாணவர்களில் அனேகமானவர்கள் இந்த தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் உள்வாங்கப்பட்டு இதே பாடசாலையில் நியமிக்கப்பட்டது இந்த பாடசாலையினுடைய முதலாவது வரலாற்று பதிவாகின்றது. 4ம் கிராமம் 13ம் கிராமம் போன்ற கிராமங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து இந்த பாடசாலையில் கல்வி கற்ற காலம் அது. இந்தக் காலப்பகுதியில் விநாயகம்பிள்ளை அவர்கள் 15ம் கிராமம் கலைமகள் வித்தியாலயத்துக்கு அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். பாடசாலை அபிவிருத்தியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த வேளையில் 1997ம் ஆண்டு திரு. தினகரம்பிள்ளை அவர்கள் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார். பொதுமக்களும் பாடசாலை நிருவாகமும் பழைய மாணவர்களும் இணைந்து தினகரம் பிள்ளை அவர்களை பாராட்டி கௌரவித்து வழியனுப்பி வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




11ம் கிராம றாணமடு இந்துக்கல்லூரியின் தினகரப்பிள்ளை மண்டபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15ம் கிராமத்தை சேர்ந்த பாலசிங்கம் என்பவர் சிறிது காலம் அதிபராக சேவையாற்றியுள்ளார். மீண்டும் 1997ம் ஆண்டு காலப்பகுதியில் வினாயகம்பிள்ளை அவர்கள் இந்தப் பாடசாலைக்கு அதிபராக வந்து கடமையேற்றுள்ளார். இதற்கு பிறகு இந்தப் பாடசாலையில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது. குடியேற்ற காலத்தில் அரசினால் கட்டப்பட்ட பானாவடிவிலான கட்டடம் மாணவர்களுக்கு கற்றல் நடவடிக்கைகளுக்கு போதாமை காரணத்தினால் சில புதிய கட்டடங்களும் மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடங்களும் விஞ்ஞான ஆய்வு கூடம், நூலகம், கணனி வசதிகள், 100 மீ ஓட்டத்திற்கான விளையாட்டு மைதான விஸ்தரிப்பு, பௌதிக வளங்கள், கிணறு சுற்றுமதில் போன்ற வளங்களோடும் 11ம் கிராமம் 111ம் இலக்க வீட்டைச் சேர்ந்தவரும் தற்போது கனடாவில் வாழ்ந்து கொண்டிருப்பவருமான சாமித்தம்பி கருணாகரம் என்பவர் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு அரங்கம் ஒன்றை கட்டி பாடசாலைக்கு அன்பளிப்பு செய்துள்ளார். முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சோமசுந்தரம் புஸ்பராசாவினதும் அதிபர் விநாயகம்பிள்ளை அவர்களின் முயற்சியினாலும் அரசின் ஆயிரம் பாடசாலைத்திட்டத்தின் கீழ் இந்த நாணமடு இந்து மகாவித்தியாலயமும் சேர்க்கப்பட்டது. இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்கு சாதகமாக அமைந்துள்ளது. அரசசார்பற்ற கனடிய நிறுவனத்தின் உதவியினால் பாடசாலையும் கிராமத்தில் உள்ள வருமானம் குறைந்த குடும்பங்களும் நன்மையடைந்ததோடு சில இளைஞர் யுவதிகளும் தொழில் பயிற்சியை பெற்றள்ளனர்.

ஆரம்ப காலத்தில் கரப்பந்தாட்ட மைதானமாக இருந்த இடத்தில் புதிய பாடசாலைக் கட்டடம் ஒன்று அமைந்துள்ளது. பழைய அதிபர் விடுதிக்கு அருகாமையில் அமைந்துள்ள புதிய பாடசாலைக் கட்டடம் ஒன்றுக்கு இந்த பாடசாலையின் நீண்ட காலமாக அதிபராகவும் பாடசாலையின் வளர்ச்சிக்கு வித்திட்டவருமான காலஞ்சென்ற தினகரம்பிள்ளை அவர்களின் பெயர் சூட்டப்பட்டு தினகரம்பிள்ளை மண்டபம் என்ற பெயரோடு இன்று இந்தக் கட்டடம் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

2013ம் ஆண்டு வினாயகம்பிள்ளை அவர்கள் கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். உப அதிபராக இருந்த மார்க்கண்டு அவர்கள் அதிபராக பாடசாலை நிருவாகத்தை பொறுப்பேற்றுள்ளார். ஒருவருடம் அதிபராக கடமையாற்றிவிட்டு 2014ம் ஆண்டு மார்க்கண்டு அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைநீலாவணையை தாயகமாகக் கொண்டவரும் தற்போது சேனைக்குடியிருப்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் க. தியாகராராசா என்பவர் 2014ம் ஆண்டு இந்தப் பாடசாலையின் அதிபராக கடமை ஏற்றுள்ளார். 2019ம் ஈண்டு காலப்பகுதியில் இந்தப் பாடசாலை இந்துக் கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டள்ளது. 2020ம் ஆண்டு தியாகராசா அதிபர் அவர்கள் இடமாற்றம் பெற்று சென்றுள்ளார். இப்போது துறைநீலாவணையை தாயகமாகக் கொண்டவரும் 15ம் கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் க. கதிரைநாதன் என்பவர் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். கல்லூரிக்குரிய சகல பௌதீக வளங்களோடும் இந்தப் பாடசாலை இயங்கிக் கொண்டிருக்கிறது.

இருந்த போதிலும் இற்றைக்கு 70 ஆண்டுகளுக்கு முன் இந்தக் கிராமத்தோடு தோற்றம் பெற்ற பானாவடிவமும் பல நிருவாக அலகுளையும் கொண்ட இந்தப் பழைய பாடசாலை கட்டடிம் தற்போது இடிந்து விழும் நிலையில் காடு மண்டிக் காட்சியளித்துக் கொண்டிருப்பது மனவேதனைக்குரிய விடயமாகும்.

எத்தனையோ மாணவர்களை உருவாக்கி இந்தக் கிராமத்தையே வாழவைத்த இந்த பழைய பாடசாலையை ஞாபகச்சின்னமாக பாதுகாத்து பராமரிக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் பாடசாலைச் சமூகத்தையும் பொதுமக்களையுமே சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 புதிய பாடசாலைகளின் தோற்றம்

1990 ஆம் ஆண்டுகளுக்கு பிறகு சில புதிய பாடசாலைகள் தோற்றம் பெற்றுள்ளன.

11ம் கிராமம் மத்தியமுகாம் 4ஆம் பிரிவில் ஸ்ரீ முருகன் வித்தியாலயமும்

11ம் கிராமம் மத்தியமுகாம் 6ம் பிரிவில் கண்ணகி வித்தியாலயமும்

11ம் கிராமம் மத்தியமுகாம் 5ம் பிரிவு அகத்தியர் வித்தியாலயமும்

இலுப்பைகுளம் அன்னமலை 3ம் பிரிவில் சரஸ்வதி வித்தியாலயமும் தோற்றம் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 மின்சாரம்

11ம் கிராமம் குடியேற்றப்பட்ட காலத்திலிருந்து சில துறைகளில் முன்னேற்றம் கண்ட போதிலும் மின்சார வசதியில்லாதது பெரும் குறையாகவே காணப்பட்டது. இந்த குறையை போக்குவதற்காக அப்போதைய இந்து மகா வித்தியாலய அதிபரும் ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரியுமான திரு. வினாயகம்பிள்ளை அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு காலம் சென்ற சின்னத்துரை அவர்களும் ஒருசில அன்பர்களும் அனுசரணை வழுங்கியிருக்கிறார்கள். அவருடைய தொடர் நடவடிக்கையின் பயனாக 2000ம் ஆம் ஆண்டு சம்மாந்துறை தொகுதி சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர் திரு. உதுமா லெவ்வை அவர்களின் மூலம் 69 லெட்சம் ரூபா நிதியை பெற்று அந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் முகமாக அங்குராப்பண நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த நிகழ்வை நடைபெறாமல் தடை செய்யும் முயற்சியும் நடைபெற்றது. அதையும் தாண்டி அன்றைய காலகட்டத்தில் துணிச்சலாக நின்று அந்த நிகழ்வை நடாத்தி முடித்தது மின்சாரத்தை இந்தக்கிராமங்களுக்கு பெற்றுக்கொடுத்ததன் பயனை இன்று 11ம், 13ம் கிராம மக்கள் அனுபவித்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை யாவரும் உணரவேண்டும். அந்த நிகழ்வில் நானும் கலந்து கொண்டவன் என்றவகையில் இதைக் குறிப்பிடுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



11ம் கிராம பழைய பல்நோக்கு கூட்டுறவு சங்கக் கட்டம் இவ்வாறு காட்சியளிக்கின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 பல்நோக்கு கூட்டுறவு சங்கம்

கல்லோயாக் குடியேற்றத்திட்டம் உருவாக்கம் பெற்ற காலம் முதல் கிராமம் தோறும் பல்நோக்கு கூட்டுறவு சங்கக் கிளைகளை அமைத்து அந்த கிளைகள் மூலமாகத்தான் மக்களுக்கு அரசினால் சில பொருட்கள் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது. அந்த பொருட்கள் பற்றிய விபரங்கள் எல்லாம் இந்தநூலின் முன் பக்கத்தில் விபரமாக தந்துள்ளேன்.

இப்போது இருக்கின்ற சதோச, கோப்சிட்டி, புட்சிற்றிபோன்ற வியாபார நிலையங்கள் குறைவாகவெ காணப்பட்டது அந்தக்காலத்தில்

சலுசல மற்றும் கூட்டுறவு சங்கக்கிளைகள் மூலமாகத்தான் அனேகமான பொருட்களை பெற்றுக்கொள்ளமுடியும்.
ஒரு றாத்தல் சீனி 0.72 சதம்
ஒரு யார் சீத்தை துணி இரண்டு ரூபா பனிரெண்டு சதம்,
ஒரு வேக் காங்கேசன் சீமேந்து 12 ரூபா. (50Kg)

ஆறுரூபா 36 சதம் இருந்தால் ஆண்களுக்கான ஒரு சறமும் உள்ளாடையும் தைத்துக் கொள்ளலாம் அந்தக்காலத்தில்

ஒரு நபருக்கு ஒருவருடத்துக்கு தேவையான கூப்பன் வழங்கப்படும். ஒரு குடுப்பத்தில் 5 பேர் இருந்தால் ஐந்து கூப்பன் அரசினால் வளங்கப்படும். இந்தக் கூப்பன் அட்டைகளெல்லாம் மஞ்சள் நிறத்தை கொண்டதாக இருக்கும். ஆனால் குடும்பத் தலைவரின் கூப்பன் மட்டும் சற்று வேறுபட்ட நிறத்தை கொண்டதாக இருக்கும்.

ஒவ்வொருவாரமும் இந்த கூப்பனை கொண்டு கூட்டுறவு கடைகளுக்கு சென்றால் அங்கு முகாமையாளரும் அவருடைய உதவியாளரும் இருப்பார்கள். ஒருவாரத்துக்கான புள்ளியை வெட்டி எடுத்துக்கொண்டு அதற்கான பொருட்களை வழங்குவார்கள். ஏனைய பொருட்களை பணம் கொடுத்து பெற்றுக் கொள்ளலாம்.

மண்ணெண்ணெய், கோதுமை மா, அரிசி போன்ற பொருட்களை கூப்பனுக்கு வளங்கியதன் காரணமாக கூப்பன் மா, கூப்பன் அரிசி, கூப்பன் கடை என்றுதான் அந்தக் காலத்தில் அனேகமாக பேசிக் கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காலத்தில் அரசின் திறந்த பொருளாதாரக் கொள்கை மட்டுப்படுத்தப்பட்ட அளவில்தான் காணப்பட்டது. உள் நாட்டு உற்பதிக்கு முதலிடம்

இதன் காரணமாக விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் நெல்லை வெளி வியாபாரிகளுக்கு விற்க முடியாது. கூட்டுறவுக் கடைபகளுக்குத்தான் கொடுக்க வேண்டும்.

கூட்டுறவு சங்க கிளை முகாமையாளர் அவருடைய உதவியாளர்களைக் கொண்டு விவசாயிகளிடம்மிருந்து நெல்லை கொள்வனவு செய்து லொறியில் நெல்லை ஏற்றிக்கொண்டு சவளக்கடை அரிசி ஆலையில் கொடுத்து பணத்தை பெற்றுக்கொண்டு விவசாயிகளக்கு வழங்குவார்.

மேற்படி கூட்டுறவு சங்க கிளைகளுக்கு பொருட்களை வழங்குவதற்காக தாய் பலநோக்குக் கூட்டுறவு சங்கம் (யூனியன்)

மத்தியமுகாம் வைத்தியசாலைக்கு முன்பாக தற்போது தபால் நிலையம் அமைந்து இருக்கும் இடத்தில் அந்தக்காலத்தில் யூனியன் அமைந்திருந்தது. இங்குதான் ஏனைய கிராமங்களில் உள்ள கிளைகளுக்கு பொருட்கள் வினியோகம் செய்யப்பட்டது ஆனால்

1970ம் ஆண்டுககளுக்கு பிறகு அம்பாரை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சோமரெட்ணா அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக இந்த யூனியன் வீரக்கொடைக்கு மாற்றப்பட்டுள்ளது.

1978ம் ஆண்டுகளுக்கு பிறகு சம்மாந்துறை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் M.A. அப்துல் மஜித் அவர்களின் நடவடிக்கையின் பயனாக இந்த யூனியன் சம்மாந்துறைக்கு மாற்றம் செய்யப்பட்டது.

2000ம் ஆண்டு காலப்பகுதியில் சம்மாந்துறையிலிருந்து பிரிந்து நாவிதன்வெளிப் பிரதேசத்தில் தற்போது இந்த யூனியன் இயங்கிக் கொண்டிருப்பது அனைவரும் அறிந்ததே, குடியேற்ற காலம் முதல் 11ம் கிராம மக்களுக்கு உணவழித்து வாழ்வளித்த 11ம் கிராம பலநோக்கு கூட்டுறவு சங்க கிளை கட்டிடமானது தற்போது பொலிவிழந்து காடுகளுக்குள் காட்சியளித்துக் கொண்டுருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 பிரபல்யங்கள்

13ம் கிராமம் 131 ஆம் இலக்க வீட்டைச் சேர்ந்த நடராசா புஸ்பராசா என்பவர் 11ம் கிராம றாணமடு இந்துக் கல்லூரியில் கற்று உயர்தரம் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று அயர்லாந்து, இத்தாலி, சீனா போன்ற நாடுகளுக்குச் சென்று உயர் பட்டப்படிப்பினை மேற்கொண்டு முதுமாணி கலாநிதி பட்டங்களை பெற்று இவர் பிறந்த கிராமத்திற்கும் கல்விகற்ற பாடசாலைக்கும் நாட்டுக்கும் பெருமைசேர்த்தவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஸ்ட விரிவுரையாளராக கடமையாற்றி தற்போது கிழக்கு பல்கலைக்கழகத்தில் சிரேஸ்ட விரிவுரையாளராக கடமையாற்றி கொண்டிருக்கின்றார். 11ம் கிராம றாணமடு இந்துக் கல்லூரி ஈன்றெடுத்த முதலாவது கலாநிதிக் குழந்தை இவரென்பது வரலாற்றுப்பதிவாகின்றது.

(Postdoc ( Academia Sinica, Taiwan & Shanghai Jiao Tong University, China), Phd (SSUP, Italy), LLM. Hons, (NIUG, Ireland), BA. Hons, (UNDP, Sri Lanka, Dip in HRs (center for Study of Human Rights, UNDP)

கிழக்கு பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணிபுரியும் கலாநிதி ந. புஸ்பராசா அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியற் துறையில் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளராவார். இவர் தனது பாடசாலைக் கல்வியை தனது சொந்தக் கிராமத்தில் உள்ள சது / றாணமடு இந்துக்கல்லூரியில் கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டவராவார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது சிறப்பு கலைமாமணிப் பட்டத்தையும், அயர்லாந்தில் உள்ள அயர்லாந்து தேசிய பல்கலைக்கழகத்தில் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் முதுகலைமாணிப் பட்டத்தினையும், இத்தாலியில் உள்ள **Scuola Superiore Sant'Anna** வில் கலாநிதி பட்டத்தினையும் பெற்றுக்கொண்டவர். இதற்கு மேலதிகமாக இவர் இரு கலாநிதிப் பட்டப்படிப்பின் கற்கை நெறிகளை சீனாவின் ஷாங்காய் மற்றும் தைவானில் உள்ள பிரபல்யமான பல்கலைக் கழகங்களில் பூர்த்தி செய்துள்ளார். இவர் சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம், உள்நாட்டு ஆயுத மோதல், நிலைமாறு கால நீதி, பிராந்திய மற்றும் சர்வதேச அரசியல், இலங்கை அரசியலமைப்பு தொடர்பான பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருவதுடன் பல சர்வதேச ஆய்விதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11ம் கிராமம் 14ம் இலக்க வீட்டைச் சேர்ந்த அழகையா என்பவர் ஒரு நாட்டு கூத்து கலைஞர். பல நாட்டு கூத்துகளில் பெண் வேடம் ஏற்று கூத்தாடியிருக்கிறார். மாணவர்கள் முதல் முதியவர்கள் வரை இந்தக் கலையில் ஈடுபடுத்தி பல நாட்டு கூத்துகளை இவருடைய தயாரிப்பில் மேடையேற்றியிருக்கிறார். இவர் ஒரு பிரபலமான அண்ணாவியார். இவரை எல்லோரும் அழகையா அண்ணாவியார் என்றுதான் சொல்வார்கள். றாணமடு இந்து மகாவித்தியாலய மாணவர்களைக் கொண்டு இவரால் தயாரிக்கப்பட்ட நாட்டுக் கூத்து கொழும்பில் இராமக்கிருஸ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கை ரீதியிலான நாட்டுக் கூத்து போட்டியில் பங்கு கொண்டு மூன்றாம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. இவர் அண்மையில் காலமாகிவிட்டார். இவருக்கு பிறகு இந்தக் கலையை யாரும் முன்னெடுத்து சென்றதாக தெரியவில்லை. இவர் கலாபூசண விருது பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

காலஞ்சென்ற 11ம் கிராமம் 34ம் இலக்க வீட்டைச் சேர்ந்த சீனித்தம்பி என்பவர் பிரபலமான விஷவைத்தியர். அந்தக் காலத்தில் நாட்டு வைத்திய முறைமையில் மக்கள் அபார நம்பிக்கை கொண்டவர்களாக காணப்பட்டார்கள். ஒருவருக்கு பாம்பு கடித்து கொண்டு வந்தால் கூட்டி வருபவர் சொல்வார் இவருக்கு பாம்பு கடித்துவிட்டது அல்லது பூச்சி குத்திவிட்டது என்று. எந்த இடத்தில் என்று கேட்பார் இடத்தை சொல்லுவார்கள் அதற்கு பிறகு அவர் எதுவுமே பேசமாட்டார் சிறிது நேரம் அமைதியாக இருப்பார். கூட்டி வந்தவர் சொன்ன வார்த்தையை வைத்து இன்று என்ன கிழமை இருத்த அமாவாசையா அட்டமி நவமியா பூரணையா கூட்டி வந்தவர் சொல்லும் போது அவருடைய கை அவருடைய உடலில் எந்தப் பாகத்தை தொட்டது மூக்கைத் தொட்டாரா காதை தொட்டாரா தலையை சொறிந்தாரா எந்த திசையை பார்த்து நின்று சொன்னார். இதைச் சொல்வது தூதன் குறி என்று இவற்றையெல்லாம் வைத்து கணக்குப் பார்த்து தனக்குள் அறிந்து கொள்வார் என்ன பாம்பு கடித்திருக்கிறது எத்தனை பல்லு பதிந்திருக்கிறது இதை குணமாக்க முடியுமா முடியாதா என்பதையெல்லாம் அவர் தீர்மானித்துவிடுவார். அதற்குப் பிறகு வைத்தியம் செய்ய ஆரம்பிப்பார். சில வேளை அவருடைய கணக்கில் தெரிந்துவிடும் இதை குணமாக்க முடியாது இது மரணக்கடியென்று இதை நேரடியாகச் சொல்லாமல் மறைமுகமாக சொல்லி நீங்கள் இவரை வீட்டுக்கு கொண்டு போங்கள் என்று அனுப்பிவிடுவார். இவ்வாறு சில மரணங்கள் சம்பவித்ததுண்டு அனேகமானவர்களை தனது வீட்டிலே வைத்து நாட்கணக்கில் கிழமைக்கணக்கில் வைத்தியம் செய்து சுகமாக்கி வீட்டுக்கு அனுப்பியிருக்கிறார். இதனால் இவருக்கு இந்தக் கிராமத்தில் மட்டுமல்ல அயல் கிராமங்களிலும் பெரும் மதிப்பும் மரியாதையும் இவருக்கு இருந்தது. இதற்கு உதாரணமாக அவருடைய சொந்த வளவுக்குள் அவருக்கு சிலை வைத்திருப்பது சான்றாகும். இப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய இளைய புதல்வன் கிருஷ்ணமூர்த்தி என்பவர் சோதிடத்தில் ஈடுபாடு கொண்டவராக காணப்படுகின்றார்.

11ம் கிராமம் 56ம் இலக்க வீட்டைச் சோர்ந்த ஜெகதீசன் என்பவர் இந்தக் கிராமத்தில் சுமார் 55 வருடங்களுக்கு முன் படித்த இளைஞனாகவும் நடிகனாகவும் நாடக ஆசிரியனாகவும் சிறந்த ஓவியனாகவும் புத்தொளி நாடகமன்ற ஸ்தாபகராகவும் புளியடிப்பிள்ளையார் ஆலயத்தின் இளைய தலைமுறையின் முதலாவது தலைவராகவும் மகா சிவராத்திரி ஆடி அமாவாசை திருவெம்பாவை பூசை சித்திரகுப்த விரதம் போன்ற உற்சவங்களை இந்த ஆலயத்தில் ஆரம்பித்து வைத்து இந்தக் கிராமத்தில் புதுமையையும் எழுச்சியையும் தோற்றுவித்தவர் 11ம் கிராம படர்கல் பத்தினி கண்ணகியம்மன் ஆலயத்தில் 40 வருடஙகளுக்கு மேலாக பிரதம பூசகராக கடமை ஆற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னமலை 5ம் பிரிவு கராம அபிவிருத்தி சங்கத்தினரால் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலஞ்சென்ற 11ம் கிராமம் 69ம் இலக்க வீட்டைச் சேர்ந்த வேலிப்பிள்ளை என்பவர் சிறந்த சோதிடர் நாவிதன்வெளி கிராமாட்சிமன்ற முன்னாள் உறுப்பினர் கிராமத்தின் அபிவிருத்திக்காக முன்னோடியாக செயல்பட்டவர். இவரை எல்லோரும் வேலிப்பிள்ளை சாத்திரியார் என்றுதான் சொல்லுவார்கள். சித்திரைவருட பிறப்புக் காலத்தில் மருத்து நீர் காய்ச்சி எல்லோருக்கும் வழங்குவார்.

11ம் கிராமம் 11ம் இலக்க வீட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ஆறுமுகம் அவர்கள் நீண்ட காலமாக பலநோக்கு கூட்டுறவு சங்க கிளை முகாமையாளராகவும் நாவிதன்வெளி கிராமாட்சிமன்ற அங்கத்தவராகவும் சமாதான நீதவானாகவும் இறக்கும்வரையும் நாவிதன்வெளி பிரதேச சமாதான சபையின் முக்கிய உறுப்பினராகவும் செயல்பட்டுள்ளார். அன்னமலை 5ம் பிரிவு கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அது மட்டுமன்றி இவரும் 11ம் கிராமம் 18ம் இலக்க வீட்டைச் சேர்ந்த தம்பியப்பா என்பவரும் 11 கிராமம் 156ம் இலக்க வீட்டைச் சேர்ந்த பெரியதம்பி என்பவரும் இந்த மூன்று பேரும் அந்தக் காலத்தில் அரச அனுமதி பெற்ற துப்பாக்கி வைத்திருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

காலம் சென்ற 11ம் கிராமம் 114ம் இலக்க வீட்டை சேர்ந்த வேலாயுதம் மார்க்கண்டு என்பவர் முன்னாள் கிராமசேவகர் சோதிடர் விஷவைத்தியர் ஊழியக்காணி முகாமையாளர் மண்டூர் திருவிழாக்குழு உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11ம்கிராமம் 74ம் இலக்க வீட்டைத் தாய் வீடாகவும் 11ம் கிராமம் 92ம் இலக்க வீட்டை புகுந்த வீடாகவும் கொண்ட காலஞ்சென்ற வம்மியடி கவிஞன் தம்பாப்பிள்ளை கனகரெட்ணம் அவர்களைப் பற்றி சில வரிகள் பலநோக்கு கூட்டுறவு சங்க கிளை முகாமையாளராகவும் மல்வத்தை உடவளவை போன்ற விவசாய பண்ணைகளிலும் ஊழியனாக கடமையாற்றியுள்ளார். இவர் கவிதை எழுதுவதில் ஈடுபாடு கொண்டவர். 1995ம் ஆண்டு காலப்பகுதியில் கிராமியக் கவிதைகள் என்ற தலைப்பில் தினமுரசு பத்திரிகையில் இவருடைய சில கவிதைகள் வெளிவந்ததாக அறியமுடிகிறது. விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் சமாதானம் நிலவிய காலப்பகுதியில் விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்ட கவிதை அரங்கப் போட்டியில் உழைப்பால் உயர்ந்தவன் உழவன் செந்தமிழ் வளரட்டும் என்ற கவிதைகளைப் பாடி முதலாம் இடம் பெற்றுள்ளதாக அறியக் கூடியதாக உள்ளது. 22-06-2018ம் ஆண்டு அன்னமலை 5ம் பிரிவு கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் இவரை பாராட்டி கௌரவித்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பேரையும் புகழையும் விரும்பாது அமைதியாக வாழ்ந்தவர் தம்பாப்பிள்ளை கனகரெட்ணம் அவர்கள். அவருடைய ஆக்கங்களில் வம்பியடிக் கவிஞனின் சில கவிதைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 வம்மியடி கவிஞனின் துளிகளில் சில.....

## மழையே வா

மழையே மழையே பொழிந்திட வா - எங்கும்
வளங்கள் கொழிக்கப் பொழிந்திட வா
நானிலம் சீர்பெறப் பெய்திட வா
ஆனினம் பெருக பேணிட வா

திங்கள் மும்முறை சொரிந்திட வா
தெங்கு பனைகள் ஓங்கிட வா
சமூக உறவுகள் சீர்பெற வா
சமூக வாழ்வைத் தந்திட வா - மழையே மழையே!

சாதி குலத்தைச் சாடிட வா
சகலரும் ஒன்றெனச் சாற்றிட வா
சாந்தியைப் பெற்று மக்கள் சுகம் பெற வா
சமாதானப் பூக்கள் மலர்ந்திட வா

தளர்ந்த நெஞ்சம் தேறிட வா
தண்ணீர்ப் பஞ்சம் தீர்த்திட வா
கண்ணீர்ப் புண்களை ஆற்றிட வா
களிப்பிலே மக்களை ஏற்றி வா

வரண்ட நிலத்தில் வளம் தந்திட வா
வண்ணத்தில் பூக்கள் மலர்ந்திட வா
எண்ணத்தில் பலரும் உயர்ந்திட வா
ஏழைகள் வாழ்வில் இன்பம் பெற்றிட வா

நோயின்றி மக்கள் வாழ்ந்திட வா - நன்றாய்
கோயில் குளங்கள் விளங்கிட வா
பாவம் பழிகளைப் போக்கிட வா
பக்த இதயங்கள் வாழ்ந்திட வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறையோனே காத்தருள்வாய்

எனதாய் அமைந்த காணியில்
இனிதாய்ச் செய்தேன் இல்லமொன்றை
பெரிதாய் இல்லை எனினும்
பரவாயில்லை என் வீடு

அமைந்திருக்கும் சின்னவத்தையில்
அழகிய செந்நெல் கிராமம் கல்வட்டை
சீராய் அமைந்த சிறப்புமிகு சூழல் - அங்கே
பேராய்ச் செய்தேன் புது மனை ஒன்றை

அவ்வூரில் நல்லோராய் சிலரை
அருமையாய் நான் நேசித்த சூழலில்
தம்பி என நான் அழைக்கும்
நம்பிக்கைக்குரியோன்

இரவோடு இரவாய் எக்காரணமுமின்றி
தீக்கிரையாக்கினான் சிறிதான என்மனையை
இன்னா செய்தார்க்கு இரங்குதல் நன்றாம்
அடியேனும் நின்றேன் அவ்வழியில்

சிறுபிள்ளை விளையாட்டாய்
செய்து விட்டான் பித்தன்
மன்னிக்க வேண்டுகிறேன் இறைவா - அவனை
மறையோனே காத்தருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் உலகம்

1. தமிழ் எங்கள் தாய்
அது எமது உயிர்
தமிழ் எங்கள் உதிரம்
அது எமது உணர்வு

2. தமிழ் எங்கள் இதயம்
அது எமது இன்பம்
தமிழ் எங்கள் பலம்
அது எமது சக்தி

3. தமிழ் எங்கள் சீர்மை
அது எமது திறமை
தமிழ் எங்கள் பெருமை
அது எமது புதமை

4. தமிழ் எங்கள் சேமம்
அது எமது பாசம்
தமிழ் எங்கள் கோசம்
அது எமது தேசம்

5. தமிழ் எங்கள் ஆட்சி
அது எமது அதிகாரம்
தமிழ் எங்கள் மொழி
அது எமது வழி

6. தமிழ் எங்கள் ஐக்கியம்
அது எமது யோக்கியம்
தமிழ் எங்கள் பாக்கியம்
அது எமது சத்தியம்

7. தமிழ் எங்கள் தேர்ச்சி
அது எமது சக்தி
தமிழ் எங்கள் சக்தி
அது எமது வித்தி

8. தமிழ் எங்கள் சொத்து
அது எமது முத்து
தமிழ் எங்கள் வித்து
அது எமது சித்து

9. தமிழ் எங்கள் மயம்
அது எமது இமயம்
தமிழ் எங்கள் வயம்
அது எமது ஐயம்

10. தமிழ் எங்கள் தேக்கம்
அது எமது ஊக்கம்
தமிழ் எங்கள் தங்கம்
அது எமது சிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. தமிழ் எங்கள் இயல்
அது எமது இசை
தமிழ் எங்கள் இறை
அது எமது இயற்கை

12. தமிழ் எங்கள் கலை
அது எமது கலாசாரம்
தமிழ் எங்கள் ஆதி
அது எமது சோதி

13. தமிழ் எங்கள் பலம்
அது எமது புலம்
தமிழ் எங்கள் பான்மை
அது எமது மேன்மை

14. தமிழ் எங்கள் வாழ்வு
அது எமது வளம்
தமிழ் எங்கள் அமுதம்
அது எமது விவேகம்

15. தமிழ் எங்கள் இலக்கியம்
அது எமது இலக்கணம்
தமிழ் எங்கள் வேதம்
அது எமது போதம்

16. தமிழ் எங்கள் சிங்காரம்
அது எமது செந்தேன்
தமிழ் எங்கள் பாரதமாதா
அது எமது வேதம்

17. தமிழ் எங்கள் வையகம்
அது எமது வாகனம்
தமிழ் எங்கள் சமுத்திரம்
அது எமது தோத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை

முக்கனிகளில் சுவை மிகுந்த
முதற்கனியாய் விளங்கும்
மாங்கனி அவ்வகையில் உலகில் முதலிடம்
அழகு வரிசையில் நம் நாடு

மாங்காய் வடிவில் இதன் வெளித்தோற்றம்
உள்ளக அமைப்பு உலர் சிறப்பு
நிகரற்ற நீர் நில வளங்கள் மலைகளுடன்
மலை வளங்களும் கொண்ட முதல் நாடு நம் இலங்கை

நெற்குவித்து பாய்ந்து வரும் நெடுந்தூரம்
மாநதியாய் மகாவலிகங்கை - உடன்
செந்தமிழும் சிங்களமும்
சேர்ந்து வாழும் சுந்தர நாடு ஸ்ரீலங்கா

## கார்த்திகைத் திங்கள்

வந்தது கார்த்திகைத் திங்கள் - இன்று
வெந்தது வீட்டில் பொங்கல்
உரலின் ஓசைகள் ஊரில்
அதிரும் திசைகள் பலவும்

கூடியிருந்து அடுக்களையில் - பெண்டீர்
கொழுக்கட்டை மோதகம் கூழுடனே
உண்ணும் உணவெல்லாம் தேடி
ஒன்றாய்ப் படையல் செய்திடுவார்

நாலாப்புறமும் ஒளிவெள்ளம்
நன்றாய்த் தீபம் ஏற்றிடவே
மாலையில் வீடுகள் தோறும்
மணக்கும் அவியல் வாசனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழை வளர்ப்போம்

வாழை வளர்ப்பு வளம் தரும்
வாழ்வில் எமக்குச் சுகம்
தரும்
சிரமமும் செலவும்
சொற்பமாய்க் கொண்டு
செய்தொழில் யாவினும்
சிறந்ததாம் இத்தொழில்

எனவே! இனிதாம் கனிதரும்
நல்லின வாழைகளை
நாடிச் சேர்த்து நாமெடுத்து
இன்றே நடுகை செய்வோம்
ஏற்ற நிலம் திருத்தி

தினமும் ஊக்கமுடன்
சிறந்த பராமரிப்பில்
உரமிட்டு நன்றாய்
உழைப்புத் திறமையுடன்
எந்நாளும் காத்திடுவோம்
எங்கள் கண்ணான
வாழைகளை

பேணுவோம் நன்முறைகள்
பயன்பெறு நோக்குடன்
தளராது செயல்பட்டு
தொடராகக் குலைபெற
பலமுறை நிலம்சாடி
பாத்திகளை சீராக்கி
தினம் பணி செய்திடுவாம்
தீங்கதலித் தோட்டத்தில்

தரமான குலைபெற
தடையதகும் கன்றுகளை
நின்று வளராதபடி
நன்றாய் களைந்திடுவோம்
ஊக்கமுடன் பாத்திகளில்
உருவாகும் களைகளகற்றி
மூவரன் தினங்களில்
முறைப்படி நீர்விட்டு
பொறுப்புடன் காத்திடுவோம்
பணப்பயிராம் வாழைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி

கலைகளில் ஒன்றாய்
விளங்கும்
கல்வியின் பெருமையை
சிலைகளாய்வடித்து -
கல்லில்
சிகரம் போல் குவித்தாலும்
கடலிலும் உயர்ந்து
கிடப்பதாய்த் தோன்றும்
கல்வியின் விளக்கம்
சொல்லுதற்கு அரிதாம்

அழகில் மேன்மையும்
அழியாத் தன்மையும்
கடவுள் கொடுத்த மகிமை
கல்விக்கு உண்டாம்

உயர்ந்த எண்ணங்களை
உள்ளத்தில்
உருவாக்கித் தந்து
எண்ணற்ற செயல்திறனை
இது நல்கும் ஜெகத்திற்கு

மனிதரின் கருத்தை
மிகைப்படுத்தி வளர்க்கும்
கல்வி
உயர்ந்த பண்புடன்
ஒழுக்க நெறிகளை
உடன் தந்து வாழ்வை
ஒளி பெறச் செய்யும்

மானிட வாழ்விற்கு
முதலிடம் கொடுத்து
வழிகாட்டும் ஒளி விளக்காய்
கரைகாட்டும் கலங்கரை
விளக்கமே கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்பற்றுடைய நல்ல விவசாயி


விஷேச செய்தி ஒன்று
விவசாயிகளுக்கென்று
கூறவருவது குறிப்பாக
கட்டுப்பாட்டின்றி
கால்நடைவளர்ப்போர்க்கு

நெல்லும் பிறவும் நன்றாய் வளர்ந்து
நல்விளைவுகள் தரும் களனிகள் நம்மிடத்தில்
இங்கே காடல்ல எல்லோரும்
கால்நடையில் ஏற்ற கவனம் கொண்டு

நிழலிலிருந்து கால்நடையை
பாதுகாத்துப் பக்குவமாய்ப்
பட்டிவளர்த்து பாலுடன் சோறும்
பாருக்கு தருபவன்
நாட்டுப்பற்றுடைய நல்ல விவசாயி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ந்தவன் உழவனே!



உழவர் வாழும் எம் நாடு - உலகில்
ஒன்றும் புகழ் நாடு
இந்துக் கடலின் முத்துவாய்
விளங்கிடும் எங்கள் திருநாடு

உழவர் [illegible]
உடையது இ[illegible]
பெய்திடும் மழைநீர் [illegible]
பெறுவதும் [illegible]

ஒளியும் மழையும் உள்ளதமே - அன்ன
[illegible]
யாவும் தருவது ஆதவனே
யாவரும் அவனைப் போற்றிடுவோம்.

ஒவ்வோர் ஆண்டும் தைத் திங்கள்
ஓடி வருவதே தைப்பொங்கல்
பாடிப் பணிந்துபகலவனை
வள்ளுவன் கூறியவார்த்தையது

பண்டைப் புரட்சியில் உலகையாளும்
பெருமைக்குரியோர் உழவர்களே
பணிந்துபோற்றப்படுபவரும்
பாரில் உழவர் வர்க்கமேதான்

உழுதலின்றிஉணவில்லை
தவிரும் வாழ்வுசாவாகும்
பொருளும் புகழும் நாட்டிற்கு
பெற்றுக்கொடுப்பார் உழவர்களே
உயிர்ப் பசிக்கு உணவுதந்து
உயர்ந்தசெயலைபுரிந்துவரும்
உழவர் வாழ்வுசுபிட்சம் பெற
உள்ளன்போடு [illegible]
பூமிக்குஎன்றும் [illegible]

பொறுமைகாக்கும் விவசாயி
உழுதுநின்றும் உயிர் பேணும்
உழவர் அவரே உயர்ந்தவரே
உழவன் அவனே உயர்ந்தவனே.

ஆக்கம் :- த. கனகரெத்தினம் (கவிஞர்)
11 ஆம் கிராமம்
மத்தியமுகாம் - 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தைப்பொங்கல்

20-05-[illegible]

இவ்வொரு வருடமும் உழைத்துயர் நாம்
ஆதவன் மீது காதல் கொண்டு
ஆண்டு முழுதும் முற்றிலும்
அவன் செயல் போற்றி
நன்றிகடனாய் - அவனுக்கு
நாங்கள் எடுப்பதே
தைப்பொங்கல்

கவலைகள் அகன்றிட
கற்பனையில் பொங்கல் நிறைக்க
இன்று வந்தது நாம்
எதிர் பார்த்த தைப்பொங்கல்

பாடுபட்டோர் ஆடிடவே
பாவலர்கள் துயில் விலக
பக்திபூர்வமதாய்ப் பாலைக் கொதிக்க வைக்க
திறை வாசப் பணிகளை நிறைவேற்றிட உதவ
நாடு மலர் பறித்து நிறைந்திடுவார் இல்லத்தில்

இல்லத்தில் ஒளிவிளக்கேற்ற எங்களின்
கடமைகள் உள்ளவராய்
கதிர் நடத்துக் கொண்டு
தீர்வென்று இல்லம் நேர்த்தியாய் மெழுகி

முற்றம் முடைத்து முற்றம் பெருக்கி
வாயிற் கோலம் மாதர் வரைந்திட
புத்தரிசியுடன் புதுப் பானையில் மஞ்சள் இஞ்சிக்கொத்து
வைகையாக் கொண்டு வைத்திடுவார் அழகாக
அருமையுடன் கிழக்கினில்
பரிதியும் வந்து விட்டவன்
விரைவாகப் பொங்கலை நாம்
வேகமாய்ப் போம் விட்டுவைத்து
அத்துடன் பாலிக்கவே அம்மாவும் [illegible]
அப்பாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி அழியாச் செல்வம்.

5-10-17

ஆம் கல்வி அழியாச் செல்வமென்பர். அது திருடர்களாலோ அல்லது வேறு எவராலோ அழிக்கப்படக்கூடியதல்ல. அது செல்லுமிடமெல்லாம் பெருகி வளர்வது. வெள்ளத்தால் செல்லாது வெந்தணலால் வேகாது கள்வராலும் கொள்ளத்தான் முடியாது. கொடுக்கக் கொடுக்க கூடுமேயன்றி குறைவுபடாதது கல்வி என அதன் அழியாத்தன்மையையும் சிறப்பையும் சிறப்பித்து பாடல் ஒன்று மிக அழகாகக் கூறி நிற்கின்றது.

ஒருவர்க்குக் கல்வி கிடைத்தால் அது தொடர்ந்தும் குறையாது வளர்ந்து கொண்டே வரும். ஒருவருக்கு ஒரு பிறவியிலே தான் கற்ற கல்வியானது எழு பிறப்பிலும் அழியாது சென்று உதவுதலை உடையது என்று உலகப் பொதுமறை தந்த [illegible] தெய்வப்புலவர் திருவள்ளுவர் கல்வியின் அழியாச் சிறப்பை தான் ஆக்கி உவமித்து அமைத்த திருக்குறளிலே மிக அழகாகவும் ஆழமாகவும் எடுத்துக் கூறி அவரை அவர் [illegible] இலக்கணம் வகுத்து மேலும், ஒருவனுக்கு அழியாத உயர் செல்வம் என்றால் அது கல்வியேயாகும் [illegible] மாட்டாது என்பதைத் தெளிவாக விளக்கியுள்ளார். கல்வி, ஒருவர்க்கு மாடல்ல மற்றையவை எனவும் சிறப்பாக வலியுறுத்தியிருக்கின்றார்.

செல்வத்திற்கெல்லாம் தலைச் செல்வம் என்றார் திருவள்ளுவப் பெருமான். கல்வி அழியாச் செல்வம் மட்டுமல்ல அது பெருமைக்கும் சிறப்புக்கும் மற்றும் புகழுக்கும் உறைவிடமாய் விளங்குவதுடன் இன்னும் வேறு பல ஆக்கச் செல்வங்களுக்கும் காரணமாய் விளங்குகின்றது அழியாதது.

இவற்றையும் வேறொரு பார்வையில் பார்ப்போம். அதாவது செல்வச் செழிப்புடைய [illegible] கல்விகளை முறையாகக் கற்றுணர்ந்து விற்பன்னர்களாகவும் அவ்வாறு அறிந்து தெளிந்த மகான்களாக ஞானிகளாக [illegible] இன்றைய வாழ்வு [illegible] அறிவு [illegible] இவ்விதம் [illegible] அவர்கள் சாதனையாளர்களாக விளங்குவது –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NO. Date

[illegible]

Bakharath



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NO. Date:

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NO. Date

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 ஆக்கத்துக்கு உதவியவை

* எனது தந்தையார் மூலம் அறிந்து கொண்டவைகள்

* 11ம் கிராமத்தைச் சேர்ந்தர்களின் நேர்காணல்கள்

* தம்பாப்பிள்ளை கனகரெட்ணம் அவர்களின் 31ம் நாள் நினைவுமலர்

* அருட் செல்வநாயகம் அவர்களின் "சீர்பாதகுல வரலாற்று" நூல்

* லோகிதாசன் அவர்களின் "சீர்பாதர் சரித்திரம்" எனும் நூல்

* எனது வயது அனுபவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



" எண்ணித்துணிக கருமம் " என்பதற்கேற்ப தாம் எடுத்த முயற்சியில் சற்றும் மனந்தளராமல் வெற்றி பெற்றிருக்கிறார் இந்நூலின் ஆசிரியர் தம்பிராசா கணேசமூர்த்தி அவர்கள்.

சமூகசேவையாளராக விளங்கியதுமட்டுமன்றி, ஒரு சமயநற்சிந்தனையாளராக, ஓர் இரங்கலுரையாளராக இவர் ஆற்றிய சொற்பொழிவுகளை நாங்கள் கேட்டிருக்கின்றோம். ஆனால் இந்த ஆய்வு நூலின் வாயிலாக தம்மையும் ஓர் எழுத்தாளராக நம் மத்தியிலே வெளிச்சமிட்டிருக்கின்றார் இவரெனில் அது ஏற்புடையதே.

ஓர் இனத்தின் வாழ்வியலும், அதன் கலை, கலாசார பண்பாடுகளும் அவ்வினத்தின் பூர்வீகத்தை நிலை நிறுத்திக்காட்டும். இவற்றை இழந்த எத்தனையோ இனங்கள் இவ்வுலகிலே தம்முடைய அடையாளங்களைத் தொலைத்து வாழ்வொழிந்த சமூகங்களாக அழிந்து போன வரலாறுகளும் எம்மத்தியில் காணப்படுகின்றன.

இவற்றையெல்லாம் உணர்ந்துதான் போலும் தாம் வாழ்ந்த கிராமத்தினை முன்னிலைப்படுத்தி பல வருடங்களாக சிரமப்பட்டுத்தேடிய தமது அரிய தேடல்களையெல்லாம் எதிர்காலச்சந்ததியினரும் தட்டுத்தடுமாறாமல்தெட்டத்தெளிவாக அறிந்து கொள்ளும் வகையில் ஆவணப்படுத்தி இந்நூலை வெளியிட்டுவைக்கின்றார்.

இது இவரது கன்னிமுயற்சி. இதிலே இவர் வெற்றி கண்டு, நீருழி காலம் வாழ்ந்து, இன்னும்பல நூல்களை நமக்கு ஆக்கித்தரவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பாவாணர் அக்கரைப்பாக்கியன்.

9 786249 977105

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Golden Printers. Kalmunai. 067 222 3939